




COMICS PDF TIMES
HSC

# சரஸ்வதி அமுதன்

COMICSPDFTIMES
HSC

எழுதிய

NOT FOR SALE
FAN MADE ONLY



# திரையழகியின் மர்மம்!

இரவு பன்னிரண்டு மணி.

தமிழகத்து 'ஹாலிவுட்' என்று கருதப்படும் சென்னை கோடம்பாக்கத்திலே ஒரு பெரிய படப்பிடிப்பு நிலையமான 'மோஹினி'யை விட்டு வேகமாகக் கிளம்பியது ஒரு புத்தம் புதிய கார்! வாங்கி ஒரு மாதம்கூட ஆகவில்லை! அந்தக் காருக்குள்ளே தங்கச் சிலையைப்போல அமர்ந்திருந்தாள் ஒரு மங்கை. ஓர் அழகான வாலிபன் காரை ஓட்டிக்கொண்டிருந்தான்.

அந்த மங்கைக்கு 25 வயது இருக்கலாம். ஆனால் பதினெட்டே வயதுப் பாவையைப் போலத் தோற்றத்தோடு இருந்தாள்.

அந்த வாலிபனுக்கு முப்பது வயதுக்குள் இருக்கும். நல்ல கட்டான உடலும் களையான முகமும் இருந்தன அவனுக்கு.

காரில் அமர்ந்து கொண்டிருந்த மங்கையின் பெயர் திலோத்தமை! சினிமா வானிலே அவள் செல்லப் பெயர் திலோத்!

அவன் பெயர் கலையழகன்! அவனை மற்றவர்கள் கலையழகன் என்று முழுமையாக அழைக்காமல் பின் பகுதியை நறுக்கிச் சுருக்கி நாசூக்காக 'கலை!' என்று அழைப்பார்கள்.

கார் கோடம்பாக்கம் ஹை ரோடைக் கடந்து ஜெமினி ஸ்டூடியோவிற்கு எதிரேயுள்ள கதீட்ரல் வழியாகப் போய்க் கொண்டிருந்தது.

காருக்குள் திலோத் மிகவும் சோர்வாகப் படுத்துக் கொண்டிருந்தாள். அதைத் திரும்பிப் பார்த்துத் தெரிந்து கொண்டான் கலை. காரின் வேகத்தைக் குறைக்காமலேயே சிகரெட் ஒன்றை எடுத்து லாவகமாகக் கொளுத்திப் புகையை வெளியே விட்டான்.

அன்றைய படப்பிடிப்பால் நிறைய அலைச்சலும் அயர்வும் ஏற்பட்டது திலோத்தமைக்கு! ஆகவே அவள் இலேசாக தூங்கிக் கொண்டிருந்தாள்.

கலை தன் 'ரிஸ்ட் வாட்ச்'சை நோக்கினான்! மணி 12-50 என்று அது மௌனமாகக் கூறியது. நீண்ட பெருமூச்சு

ஒன்று விட்டு விட்டு சிகரெட் துண்டையும் விட்டெறிந்தான் எரிப்போடு. கார் 'உட்லண்ட்ஸ்' ஓட்டலைத் தாண்டிய போது காரின் பின்சீட்டில் திரும்பிப் பார்த்தான். அப்போது திலோத்தமை கண்களை மூடிக்கொண்டு அமைதியாக சாய்ந்திருந்தாள்.

ஓட்டிக்கொண்டே இருந்த காரை, திடீரென்று பிரேக்கை அழுத்தி நிறுத்தினான் கலை. கார் இரைந்துகொண்டே நின்றது, ஒரு குலுக்கு குலுக்கிக்கொண்டு.

திடுக்கிட்டு எழுந்த திலோத்தமை காருக்கு முன்னே கவனித்தாள்.

நடுரோடிலே இரண்டு நாய்கள்—

"ஏன்? ஓரமாக ஒதுக்கி ஓட்டியிருக்கக் கூடாது?" என்றாள் வெறுப்பாக.

"ஊம்...!" என்ற பெருமூச்சோடு காரைக் கிளப்பினான் கலையமுதன்.

"வர வர உன் போக்கே எனக்கு பிடிக்கவில்லை. கலை! நீ என்ன தான் நினைத்துக்கொண்டு இப்படியெல்லாம் செய்கிறாய் என்று எண்ணி எண்ணிப் பார்க்கிறேன். ஒன்றும் தோன்றவில்லை எனக்கு! சரி சரி, உன்னோடு எனக்கு என்ன வீண் பேச்சு? காரைச் சரியாகப் பார்த்து ஓட்டு" என்றாள் திலோத்தமை வெறுப்பாக.

"பார்த்து ஓட்டாமலா கார் பாதையில் செல்கிறது? பார்க்காது ஓட்டினால் எப்போவாவது கார் மோதிக்கொள்ளப் பார்க்காதா?" என்றான் கலையமுதன் எரிப்பாக.

"அப்பப்பா! என்ன சம்பாதித்து என்ன பயன்? கொஞ்சமாவது நிம்மதி-சந்தோஷம் இருக்க வேண்டாமா? என் ஜென்மத்துக்கு ஒரு இழவும் கிடையாதே! இன்றைக்கு அந்தப் பாழும் டைரக்டர் படாதபாடு படுத்தி விட்டார் என்னை! படத்துக்கு உச்சமான கட்டமாம்! 'கிளைமாக்ஸ்' ஸாம்! என்ன கர்மமோ? நடித்துத் தொலைத்தேன் அக்கஷ்டம் யாருக்குத் தெரிகிறது?" என்று முணுமுணுத்தாள் திலோத்தமை.

அவள் முணுமுணுத்தது கலையமுதன் காதுகளிலும் தெளிவாக விழுந்தது.

"கஷ்டம் இல்லாமல் எந்தக் காரியம் நடக்கும்? கஷ்டப் பட்டால் தானே காசு கிடைக்கும்! சும்மா வந்து விழுமா காசும்?" என்று அவனும் முணுமுணுத்தான்.

அதற்குள் கார், அடையாறு 'திரை உலகம்' என்ற பங்களாவுக்குள் நுழைந்தது.

பெருமூச்சு விட்டுக்கொண்டு கார் நின்றது. திலோத்தமையும் பெருமூச்சு விட்டுக் கொண்டே காரை விட்டு இறங்கினாள். பெருமூச்சு விட்டுக் கொண்டே காரை ஷெட்டுக்குள் கொண்டு போனான் கலையமுதன்.

'இந்த திலோத்தமை ரொம்பவும் கெட்டு விட்டாள், என்னை மிகவும் அற்பமாக எண்ணி வருகிறாள்! இவளுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும்!' என்று உள்ளுக்குள் கருவிக் கொண்டான் அவன்.

'இந்தக் கலையமுதன் ரொம்பவும் கர்வியாகி விட்டான். இவனுடைய நடவடிக்கைகளில் இப்போதெல்லாம் அலட்சியம் தலை காட்டுகிறது! பிடிக்காதவன் என்னை விட்டுப் போய் விடலாம். பிடிவாதமாக இங்கேயே இருக்கவேண்டும் என்று யார் அவனை வற்புறுத்துகிறார்கள்? இவனுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும்!' என்று தனக்குள் கருவிக் கொண்டாள் திலோத்தமை.

நேராக மாடிக்குச் சென்று தன் அறைக்குள் நுழைந்தாள். 'மேக்கப்'பைக் கலைக்காமலே படுக்கையில் சென்று விழுந்தாள். அயர்வு அதிகமாக இருந்தது. அவள் உறக்கத்தை விரும்பினாள். ஆனால் உறக்கம் அவளை விரும்பவில்லை.

அவள் படுக்கையை விட்டு எழுந்து டிரஸ்ஸிங் மிர்ரர் முன்பு போய் நின்றாள்! அவள் உருவம் அந்த 'ஜீரோ வாட்' வெளிச்சத்திலும் கண்ணாடியில் தெளிவாகத் தெரிந்தது. சில கணங்கள் தன் உருவத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு, புன்முறுவலோடு மீண்டும் படுக்கையை அடைந்தாள். படுக்கையில் அமர்ந்து சிறிது நேரம் ஏதேதோ சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது—

கீழே ஏதோ சப்தம் கேட்டது. எழுந்து சென்று மாடிப் படிக்கட்டுக்கருகே நின்று கவனித்தாள்.

கலையமுதன் வேலைக்காரியை என்னவோ கேட்டுக் கொண்டிருந்தான். அவள் பயந்து பதறிக்கொண்டு பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். வேலைக்காரி இருந்த நிலைமையையும், கலையமுதன் இருந்த நிலைமையையும் ஒரு கணத்தில் எடை போட்டன அவள் கண்கள். அவள் மனத்திலே எத்தனை எத்தனையோ சிந்தனைகளை எழுப்பியது ஒரு கணத்தில்.

'சேச்சே! வர வர இவனுடைய அட்டகாசம் அத்துமீறிப் போகிறதே? தனக்கே எல்லாம் சொந்தம்போல் தலைகனத்துத் திரிகிறான். முதலில் இதற்கு ஒரு வழி செய்ய

COMICS PDF TIMES

வேண்டும்' என்று எண்ணிக் கொண்டே தன் அறைக்குத் திரும்பினான்.

என்ன சேதி என்று விசாரிக்கலாமா என்றோர் எண்ணமும் அவனுக்கு எழுந்தது! ஆனால் அதே நேரத்தில் இந்த வேளையில் போய்க் கேட்டால் ரசாபாசமாகி விடும் என்ற ஓர் எண்ணம் எழுந்து முன் எழுந்த எண்ணத்தை அமுக்கி விட்டது.

அவனுக்கு என்னென்ன ஆத்திரம்தான் பீறிட்டுக் கொண்டு வந்தது. மீண்டும் கட்டிலின் மீது தொப்பென்று விழுந்து கண்களை மூடினான். ஆனால் அவன் சிந்தனை ஓடிக் கொண்டே இருந்தது.

புத்தி தெரிந்த சின்னஞ்சிறு வயது முதல் அந்த நாள் வரை தன் வாழ்க்கையிலே நடந்த சிறு சிறு நிகழ்ச்சிகளையும் கூட அவன் தனது மனமாகிய திரையிலே சினிமா காட்சி போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

## 2

அவனுடைய பெற்றோர்கள் அவளைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வளர்த்து வந்தனர். பெண்ணாய் பிறந்த பேரழகுப் பிம்பம் என்று எண்ணி மகிழ்ச்சியோடு அவளைக் கவலை அண்டாது வளர்த்தனர்

உயர்நிலைப் பள்ளியிலே ஒழுங்காகப் படித்து ஒவ்வோர் ஆண்டும் தேர்ச்சி பெற்றுப் பத்தாவது வகுப்பில் அவன் படித்துக் கொண்டு இருந்தபோது ஒரு பெரிய புயலே உருவாகி விட்டது அவனது குடும்பத்திலே. ஒரே மாதத்தில் தந்தையும் தாயும் ஒருவரையடுத்து ஒருவராக இறந்து போயினர், 'காலரா'வினால்.

சரஸ்வதி தன்னந் தனிமையாக, அண்ணனே துணை என விடப்பட்டாள். சொந்தக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டு இருந்தவர்களுள் பொன்னுரங்கம் என்பவரும் ஒருவர். அவர் சரஸ்வதியை ஆதரித்து வந்தார். கொஞ்ச நாட்களுக்குள் சரஸ்வதி அவருக்குப் பாரமாகத் தோன்ற ஆரம்பித்து விட்டாள். மேலும் அவள் எஸ். எஸ். எல். சி. படித்து விட்டிருந்தாள்.

மேலும் படிக்க வைப்பதற்கு அவரிடம் பசையில்லை. என்பதோடு அப்போது அவள் பருவமடைந்து நான்கு ஆண்டுகள் ஆகியிருந்தன! ஆகவே யாருக்காவது சரி,

வதியை மணமுடித்துக் கொடுத்து தன் பாரத்தைக் குறைத்துக் கொள்ள எண்ணினார்.

எத்தனையோ வரன்களைப் பார்த்தார். எந்தப் பிள்ளையும் அநாதையான—சொத்து என்று ஏதும் இல்லாத—சரஸ்வதியை மணந்துகொள்ள முன்வரவில்லை. மிகவும் சஞ்சலமும், சங்கடமும் அடைந்தார் பொன்னுரங்கம்.

பெருத்த முயற்சிக்குப் பிறகு அவர் ஒரு வரனைக் கண்டு பிடித்து விட்டார். அவர் இரண்டு மனைவிகளைக் கட்டி ஆண்டவர். மூன்றாவதாகச் சரஸ்வதியை அடைய ஆசை கொண்டார். தனக்குப் பாரமாக இருந்தவளை அவன் தலையில் கட்டிவிட பொன்னுரங்கமும் கருத்துக் கொண்டு விட்டார்.

விஷயத்தை அறிந்த சரஸ்வதி, 'வேண்டாம் அந்த வரன்' என்று விம்மி வேதனைப் பட்டதெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகி விடவே, ஒரே வழி, ஓடி விடுவது தான் என்ற முடிவுக்கு வந்துவிட்டாள். ஊரும், உலகும் உறங்கிக் கிடந்த நேரத்திலே யாருமறியாத படி ஓடிச் சென்று விட்டாள் வீட்டை விட்டு!

இரண்டு ஆண்டுகள் எவ்வளவோ இன்னல்கள்! ஒரு சாண் வயிறு என்கிறார்கள்! அதை நிரப்பிக் கொள்வதில் வாழ்க்கையிலே எவ்வளவோ ஓயாத போராட்டங்கள்! அப்பப்பா! எப்படியோ அந்த நிலைக்கு உயர்ந்து விட்டாள்! கூடவே அரித்துத் தின்னும் பசியோடும், உயிர் வாழ ஒரு வழியும் தோன்றவில்லையே என்ற உள்ள வேதனையோடும் தெருவழியே திரிந்து கிடந்த நாட்களிலே அவளுக்குத் தெரிந்தவர்களோ அவள் நிலையை அறிந்தவர்களோ யாரும் முன்வந்து ஆதரவு காட்டவில்லை!

ஆனால் உலகத்திலிருந்தே ஒழிந்து விட்டவள் போல இரு ஆண்டுகள் உலவும் பிணமாகச் செத்துப் பிழைத்து எப்படியோ இந்த நிலைக்கு உயர்ந்து விட்ட பிறகோ, எத்தனை எத்தனை பேர் நித்தம் நித்தம் வந்து கொண்டிருக்கின்றனர். மெத்தப் பரிவும் பாசமும் உடையவர்கள் போல்!

'யாவரையும் விட இந்தக் கலியமுதன்—என்னைக் கூட மறந்து விட்டு எங்கேயோ சென்று கிடந்தவன், இன்று ஓட்டாகவும் வந்து என்னிடம் ஒட்டிக் கொண்டு விட்டான். ஒழிந்து போகிறான் பாவம் என்று பார்த்தால் அவன் நடவடிக்கை வரவர மோசமாகிக்கொண்டு வருகிறது! தான் தராத உரிமையை அவனே தன்னிடம் தேடிக் கொள்ளப் பார்க்கிறான்! நான் அந்த அளவுக்கு விட்டு விடுவேனா?

COMICS PDF TIMES

இவ்வாறு தொடர்ந்த சிந்தனை அவளை எங்கெங்கோ இழுத்துச் சென்றது!

தெருவிலே பாட்டுப் பாடி பிச்சை எடுத்தது!

ஓடும் ரயிலிலே பயணித்தும் பாட்டுப் பாடியும் காசு தேடியது!

ரயிலிலே ஒரு நாள் நாடக முதலாளி ஒருவரைக் கண்டது?

நாடக மேடையிலே நல்ல பெயர் எடுத்தது!

நாடக நடிகர்கள் பலர் தன் பின்னே திரிந்தது!

சினிமா டைரக்டர் ஒருவர் தான் நடித்த நாடகத்துக்குத் தலைமை வகித்தது.

திரை உலக அழைப்பு?

நடித்த படம் பெரும் வெற்றி அடைந்தது!

புகழேணியின் உச்சியிலே பூரிப்போடு நின்றது!

காட்சிகளின் கோர்வை திரைப்படத்தில் காண்பது போல் எல்லா விவரங்களும் அவள் மனத்திரையிலே தொடர்ந்து காட்சி அளித்தன!

சிந்தித்துக் கொண்டிருந்தவள் தன்னையுமறியாமல் ஆழ்ந்த உறக்கத்திற்கு அடிமையாகி விட்டாள்!

அவள் ஆழ்ந்த உறக்கத்திலே இருந்த அதே வேளையிலே உறக்கமின்றித் தோட்டத்திலே உலவிக் கொண்டிருந்தான் கலையமுதன். அவனது கடந்த கால காட்சிகள் அவன் மனக் கண் முன்னே தோன்றிக் கொண்டிருந்தன?

நான் எவ்வளவு உயிருக்குயிராக எண்ணுகிறேன். ஆனால் திலோத்தமைக்கு நல்லது கெட்டது தெரியவில்லை! என்னைப் பார்க்கும் போதே வெறுப்போடு முகத்தைச் சுளித்துக் கொள்கிறாள், பாவம்! என்னுடைய துணையை நல்ல துணையாக ஏற்றுக் கொள்ள அவளுக்கு விருப்பமில்லை இந்தப் பொல்லாத சினிமா உலகம் அவளை அலைக்கழித்து விடாதபடி அணை போட்டுத் தடுக்க ஆசை கொண்டு திரியும் என்னை அவள் அடியோடு வெறுப்பது போல் தோன்றுகிறது! காலம் தான் அவள் கண்களைத் திறக்க வேண்டும் ஒரு சினிமா நடிகைக்குக் காரோட்டிக் கொண்டு இருக்கும் என்னைப் பற்றி உலகம் என்ன நினைக்கும் என்பது எனக்குத் தெரியும்! இருந்தாலும் திலோத்தமையை விட்டுப் போக எனக்கு இஷ்டமில்லை.

இவ்வாறு தனக்குள் எண்ணிக் கொண்டு திரிந்து கொண்டிருந்தான் தோட்டத்திலே.

அப்போது —

ஆலயமணி அடித்தது!

"மணி மூன்றாகி விட்டதா?" என்றுத் தன்னைத்தானே கேட்டுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

## 3

மணி எட்டடித்ததற்கும் திலோத்தமா கண்களைத் திறந்ததற்கும் சரியாக இருந்தது! கொட்டாவியை விட்டுக் கொண்டே படுக்கையை விட்டெழுந்தாள். சிறிது நேரத்தில் அவள் இரவு உறக்கத்தில் கண்ட கெட்ட கனவுகளையெல்லாம் நினைவு கூர்ந்து பார்த்தாள். அவள் உடல் சிலிர்த்துக் கொண்டது! பிறகு சிறிது நேரம் மௌனமாக இருந்தவள் எதையோ பார்த்துத் திடீரென்று ஏதோ நினைவு வந்தவள் போல் எழுந்து நின்றாள். டெலிபோனை நெருங்கிச் சென்றாள்.

அடுத்த கணத்தில்—

"ஹலோ! நான் சினிமா ஸ்டார் திலோத்தமை பேசுகிறேன்! இன்ஸ்பெக்டர் இருக்கிறாரா?" என்று கேட்டாள்.

"இன்ஸ்பெக்டர் தான் பேசுகிறேன்! என்ன வேண்டும் உங்களுக்கு?" என்று மறுமுனையிலிருந்து பதிலும் வந்தது!

"சார்! நான் ராத்திரி ரொம்பவும் கெட்ட கனவுகள் கண்டு பயந்து போயிருக்கிறேன்.......!"

"கனவில் பயந்ததற்கா பாதுகாப்புக் கேட்கிறீர்கள்? நல்ல வேடிக்கையம்மா! இப்படி ஒவ்வொருவர் கனவிற்கும் போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்றால் போலீஸிற்கு எங்கே போவது?"

"அதில்லை சார்! நான் சொல்ல வந்ததைச் சரியாகக் கேட்க விடவில்லையே நீங்கள்! நான் பலநாட்கள் நினைத்ததுண்டு என்னைப் பற்றி உங்களிடம் சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று நேரில் வந்து ஸ்டேஷனில் பேசுவதற்கு முடியாத நிலைமையில் நான் இருப்பதனால் நான் 'போன்' மூலமாக அந்த விஷயங்களைச் சொல்லி வைக்கிறேன், சார்! நான் சொல்லப்போவதை இரகசிய ரிப்போர்ட்டாகவே வைத்துக் கொள்ளுங்கள்! எனக்கு ரொம்பவும் பயமாக இருப்பதனால் தான் முடிவாக உங்கள் உதவியை நாடுகிறேன்!" என்று படபடப்போடு பேசினாள் திலோத்தமை.

"சரி! விஷயத்தைச் சொல்லுங்கள்!"

"சார்! நான் வாழ்க்கையில் எல்லாக் கஷ்டங்களையும் அனுபவித்த பிறகு தான் இந்த நிலைக்கு வந்திருக்கிறேன்.

COMICS PDF TIMES

இப்போது இதற்கும் ஆபத்து நேர்ந்து விடும் போல் தோன்றுகிறது! ஆகவே நான்...சரி! விஷயத்தைச் சொல்கிறேன்—!

கலியமுதன் என்பவர் எனது காரோட்டியாக இருக்கிறார். அவர் காரோட்டியாக இருந்தாலும் ஒருவகையில் அவர் எனக்கு உறவு தான்! ஆனால் அந்த உறவை வைத்துக் கொண்டே என்னை அவர் ஒழித்து விடுவாரோ என்று அஞ்சுகிறேன் என் உயிருக்கு ஏதும் ஆபத்து ஏற்படாது போனாலும் என்னிடமிருக்கும் பொன்னையும் பொருளையும் பறித்துக் கொண்டு போய்விடுவாரோ என்ற பயம் என்னைத் துளைக்கிறது!

பணத்தை வேண்டுமானால் பேங்கில் போட்டு வைக்கலாம் நான் அணிந்து கொண்டிருக்கும் பொன் நகைகளையும் விலை உயர்ந்த துணிமணிகளையும் எப்படிப் பாதுகாப்பது சார்?"

இன்ஸ்பெக்டர் சிரித்துக் கொண்டே கேட்டார்.

"கலியமுதன் உங்களுக்கு என்ன உறவு?"

"அதையெல்லாம் கேட்காதீர்கள் சார்! நான் அதை வெளியிடுவதானால் அது என் பேருக்கும் புகழுக்கும் நானே பங்கம் தேடிக் கொண்டதாகி விடும்! நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான் சார்! நான் எப்படி வெறுத்தாலும், என்ன இகழ்ந்து பேசினாலும் என்னிடமே அட்டையாக ஒட்டிக் கொண்டிருக்கும் இந்தக் கலியமுதனை நீங்கள் என்னிடமிருந்து விரட்ட வேண்டும். நான் எவ்வளவோ முயன்றும் படுதோல்வி அடைந்திருக்கிறேன்! அவனைப் பார்க்கும் போதெல்லாம் என் பரம விரோதியைப் பார்ப்பது போலப் பார்க்கிறேன். இருந்தாலும் அவன் என்னிடம் குழைந்து குழைந்து வருகிறான். நன்றியுணர்ச்சியை, வளைய வளைய வந்து வாலாட்டிக் காட்டும் நாயைப்போல!"

"சரி! என்னால் முடிந்ததைச் செய்கிறேன். மேலும் விளக்கமாகச் சில விவரங்களை எனக்கு நீங்கள் சொல்ல வேண்டும் பிறகு நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்கிறேன்" என்று கூறி ரிசீவரைக் கீழே வைத்தார் இன்ஸ்பெக்டர்.

அவர் ரிசீவரை வைத்த ஒலி திலோத்தமையின் காதுகளிலும் விழுந்தது! நீண்ட பெருமூச்சோடு அவள் அறையைவிட்டு வெளியே வந்தாள்.

அப்போது—

போன் மணி கிணித்த ஒலி அவளைத் திருப்பியது!

விரைந்து வந்து ரிசீவரை எடுத்தாள்.

"ஹலோ...!" என்று தேனைக் குழைத்து வார்த்தையை வெளியே விட்டாள்.

அடுத்த கணம் அவள் முகம் விகாரமாக மாறியது!

"சீ! நீயா? பொழுது விடிந்ததும் ஆரம்பித்து விட்டாயா?" என்று கேட்டு விட்டு ரிசீவரை 'டக்'கென்று வைத்து விட்டு கிளம்பினாள் குளியல் அறையை நோக்கி. குளியல் அறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டாள்.

அந்த நேரத்தில்—

கலியமுதன் திலோத்தமையின் படுக்கை அறையிலே இருந்தான். அங்கே இருந்த போனை அனுசியாருக்கோ டயல் செய்து விட்டு 'ஹலோ' என்று குரல் கொடுத்தான். மறுமுனையிலிருந்து பேசக் குரல் கேட்டது!

"ஹலோ! யார் பேசுவது? கலியமுதனா? வணக்கம் அண்ணாச்சி! கொஞ்ச நேரத்துக்கு முன்னேதான் நான் திலோத்தமைக்குப் போன் செய்தேன். அந்த அம்மாளுக்கு என்மீது என்றான் அவ்வளவு கோபமோ தெரியலே! என்னிடம் பேச விரும்பாமல் டக்கென்று ரிசீவரை வைத்து விட்டாள் கலியமுதனே! நீயே சொல்! அவள் என்னை இந்த அளவுக்கு வெறுப்பதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா? நான் எவ்வளவு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்! இரண்டில் ஒன்று சொல்லி விட்டால் இருவருக்கும் நல்லது இல்லையா? எந்த முடிவும் சொல்லாமல் இப்படி நடந்து கொண்டால் என்ன அர்த்தம்? நானாக ஏதாவது யூகித்துக் கொண்டால் அது தவறாக இருந்து விட்டால் என்ன செய்வது, சொல்?"

"ஏம்பா மணி! என்ன நீ ஒன்றும் புரியாதவன் போலப் பேசுகிறாய்? அவள் எப்போது திலோத்தமை ஆனாளோ அப்போதே சாஸ்திரிக்கு இருந்த குணங்கள் எல்லாம் சாம்பலாகி விட்டன! பள்ளிப் பருவத்தை நினைவில் வைத்து விட்டு நீ துள்ளிக் குதிக்கிறாய்? உள்ளத்தில் எழும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறாய்! நன்றாகப் புரிந்து கொள் மணி! திலோத்தமை இன்றைய திரை வானிலே பெரிய தாரகை! ஒன்றரை இலட்சம் இல்லாமல் அவள் எந்தப் படத்திலும் கால்ஷீட் தருவதில்லை! பெரிய பெரிய படாதிபதிகளும், டைரக்டர்களும் அவள் பார்வைக்காகத் தவமே கிடக்கிறார்கள்! நீயும் நானும் எம்மாத்திரம்! நீ சாதாரண ஒரு நாடக நடிகன்! நான் ஒரு டிரைவர்!"

"என்ன இருந்தாலும் அந்த உறவு...?"

"உறவாவது துறவாவது? எல்லாம் காலம் அடித்துக் கொண்டு போய் விட்டது! உன் மனக் கோட்டையெல்லாம்

இடித்துவிட்டு திலோத்தமையை மறந்துவிடு! நானும் அவளை மறந்து விடுகிறேன்!"

"நீயுமா கலி?..."

"என்ன ஆச்சரியப்படுகிறாய்? திலோத்தமை உன்னைக் கூட மறந்துவிடு, உறவையும் துறந்துவிட்டு ஓடிப் போ என்று சொல்கிறாளா என்று கேட்கிறாயா? ஒரு முறையல்ல— ஓராயிரம் முறை சொல்லி விட்டாள்! நான்தான் உன்னை யில் ஒட்டிக் கொண்டு இருக்கிறேன்! ஏதோ ஒருவித உள் உணர்வு திலோத்தமையின் பக்கத்திலேயே நான் இருக்க வேண்டும் என்கிறது மணி!"

"ஒன்றுமே புரியவில்லை எனக்கு, கலி!"

"ஒன்றை மட்டும் புரிந்துகொள் மணி! உனக்காகவும் எனக்காகவும் அவள் உள்ளத்தில் ஒரு எள்ளு மூக்களவு கூட இடம் இல்லை! நேரில் சந்திக்கும்போது யாவற்றையும் கூறுகிறேன்."

"அவளை இப்படியே விட்டு விடவா போகிறாய்?"

"என்ன செய்வது? 'நீ யார்?' என்று என்னையே கேட்டு விட்டாள் அவள்!"

"உன்னையா?"

"ஆச்சரியப்படாதே! இப்போது விடைபெறுவோம்! நேரில் பேசிக்கொள்வோம்."

கலியமுதன் போனை வைத்துவிட்டு திலோத்தமையின் படுக்கை அறையைவிட்டு வெளியே வந்தான். அப்போது அவன் எதிரே நின்று உடலைத் துடைத்துக் கொண்டு வந்த திலோத்தமை அவனை விழுங்கி விடுவதுபோல் வெறித்துப் பார்த்தாள்.

"என்ன மிஸ்டர் கலி!"

"என்ன திலோத்தமை! என்னைக்கூடவா 'மிஸ்டர்' என்று அழைக்கிறாய்!"

"ஒரு பெரிய நபரை உன்னைப் போல் 'மிஸ்டர்' என்று கூப்பிடுவதைப் பெருமையாக எடுத்துக் கொள்!"

"உறவைக்கூட மறந்து விட்டாயா?"

"என்ன உறவு? உனக்கும் எனக்கும் என்ன உறவு?"

"இது நன்றாக இல்லை திலோத்தமை?"

"எது நன்றாக இல்லை கலியமுதன்? நான் இல்லாத போது என் படுக்கை அறையில் நீ நுழைந்து வெளி வருவதுதானே நன்றாக இல்லை?"

"ஆமாம்! மன்னித்துக்கொள் திலோத்! அவசரமாக போன் செய்ய வேண்டியிருந்தது!"

"போனில் சொல்ல வேண்டிய அளவுக்கு ஒரு காரோட்டிக்கு என்ன அவசரமான அவசியமான செய்தி?"

"நான் எதையும் சொல்லப் போவதில்லை திலோத்! நான் செய்தது தவறுதான்! என்னை மன்னித்துவிடு! ஏதோ உனக்கும் எனக்கும் உள்ள உறவு கொஞ்சம் உரிமையுணர்ச்சியை எழுப்பியது! உள்ளே நுழைந்து போன் செய்து விட்டேன்! மன்னித்து விடு! வருகிறேன்!"

"வரவே வேண்டாம் நீ! எப்போது நீ என்னை விட்டுப் போவாய் என்பதே எனக்குப் பெருத்த கவலையாக இருக்கிறது?"

"இப்போதே சென்று விடுகிறேன். இனி கவலையை விட்டு விடு திலோத்!"

"ஆஹா! இன்றைக்கு அவசியம் வடபழனி ஆண்டவனுக்கு குறைந்த பட்சம் ஆயிரம் தேங்காய்களாவது உடைக்க வேண்டும்."

கலங்கிய கண்களோடு கட்டிய துணியோடு அங்கிருந்து கிளம்பி விட்டான் கலையமுதன்.

விரைப்பாக உள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள் திலோத்தமை. உண்மையிலேயே ஒரு பெரிய கவலை அவளை விட்டது போன்ற நிம்மதி அவள் முகத்தில் நிலவியது!

புன்முறுவலோடு சென்று போனை எடுத்தாள்.

"ஹலோ! இன்ஸ்பெக்டர் சாரா?" என்று குரல் கொடுத்தாள்.

"யார் நீங்கள்?" என்றது மறுமுனை.

"திலோத்தமை பேசுகிறேன் சார்! நான் உங்களிடம் சொன்னேனே, கலையமுதன் என்ற பேர்வழியைப் பற்றி! அவன் பத்து நிமிடத்திற்கு முன்புதான் என்னை விட்டுப் போய் விட்டான்."

"ஏதாவது திருடிக் கொண்டா?"

"ஏதுமில்லை!"

"பின் ... சண்டை போட்டு அனுப்பினீர்களா?"

"அதுவுமில்லை! எந்தக் கஷ்டத்திற்கும் ஒரு முடிவு தோன்றும் இல்லீங்களா? இப்போது என் தொல்லைக்கு ஒரு நல்ல முடிவு பிறந்து விட்டது!"

"எதற்கும் நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள். புலி பதுங்குவது பாய்ச்சலுக்காகத்தான்! பூனை பதுங்குவது எலிக்காகத்தான்! கலையமுதன் போய் விட்டது, உங்களுக்குக் கெடுதல் செய்வதற்காக என்ற நிலை பிறந்து விட்டால்?"

"அப்படியெல்லாம் ஆகாது சார்! எதற்கும் ஜாக்கிரதையாக இருக்கிறேன்" என்று கூறிவிட்டுப் போனை வைத்தாள்.

அப்போது—

வாசலிலிருந்து காரின் ஹார்ன் ஒலி அவள் காதுகளைத் தாக்கியது! அறைக்குள்ளிருந்த சன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். ஒரு புத்தம் புதிய கார் நின்று கொண்டிருந்தது. காரின் ஸ்டியரிங்கைப் பிடித்துக்கொண்டு ஸ்டைலாக அமர்ந்திருந்தான் ஒரு வாலிபன்!

அவனைக் கண்டதும் திலோத்தமையின் முகத்திலே சந்தோஷம் தாண்டவமாடியது! அவசரமாக அறையை விட்டு ஓடி வந்தாள்.

"ஹலோ சந்திரகுமார்! வாருங்கள் உள்ளே" என்று அவனை அழைத்தாள்.

அவன் காரை விட்டு இறங்கி உள்ளே சென்றான்.

மேனாட்டு நாகரிக பாணியிலே உடை உடுத்தியிருந்த அவன், திலோத்தமையின் கரங்களைப் பற்றிக்கொண்டு அவளது படுக்கை அறைக்குள் நுழைந்தான்!

"இவ்வளவு சீக்கிரம் வந்து விடுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!"

"எப்பொழுது பொழுது விடியுமோ என்று காத்திருந்தேன் திலோத்!"

"சந்துரு! உண்மையில் சொல்கிறேன் நான். ராத்திரி பூராவும் உங்கள் நினைவுதான். என்னை மறந்து நான் கண்ணை மூடியபோதும் உங்களைப் பற்றிய கனவுதான்!"

"நனவிலும் கனவிலும் நான்தானே கண்ணே!"

"சந்தேகமா சந்தர்!"

பிறகு—

இருவரும் ஏதும் பேசிக் கொள்ளவில்லை! விழிகள் பேசிக் கொண்டன! உதடுகள் உறவாடிக் கொண்டன! இப்படியாக அரை மணி நேரத்தை இருவரும் இன்பமாகக் கழித்துவிட்டு அறைக்குள்ளிருந்து வெளியே வந்தனர். வேர்த்திருந்த உடலைத் துடைத்துக்கொண்டு கையைக் கோர்த்தபடி வெளியே வந்தனர்.

காத்துக் கொண்டிருந்த கார் கன வேகமாகப் பறந்தது!

சந்துருவும், திலோத்தமையும் சந்தோஷமாகச் சென்று கொண்டிருந்தனர் காரிலே!

ஓடிக் கொண்டிருந்த கார் ஓர் ஓட்டல் முன் நின்றது!

'ஓட்டல் அமரா' என்ற அந்த ஓட்டலிலே வசதிகளோடு கூடிய நீச்சல் குளமும் இருந்தது! பெரும் புள்ளிகளும்.

பெரிய இடத்துப் பேர் வழிகளுமே போகத் தகுந்த போக லோகம் அந்த ஓட்டல்!

காரை விட்டு இறங்கி ஓட்டலுக்குள் நுழைந்தவர்கள் குளிக்கும் உடையோடு நீச்சல் குளத்திற்குச் சென்றனர்.

அவர்கள் ஓட்டலுக்குள் நுழைந்ததையும் அவர்கள் சென்ற கோலத்தையும் வெளியே இருந்து கவனித்துக் கொண்டிருந்தான் ஒருவன்!

அவன் அந்த ஓட்டலுக்கு எதிரே இருக்கும் டாக்ஸி ஸ்டாண்டிலே ஒரு டாக்ஸியில் அமர்ந்து கொண்டிருந்தான். அவன் ஒரு டாக்ஸி டிரைவர் என்பதை அவனுடைய உடைகள் சொல்லாமல் தெரிவித்தன!

'திரை அழகி திலோத்தமா!''

டாக்ஸி டிரைவர் தனக்குள்ளே சொல்லிக் கொள்வது போல் சொல்லிக் கொண்டான். வறட்சியான சிரிப்பு ஒன்று அவன் வாயிலே வழிந்தது.

அப்போது—

"டாக்ஸி!" என்ற குரல் வேகமாக வந்து அவன் காதுகளிலே விழுந்தது!

சிந்தனையிலிருந்து விடுபட்டான் அவன்.

"ஓ!" என்று குரல் கொடுத்துக் கொண்டே சுற்று முற்றும் பார்த்தான்.

"அட நீயாப்பா?" என்று கேட்டுக் கொண்டே வந்து நின்றான் நாடக நடிகன் மணி.

"என்ன மணி! நீயா டாக்ஸியைக் கூப்பிட்டாய்? எங்கே போக வேண்டும்?" என்று கேட்டான் டாக்ஸி டிரைவர்.

"இந்த ஓட்டலுக்குள் போக வேண்டும்! இதனுள் போகிறவர்கள் யாராவது நடந்து போகிறார்களா பார்? அதனால்தான் டாக்ஸியில் போகலாம் என்று கூப்பிட்டேன். அப்புறம் பார்த்தால் நீ! அட என்னப்பா நீ, என்னிடம் கூடச் சொல்லாமல் இந்தத் தொழிலுக்கு வந்து விட்டாய்! திலோத்தமை உன்னையுமா விரட்டி விட்டாள்?"

"என்னையுமா என்று...?"

"உறவை மறந்தாள் என்கிறேன்!"

"அவள் உறவை மறந்து எத்தனையோ நாட்களாகி விட்டன. நான்தான் ஒட்டிக் கொண்டிருந்தேன் கெட்டுத் தெறித்ததைப்போல. இனியும் அவளை விட்டுப் போய் விடுவதே தகுதி; அவள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என்ற முடிவோடு புறப்பட்டு விட்டேன். புறப்படுவதற்கு முன்பாகவே இந்த டாக்ஸி டிரைவர் வேலைக்கு

வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து வைத்திருந்தேன்! அது சரி நீ ஏன் இந்த ஓட்டலுக்குப் போக விரும்புகிறாய்?"

"உன்னிடம் சொல்லாமலா? அந்தத் திரையுலகத் திலோத்தமை இங்குச் சென்றிருக்கிறாள். கூடவே திரை மன்னன் சந்துருவும் சென்றிருக்கிறான். நான் நன்றாகப் பார்த்து விட்டேன்! இன்றைக்கு திலோத்தமையைச் சந்தித்து இரண்டில் ஒன்று கேட்கப் போகிறேன். நான் எத்தனை நாளைக்குப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? இதற்கு ஒரு முடிவு கட்டி விட்டால்தான் எனக்கு நிம்மதி" என்றான் மணி.

"வேண்டாம் மணி! அவள் உன்னை உதாசீனப்படுத்தி வருகிறது தெரியவில்லையா? அவளை நீ மறந்துவிடு" என்று கூறி அழுதான்—டாக்ஸி டிரைவர்.

"சரி" என்று நறுக்குத் தெறித்தாற்போல் கூறிவிட்டு அங்கிருந்து அகன்றான் மணி.

சென்றுகொண்டிருந்த அவனையே பார்த்தபடி அசையாமல் அமர்ந்து விட்டான் கலைமுதன். அவன் கடந்த கால நினைவுகளின் ஊடே சஞ்சரிக்கத் தொடங்கினான். அப்போது அவனுடைய பெற்றோர்களும் தனது அருமைத் தங்கையாக எண்ணிய சரஸ்வதியும், அவளுடைய தாயார் தேவகியும் நினைவிற்கு வந்தனர். அவன் கண்களில் நீர் துளிர்த்தது.

அப்போது—

"டாக்ஸி" என்ற குரல் கேட்டது.

நீண்ட பெருமூச்சோடு கண்களைத் துடைத்துக் கொண்டு டாக்ஸியை பிளாட்பாரத்திலிருந்து கிளப்பினான் கலைமுதன்.

## 4

மாதா கோவில் மணி பனிரெண்டு முறைகள் அடித்து ஓய்ந்தது. சுறுசுறுப்பான உலகம் அமைதியாக உறங்கிக் கொண்டு இருந்தது!

திலோத்தமையின் 'திரை உலகம்' பங்களாவையும் இருள் விழுங்கி விட்டிருந்தது. ரோடிலிருந்த மரத்தின் ஓரமாக இரு உருவங்கள் பதுங்கிக்கொண்டிருந்தன! காம்பவுண்ட் சுவரை அடுத்தாற்போல் வளர்ந்திருந்த அசோக மரத்தில் பரபரப்புடன் ஏறினர் இருவரும்! அவர்கள் உடல்

களைக் கறுப்புப் போர்வைகள் மறைத்திருந்தன! ஆகவே அவர்களை யாராலும் அந்த இருளில் கண்டு பிடிக்க முடியாது. மரத்தின்மேல் ஏறியிருந்தவர்கள் ஓசையின்றிப் பங்களாவிற்குள் குதித்தனர்.

பிறகு மறைந்து மறைந்து சென்று பங்களாவை அணுகினர். அடுத்த கால் மணி நேரத்தில் அவர்கள் திலோத்தமையின் படுக்கை அறையை அடைந்து விட்டனர். அந்த அறையிலே ஜீரோ வாட் மங்கிய ஒளியைத் தந்து கொண்டு இருந்தது. அதை அணைத்துவிட்டு படுக்கையை நெருங்கினர் இருவரும். திலோத்தமை நல்ல உறக்கத்திலிருந்தாள். ஒருவன் தன் கரத்திலிருந்த கட்டாரியால் திலோத்தமையின் மார்பிலே பாய்ச்சினான். அடுத்த கணம்—

"ஆ! ஐயோ—அம்மா!" என்ற அலறல்!

அந்தச் சப்தம் அறையைவிட்டு வெளியே கேட்காதபடி அவ்வளவு பலஹீனமாக ஒலித்தது! இருவரும் வேகமாக அந்த அறையை விட்டு வெளியேறி வேறு பக்கமாகச் சென்றவர்கள் ரோடுக்கு வந்து சேர்ந்தனர். தாம் போர்த்தியிருந்த போர்வைகளைக் கழற்றிக் கையில் மறைத்து வைத்துக் கொண்டு நடந்தனர்.

அரை பர்லாங் தூரம் சென்றிருப்பார்கள்! அப்போது விளக்கில்லாமல் வேகமாக ஓடி வந்த ஒரு வேன் அவர்கள் அருகே நின்றது.

அதிலிருந்து இறங்கிய இருவர், ரோடில் சென்று கொண்டிருந்த இருவரையும் பிடித்து வேனில் ஏற்றினர். அடுத்த வினாடி வேன் அறுபது மைல் வேகத்தில் அந்த ரோடில் பறந்தது!

அந்த வேன் அரை மணி நேரம் ஓடியது. செங்கற்பட்டைத் தாண்டி, விழுப்புரம் சாலையில் பறந்து கொண்டு இருந்தது. செங்கற்பட்டுக்குச் சுமார் மூன்று கல் தொலைவில் வேம்பாக்கம் என்ற ஊருக்குப் பக்கத்திலே ஓங்கி நின்றிருக்கும் இரண்டு மலைகளுக்கிடையே ஒரு சிறு வழி. அந்த வழியே சென்றால் பாலாற்றங்கரையிலிருக்கும் பழவேலி என்னும் சிற்றூரை அடையலாம். வண்டியை நிறுத்திவிட்டு அந்த நால்வரும் அந்த வழியே ஓடினர். பழவேலி எனும் சிற்றூரின் தெற்குத் திசையிலே ஒரு கல் தொலைவிலே பாழடைந்த கோவில் ஒன்று தன்னந் தனியாக இருந்தது. அங்கே சென்று நின்றனர் அவர்கள்.

அவர்கள் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்து துடி துடிப்போடு அங்கே ஓர் ஆணும் பெண்ணும் காத்துக் கிடந்தனர்.

அவர்கள் நால்வரும் அங்கே வந்து சேர்ந்தனர்.

"தொலைந்தாள் திலோத்தமை!" என்றனர் நால்வரும்.

அதைக் கேட்டதும் அவன் வெற்றிச் சிரிப்பைப் பயங்கரமாக வெளியிட்டான். அவளும் அதில் பங்கேற்றாள். அதற்கு அடுத்த கணம்—

"உங்கள் உதவிக்கு என் நன்றி! சொன்னபடி இதோ உங்கள் தொகை" என்று கூறி நான்கு பணப் பைகளை எடுத்து அவர்கள்முன் போட்டான் அவன்!

அவர்கள் அவற்றை எடுத்துக் கொண்டனர். "உங்கள் வேலையை முடித்து விட்டோம்! எங்கள் வேலையும் முடிந்தது!" என்றான் அவர்களில் ஒருவன்.

"நாங்கள் வருகிறோம்!" என்று மற்றவர்கள் கூறினர்.

"பொறுங்கள் போகலாம்! அவசரம் என்ன? சொன்ன தொகையைத்தான் கொடுத்து விட்டேனே! இப்பொழுது எனது இதயங்குளிர்ந்ததைப் போல உங்கள் இதயமும் குளிர வேண்டும்!" என்று கூறிக் கொண்டே பக்கத்திலிருந்த பெண்ணைப் பார்த்தான் அவன்.

அவள் அவன் குறிப்பை யுணர்ந்த அடுத்த விநாடியே ஆடத் தொடங்கி விட்டாள்!

தீப ஒளியிலே மறைந்தும் மறையாதது மாகத் தெரிந்த அவளது அங்க அசைவுகளை ஆசையோடு ரசித்துக் கொண்டு இருந்தனர் அந்நால்வரும். கட்டான உடலோடு கவர்ச்சியான உடையோடு காந்தக் கண்களை சுழற்றிச் சிட்டுப்போல் சுழன்றாடிய அவளது பட்டு மேனியைத் தொட்டுப் பார்க்கத் துடித்தார்கள் அவர்கள், நால்வரும். விட்டுப்போக மனமில்லாத நிலையில் அந்தக் கட்டழகியின் கவர்ச்சி நடனத்தைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தனர் அந்நால்வரும்.

அப்போது—

அந்த ஆடலழகியோடு இருந்த அந்த ஆண் ஐந்து புட்டிகளை எடுத்து வந்து அவர்கள் முன் வைத்தான்! ஆடிக் கொண்டிருந்த குட்டி, ஓடி வந்து ஒவ்வொன்றாக எடுத்து, மூடியைத் திறந்து ஒவ்வொருவருக்கும் கொடுத்தாள். ஐந்து பேரும் அதை மன மகிழ்வோடு வாங்கிப் பருகிக் கொண்டிருந்தனர். அவள் மீண்டும் ஆட ஆரம்பித்தாள். ஒரே மூச்சாக உறிஞ்சித் தள்ளிக் கொண்டு, ஒயிலாக ஆடும் ஒய்யாரியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர், உயர்ரக விஸ்கியும், கயல் விழி மாதின் ஆட்டத்தின் போதையும் அவர்களின் தலைகளைச் சுழல

"நீங்கள் சொல்ல வந்த அந்த முக்கியமான விஷயத்தைத் தெளிவாகக் கூறினால் என்னால் முடிந்ததைச் செய்கிறேன்" என்றார் துரை.

செல்வமணி ஆரம்பித்தார்.

"இன்று சென்னையிலே ஒரு பரபரப்பான செய்தி காட்டுத் தீ போல பரவிக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள் இல்லையா?" என்றார் செல்வம்.

"இல்லை!" என்று சுருக்கமாகக் கூறினார் துரை.

"இல்லையா? உண்மையாகவா?"

"ஆமாம்! நான் இன்னும் செய்தித்தாளைப் படிக்கவில்லை"

"நான் சொல்ல வந்த விஷயம் அந்தச் செய்தியைப் பற்றித்தான். ஆனால் அது எந்தச் செய்தித்தாள்களிலும் வெளிவரவில்லை. நேற்றிரவு நடந்த விஷயம் காலைப் பத்திரிகையில் எப்படி இடம் பிடிக்கும்? பொழுது விடிந்து விஷயமறிந்தவர்கள் அந்தச் செய்தியை வேகமாகப் பரப்பி வருகிறார்கள். எல்லோரும் அறிந்த பிறகுதான் நூதனமான விஷயம் போல் நிதானமாகப் பத்திரிகைகளில் வெளிவரும்" என்றார் செல்வமணி.

"அந்த விஷயம் தான் என்ன? அதை சொல்லுங்கள்!" என்றார் துரை.

"திரையழகி திலோத்தமை இறந்து விட்டாள்!"

"அடபாவமே! உம்! இறப்பும் பிறப்பும் இயற்கைதான்! இருந்தாலும் ஒரு 'சினிமா ஸ்டார்' இறந்து விட்டாள் என்றால் ரசிக மக்கள் அதைத் தங்கள் சொந்த வீட்டு வேதனையாகவே ஏற்றுக் கொள்கிறார்கள்! கலை வளர்ப்பவர்கள் நிலை கெட்டுப் போனார்கள் என்றால் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள் அதை அறிந்து கொள்கிறவர்கள். சொந்தத்தில் யாராவது கஷ்டப்பட்டால் இரங்காத நெஞ்சமும் இப்படிப் பட்டவர்களுக்கு இரங்கி விடுகிறது!" என்று பொதுவாகக் கூறிய துரை, "எப்படி சார் இறந்தாள் திலோத்தமை? என்ன நோய் அவளுக்கு! ஆஸ்பிடலில் இறந்தாளா? அல்லது வீட்டிலா?" என்று கேட்டார்.

அவரது அவசரக் கேள்விகளைக் கவனித்த செல்வமணி மெல்லப் புன்னகை பூத்தார்.

"வீட்டில்தான் இறந்து விட்டாள். நோய் எதுவும் இல்லை!" என்றார்.

"நோய் இல்லாமல் திடீரென்று இறப்பதென்றால்....?

"யாரோ அவளைக் கொலை செய்து விட்டார்கள்!"

"திரையழகி திலோத்தமையை கொலை செய்து விட்டார்கள்?"

"ஆமாம்!"

"கொலை செய்தவர்களைப் போலீசார் பிடித்து விட்டார்களா? இந்த விஷயம் பேபிசுக்கு எட்டிவிட்டதா?"

அதெல்லாம் எனக்குத் தெரியாது? தெரிந்து கொள்ளவும் விரும்ப வில்லை, போலீசுக்குத் தெரிந்தால் மட்டும் என்ன புண்ணியம்?"

"என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள் செல்வமணி? போலீசுக்குத் தெரிந்தால் கொலை செய்தவனைப் பிடிக்கிறார்கள்,

"கொலை செய்தவர் யார் என்று தெரிந்தால் தானே பிடிக்க முடியும்? நடந்தது கொலைதான் என்றே ஊர்ஜிதம் செய்ய முடியாத நிலையில் விஷயம் முடிந்து விட்டிருந்தால்...."

"என்ன மிஸ்டர் குழப்புகிறீர்கள்; திலோத்தமா தற்கொலை செய்துகொண்டு விட்டாள் என்கிறீர்களா?"

"எதை நான் கூறுவது, மிஸ்டர் அப்பாதுரை! ஆனால் நான் உங்கள் துயவை நாடி வந்திருக்கிறேன் நம்பிக்கையோடு. ஆகவே என் பேச்சிலும் நீங்கள் நம்பிக்கை வைத்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும்!"

"அதற்குத்தான் போலீஸார் இருக்கிறார்களே!"

"அவர்களால் திரை அழகி திலோத்தமாவைக் கொன்றவர் யார் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது."

"ஏன் முடியாது? பிணத்தைப் போஸ்ட் மார்ட்டத்துக்கு அனுப்பி விட்டார்களா?... தெரியுமா?"

"அது மட்டும் எனக்குத் தெரியும்! அவர்கள் அனுப்பவில்லை! அவர்களால் அனுப்ப முடியாது"

செல்வமணியின் வார்த்தைகளிலே கண்டிப்பு தொனித்தது!...

"எப்படி இவ்வளவு அழுத்தமாகச் சொல்கிறீர்கள்?"

"திலோத்தமையின் பிணத்தையே போலீஸார் தேடிக் கொண்டிருக்கிறார்கள் இப்போது!"

"என்ன! அவள் பிணத்தைக் காணோமா?"

"ஆமாம் சார்! கொன்றவர்களே தூக்கிக்கொண்டு போயிருக்கலாம்!"

"அது எப்படி சார், கொன்றுதான் தூக்கிக்கொண்டு போயிருப்பார்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள்? கொல்லாமலே தூக்கிச் சென்றிருக்க முடியாதா?"

COMICS PDF TIMES

"முடியும்! ஆனால் திலோத்தமையின் படுக்கை அறையிலே இரத்தம் கொட்டி உறைந்து கிடக்கிறதே!"

"ஓஹோ! திரையழகியின் படுக்கை அறையிலே இரத்தக் கறை இருக்கிறதா? அதனால்தான் சொல்கிறீர்களா? ஆமாம்! அது இரத்தக் கறைதான் என்பது நிச்சயமாகி விட்டதா?"

"அப்படி என்றால்...?"

"அது இரத்தக் கறைதானா அல்லது இரத்தம் போன்ற நிறத்தில் வேறு ஏதாவது கறையா?"

"அது எனக்குத் தெரியாது சார்!"

"திலோத்தமையின் படுக்கை அறையிலே இரத்தக் கறையை நீங்கள் பார்த்தீர்களா?"

செல்வமணி மௌனம் சாதித்தார்.

"என்ன மிஸ்டர் செல்வமணி! மௌனம் சாதிக்கிறீர்கள்! நீங்கள் நேரில் பார்க்கவில்லையா? அல்லது பார்த்தவர்கள் யாராவது சொன்னார்களா?"

கேள்விக் கணைகளை விடுத்துக் கொண்டே அப்பாதுரை செல்வமணியின் முகத்தைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்.

அதைக் கவனித்துவிட்ட செல்வமணி தலையைத் தாழ்த்திக் கொண்டார்.

"என்ன சார் மௌனம் சாதிக்கிறீர்கள்? நீங்கள் எதற்காக என்னை நாடி வந்திருக்கிறீர்கள்? நீங்கள் யார்? இறந்துபோன திரையழகி திலோத்தமைக்கும் உங்களுக்கும் என்ன உறவு? நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?" என்று நிதானமாகக் கேட்டார் துரை.

"சார்! எனக்கும் திலோத்தமைக்கும் எந்த உறவாவது இருந்து விட்டுப் போகட்டும்! உங்களை நான் நாடி வந்த காரணம், கொலை செய்த கொடியவர்களை உங்களால் கண்டு பிடிக்க முடியுமா என்பதைத் தெரிந்து கொள்ளத்தான். வேண்டுமானால் நீங்கள் திலோத்தமையின் 'திரை உலகம்' பங்களாவிற்கு நேரில் சென்று எல்லா விபரங்களையும் தெரிந்துகொள்ளுங்கள். நான் யார்? எனக்கும் திலோத்தமைக்கும் என்ன உறவு என்பதை நீங்கள் நிச்சயமாக அறிந்துகொள்ள வேண்டுமென்றால், இன்னும் ஒரு வாரத்திற்குள்...... இல்லையென்றால் குற்றவாளிகளை நீங்கள் கண்டுபிடித்து வருவதற்குள் கூறி விடுகிறேன். நானும் உங்களை நேரில் அடிக்கடி சந்தித்து விஷயத்தை அறிந்து கொள்கிறேன்" என்றார் செல்வமணி.

"அது சரி! நீங்கள் யாராகவேனும் இருந்துவிட்டுப் போங்கள்! திலோத்தமை கொலையுண்டு இறந்து போனாள் என்பதை மட்டும் நான் நம்பலாமா?"

"ஏன் இந்தச் சந்தேகம்?"

"ஏனென்றால் ஒருவேளை அவளை யாராவது கடத்திக் கொண்டு போயிருக்கலாம். அவள் கொலையுண்டு இறந்து போய் விட்டாள் என்று உலகம் நம்புவதற்காக அங்கே இரத்தத்தைச் சிந்தியிருக்கலாம்."

"அப்படியும் இருக்கலாம்! ஆனால் அதைத்தான் செய்தவர்கள் யாராக இருக்கும் என்பதை அறிந்துகொள்ள வேண்டாமா? உங்கள் சந்தேகப்படி திலோத்தமா கொலை செய்யப்படாமல் கடத்திச் செல்லப்பட்டிருந்தால் நீங்கள் முழு மனத்தோடு முயன்றால் எப்படியும் அவளை மீட்டு விட முடியுமா இல்லையா?"

"என்னால் இயன்றவரை முயல்கிறேன். ஆனால் நீங்கள் யார்? திலோத்தமை கொலையுண்டு இறந்து போனதாக வைத்துக் கொண்டாலும் அவளைப் பற்றி உங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை என்பதெல்லாம் எனக்குத் தெரியாமல் நான் எப்படி இதில் ஈடுபட முடியும்?"

"உங்கள் பேச்சு என் பேச்சை நம்புவதாக இல்லை என்றே மிகவும் தெளிவாகத் தெரிகிறது இல்லையா? அப்படியானால் நாம் இருவரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வோம்!"

"என்ன ஒப்பந்தம்?"

"சொல்கிறேன். அப்போதாவது நீங்கள் என்னை நம்புவீர்களா?"

"நம்புவதும் நம்பாததும் நீங்கள் சொல்லப் போகிற ஒப்பந்தத்தைப் பொறுத்தது!" என்று கூறிக்கொண்டே திரும்பிப் பார்த்தார் துப்பறியும் சிங்கம் என அழைக்கப்படும் துரை.

அப்போது அவர் மனைவி பிரமிளா அறைக்குள் நுழைந்தாள்.

"என்ன, எழுந்து விட்டீர்கள்...?" என்று வினவினார் துரை.

"ஒன்றுமில்லை! அந்த ஒப்பந்தம் இரகசியமாக இருக்க வேண்டும்! நம் இருவருக்கும் தெரிந்த இரகசியமாக இருக்க வேண்டும்" என்றார் செல்வமணி.

"எனக்குத் தெரிந்தாலும் என் மனைவிக்குத் தெரிந்த மாதிரிதான்! அதனால் ஒன்றும் பாதகமில்லை" என்றார் துரை.

"அவர் உங்கள் மனைவியா? தொழில் துறையில் காரிய தரிசியாக்கும் என்று எண்ணி விட்டேன்" என்றார் செல்வமணி.

"சரி! அதைச் சொல்லுங்கள்!"

"இறந்துபோன திரையழகி திலோத்தமை வேறில்லை... நான் வேறில்லை..."

"அப்படியென்றால்...?"

"நான் அவ்வளவு நெருக்கமானவன் அவளுக்கு!"

"இதன் பொருள்...?"

"திலோத்தமா என்றால் எனக்கு உயிர்! நான் என்றால் அவளுக்கு உயிர்! இன்னும் விளக்க வேண்டுமா?"

"உங்கள் உயிருக்கு உயிரான காதலி என்று கூறுங்கள்!"

"அதுதான் கூறி விட்டேனே!"

"அப்படியானால் திலோத்தமாவின் மறைவு உங்களுக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும்!"

"அதிர்ச்சி மட்டுமா? ஆவேசத்தையும் கொடுத்திருக்கிறது! அவளை அழித்தவர்கள் யாரென்று தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமும் எனக்கிருக்கிறது. அதனால்தான் போலீசை நம்பாமல் நான் உங்களை நாடி வந்திருக்கிறேன். எனக்கு நிச்சயமாகத் தெரியும்! அவள் கொல்லப்பட்டிருக்கிறாள், அல்லது கடத்தப் பட்டிருக்கிறாள்! அதற்கு யார் காரணம் என்பது யாவும்...."

"நீங்கள் யாரையோ சந்தேகிப்பதுபோல் தோன்றுகிறது! விளக்கமாகப் பேசிச் சொல்வது நல்லது" என்று இறக்கமான தொனியில் பேசினார் துரை.

"திலோத்தமாவின் காரோட்டியான கலியமுதனை நான் சந்தேகிக்கிறேன்! அவன்தான் இதைச் செய்திருக்க வேண்டும்! ஆள் அழுத்தமான பேர்வழி! மேலுக்குச் சாந்த சொரூபியாகத் தோன்றும் அவன், உள்ளுக்குள் மிகக் கொடியவன். எனக்கு அவன்மீதுதான் சந்தேகம்."

"கலியமுதன் திலோத்தமாவைக் கொலை செய்யவோ... அல்லது கடத்திச் செல்லவோ காரணம் இருக்க வேண்டும் அல்லவா?"

"காரணம் இருக்கிறது! அவன்தான் கொலை செய்தவன் என்பதை நீங்கள் ஆதாரபூர்வமாகக் கண்டு பிடித்து விட்டால் அந்தக் காரணம் தன்னால் தெரிந்து விட்டுப் போகிறது!"

"நான் கேட்பது—நீங்கள் கலியமுதன் பேரில் சந்தேகப்படுவதற்குரிய காரணம்?"

"அதுவா? திலோத்தமாவே என்னிடம் கூறியிருக்கிருள், காரோட்டி கலையமுதன் நடவடிக்கை வர வர மோசமாகிக் கொண்டு வருகிறது என்று நான் நினைக்கிறேன்... கலையமுதனுக்கும் திலோத்தமாவுக்கும் ஏதாவது சச்சரவு ஏற்பட்டிருக்க வேண்டும். யாரோ ஒரு விஷயம் எனக்குச் சொன்னார்கள்......கலையமுதனுக்கும் திலோத்தமாவுக்கும் ஏதோ உறவு இருக்கிறது என்று!"

"அது என்ன உறவாக இருக்கும்?"

"எனக்குத் தெரியாது."

"நீங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது! கலையமுதன் திலோத்தமாவின் காதலனாக இருப்பாரோ?"

"இருக்கவே முடியாது!"

இதைக் கூறும்பொழுது ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது செல்வமணிக்கு

"ஒருவேளை உங்களுக்குத் தெரியாமல் கலையமுதனையும் கலையமுதனுக்குத் தெரியாமல் உங்களையும் காதலித்து வந்திருந்தால்...?"

"என் திலோத்தமா அப்படிப்பட்ட நச்சுக்குணம் படைத்தவள் அல்லள்."

"நீங்கள் நினைக்கிறீர்கள்!...ஆனுல் அவள் அப்படிப் பட்டவளாகவே இருந்திருந்தால்....?"

"என்னுல் எண்ணியும் பார்க்கமுடியாத கற்பனை இது!"

"என்ருல் நீங்கள் அவர்களுக்குள் என்ன உறவு இருக்கும் என்கிறீர்கள்?"

"ஏதோ இருக்கலாம் சொந்தமாக அல்லது தூரத்து உறவாக!"

"நான் சொல்கிறேன்! கலையமுதனும் திரையுலகில் திலோத்தமையின் காதலன் தான் என்று. அவளுக்குத் தெரியாமல் உங்களைக் காதலித்திருந்து அது தெரிந்துபோய் அவர் ஆவேசமுற்று அவளைக் கொன்றிருக்கலாம், அல்லது அவளைக் கடத்திச் சென்றிருக்கலாம். ஏன் இப்படி நடக்க முடியாதா?" என்று கேட்டார் துரை

அப்போது செல்வமணி மௌனமாக எதையோ சிந்தித்து கொண்டிருந்தார்

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்று அவரைக் கேட்டார் துரை.

"எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது! என்ன சொல்வதென்றே தோன்றவில்லை! ஒரு வேளை நீங்கள் சொல்வது போலவும் நடந்திருக்கலாம் என்றும் தோன்று

கிறது! எது எப்படியிருந்தாலும் சரி சார்! நீங்கள் கொலையாளியை அல்லது கடத்தல் ஆளைக் கண்டுபிடியுங்கள்!" என்று கண்களில் நீர்மல்கக் கேட்டுக் கொண்டார் செல்வமணி!

"என்னால் முடிந்தவரை முயல்கிறேன் சார்? ஆனால் நீங்கள் ஏதோ ஒப்பந்தம் என்கிறீர்களே! அதைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே" என்று நினைவுபடுத்தினார் துரை.

"நான் மறந்து விடவில்லை சார்! என்னை நம்பி இதை நீங்கள் உங்கள் சொந்த விவகாரம் போல் பாவித்துக் கொலையாளியைக் கண்டுபிடியுங்கள் அல்லது கடத்திச் சென்றவனைக் கண்டுபிடியுங்கள்! என்மீது நீங்கள் நம்புவதற்காக நான் உங்களிடம் ஒரு லட்ச ரூபாயைக் கொடுத்து வைக்கிறேன்! நீங்கள் என்னைப் பற்றி யாரிடமும் எதுவும் கூறவேண்டாம் நிர்மலாத்தமைக்குச் செல்வமணி என்ற ஒரு காதலன் இருந்ததாக யாரிடமும் கூற வேண்டாம். அது எப்போதும் போல் இரகசியமாகவே இருக்கட்டும். ஆனால் நீங்கள் இந்தக் கேசில் துணிவோடு இறங்கி வெற்றி தேடித் தரவேண்டும்? இதுதான் நம் ஒப்பந்தம். அந்த ஒரு லட்ச ரூபாயை நீங்கள் வெற்றி கண்ட பிறகு உங்கள் பீஸாகவே வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார் செல்வமணி.

"அதைப் பற்றி பிறகு பார்த்துக் கொள்வோம்! நான் இப்போதே புறப்பட்டுத் திரையுலகம் பங்களாவைப் பார்த்து விட்டு வருகிறேன் என்றார் துரை.

அப்போது—

டெலிபோன் மணி அலறியது.

பிரமீளா ரிசீவரை எடுத்து "ஹலோ!" என்றாள்.
பிறகு ரிசீவரைத் துரையிடம் நீட்டிக் கொண்டே "கிரைம் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி கூப்பிடுகிறார்" என்றாள்.

"சரி சார்! நான் இன்றிரவு உங்களை வந்து சந்திக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் செல்வமணி.

"வருவதற்கு முன் எனக்குப் போன் செய்து நான் இருப்பதையும் இல்லாததையும் அறிந்து சொல்லுங்கள்" என்றார் துரை.

"அவசியம் நான் இரவு பத்து மணிக்கு மேல் பத்தரை மணிக்குள் உங்களை வந்து சந்திக்கிறேன்!" என்று கூறி விட்டுப் புறப்பட்டார் செல்வமணி.

COMICS PDF TIMES

அப்பாத்துரை இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமியோடு போனில் பேசிக்கொண்டிருந்தார். பிரமீளா அவர் பக்கத்தில் அமர்ந்திருந்தாள்.

"மிஸ்டர் அப்பாத்துரை! காலை வணக்கத்தை முதலில் ஏற்றுக் கொள்ளுங்கள்! பிறகு நான் சொல்லப் போகும் விஷயத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்!" என்று ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி

"இன்று காலையிலேயே ஒரு பரபரப்பான செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது! திரையழகி திலோத்தமை அவளது பங்களாவான 'திரை உலகம்' பங்களாவிலே கொல்லப்பட்டிருக்கிறாள்! இரத்தக் கறை இருக்கிறது. பிணத்தைக் காணோம்! நான் இப்போது திரை உலகம் பங்களாவிலிருந்து தான் பேசுகிறேன்! நீங்கள் உடனே வேண்டிய கருவிகளோடு விரைந்து வாருங்கள்!" என்றார் கிருஷ்ணசாமி.

"இதோ வந்து விட்டேன்! எதையும் கலைக்காமல் விழிப்போடு பார்த்துக் கொள்ளுங்கள்! அந்த பதினைந்தாவது நிமிடத்தில் நான் அங்கிருக்கிறேன்!" என்று கூறி ரிசீவரை வைத்தார் துரை

சிகரெட் ஒன்றை எடுத்துக் கொளுத்திப் புகையைக் கக்கிக் கொண்டே எழுந்து நின்றார் துப்பறியும் துரை

"திலோத்தமா தமிழகத்தின் திரை வானிலே 'விறு விறு' வென்று புகழ் உச்சியை அடைந்துவிட்ட முன்னணி நட்சத்திரம் இன்று அவள் நடித்த படங்களுக்கு அதிக வசூல். ரசிக மகா ஜனங்களின் ஏகோபித்த ஆதரவையும் ஆசியையும் பெற்ற நல்ல நடிகை என்ற பெயரை வெகு சீக்கிரத்தில் சம்பாதித்துக் கொண்டு விட்டாள். அவள் நடித்து வெளிவரும் படம் அடுத்தது எது என்றும் ஆவலோடு சினிமா ரசிகர்கள் உள்ளனர். ஓயாமல் 'கால் ஷீட்' கொடுத்தாலும் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் அவளுக்கு வேலை இருக்கிறது! சுமார் முப்பது படங்களுக்கு அவள் ஒப்பந்தமாகியிருக்கிறாள் என்று நேற்றுத் தான் ஒரு சினிமா இதழில் படித்தேன்! எடுத்ததுமே கதாநாயகியாக எடுப்பாக நடித்து மூன்று படங்களிலேயே சினிமா உலகிலே மின்னும் தாரகையாகி விட்டாள். இந்தி மலையாளம், தெலுங்கு போன்ற வேறு மொழிப் படங்களில் நடிக்கவும் ஒப்பந்தமாகியிருக்கிறாள்! அயல் நாட்டுக்குச் செல்லும் இந்தியக் கலைஞர் குழுவில் இவளையும் சேர்த்திருப்பதாகச் செய்தி வெளி வந்து சரியாக இன்னும் ஒரு வாரம் கூட ஆகவில்லை. இதற்குள் இவள் கொல்லப்பட்டு

விட்டான்" என்று தம் மனைவி பிரமீளாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார் துரை.

"அவள் இறந்ததை விட ஆச்சரியமான செய்தி செல்வ மணி திலோத்தமைக்கு இரகசியக் காதலனாக இருந்தார் என்பது தான். ஒரு சினிமா நடிகைக்குக் காதலன் என்றால் ரசிகர்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாதே! சினிமாக் காரர்களைத் திட்டியே அதன் மூலம் வாழ்ந்து வரும் மஞ்சள் பத்திரிகைகள் இன்று நம் நாட்டில் ஏராளமாகப் புற்றீசல் கூட்டம் போல் பெருகி விட்டிருக்கின்றனவே!" என்றாள் பிரமீளா.

"ஆமாம். எனக்கும் ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. இன்ன நடிகை இன்னாரோடு இந்த நேரத்தில் இந்த இடத்தில் இப்படி இருந்தாள் என்று நேரில் பார்த்தவன் சொல்வது போலவே பொய்யையும் புரட்டையும் எழுதி மக்களை ஏமாற்றித் திரிகிற எத்தனையோ பத்திரிகைகளுள் ஒரு பத்திரிகையிலும் திலோத்தமாவைப் பற்றி ஏதும் இன்னும் வரவில்லை! அவளுக்கு ஒரு காதலன் செல்வ மணி என்ற பெயரில் இருப்பதை எந்தப் பத்திரிகைக் காரனும் கவனியாமல் இருப்பான்? சும்மாவே கதை கட்டி விட்டுக் கயிறு திரிக்கின்ற பேர்வழிகள். உண்மையிலேயே விஷயம் இருக்கிற போது வாய்களை மூடிக் கொண்டா இருப்பார்கள்?"

"உங்களுக்கு என்ன தோன்றுகிறது? யார் இந்தச் செல்வமணி? உண்மையில் திரை அழகி திலோத்தமையின் காதலன்தானா? இல்லையென்றால் அவள் இறப்பைப் பற்றி ஏன் இவனுக்கு இவ்வளவு அக்கறை?"

"ஒரு வேளை செல்வமணியே திலோத்தமையைக் கொன்று விட்டோ அல்லது கடத்திவிட்டோ இருந் தால்....?"

"அப்படிச் செய்து விட்டு அவனே நம்மிடம் வந்து குற்றவாளியைக் கண்டு பிடியுங்கள் என்று சொல்கிறான் என்கிறீர்களா பிரமீளா?"

"ஆமாம்! உங்களைச் சாமான்யமாக எண்ணிக் கொண்டு ஏமாளியாக்க எண்ணி விட்டிருந்தால்....? அவனே செய்து விட்டு நம்மிடம் வந்து குற்றவாளியைக் கண்டு பிடியுங்கள் என்று சொல்வதால் நமது கவனம் வேறுபக்கம் திரும்பிவிடும். நாம் குற்றவாளியைத் தேடித் திரிகிற அதே நேரத்தில் அவன் தன் காரியத்தை முடித்துக் கொண்டு விடலாம். 'குற்றம் செய்தவன் தானே வலிய வந்து சிக்கிக் கொள்ளமாட்டான் என்று நினைத்து நாம் செல்வ

மணியின் மீதுச் சந்தேகப்படாமல் இருப்போம் என்பது அவனுக்கு நம்பிக்கையாக இருக்கலாம் என்று கூறிய பிரமீளாவை ஆச்சரியத்தோடு உற்று நோக்கினுர் அப்பாத் துரை.

"என்ன வாயைப் பிளந்து கொண்டு அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள் பிரமீளா.

"நீ எவ்வளவு தூரம் தீவிரமாகச் சிந்தித்து அலசுகிருய் என்பதை எண்ணி வியக்கிறேன்!" என்ருர் துரை.

"போதும் உங்கள் குறும்பு!" என்ருள் பிரமீளா.

"உண்மையாகவே தான் பிரமீளா! நான் உன்னை மனைவியாக அடைந்ததும், துப்பறியும் துறையில் அஸிஸ்டெண்டாக அடைந்ததும் என் அதிர்ஷ்டம் தான!" என்ருர் துரை.

பிரமீளா நாணிக் கோணித் தலைகுனிந்தாள்.

"இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி வேறு இதே கேஸில் வேலை செய்ய என்னை அழைத்திருக்கிருர். ஆகவே எப்படியும் கொலையாளியைக் கண்டு பிடித்து விடப் பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ஆமாம்! ஒரு சந்தேகம் செல்வமணி திலோத்தமையைக் கொல்ல வேண்டிய காரணம் என்னவாயிருக்கும்?"

"எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். எதைச் சொல்வது? எப்படியோ திலோத்தமாவுக்கும் செல்வ மணிக்கும் இடையே மனக்கசப்பு தோன்றியிருக்கலாம்!"

"நீ சொல்வதும் சரிதான்! கொலையாளியைக் கண்டு பிடிக்குமாறு தம் உதவியை நாடி வந்த பேர்வழியையே நாம் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது! ஆனுல் துப்பறியும் துறையில் இது ஒன்றும் புதிதல்ல!" என்ருர் துரை.

"ஆனுல் செல்வமணி ஒரு லட்ச ரூபாயை எடுத்துக் கொண்டு நான்கு நாட்களுக்குள் வருவதாகச் சொல்லி விட்டுப் போயிருக்கிருரே ஒப்பந்தப் படி!"

"இப்போது நாம் ஏதும் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை! நான் உடனே புறப்பட்டுப் போகிறேன்! அங்கே கிருஷ்ணசாமி என்ன கண்டுபிடித்து வைத்திருக்கிருரோ? பிறகு எல்லாம் தெரிந்துவிடும்!"

"கொலையாளி செல்வமணியாகவே இருப்பான் என்ருல் நம்மிடம் ஒரு லட்ச ரூபாயைக் கொண்டுவந்து தரவேண்டிய அவசியமே இல்லை" என்ருள் பிரமீளா.

"அப்படிச் சொல்லிவிட முடியாது! ஒரு லட்ச ரூபாயை நமக்கும் காட்டிவிட்டு அவன் தன் வேலையை முடித்துக் கொள்ளும் தந்திரசாலியாக இருந்தால் நாம் ஏமாற்றம்

அடைந்துதான் போக வேண்டும். சரி பார்க்கலாம்" என்று கூறி இருக்கையை விட்டு எழுந்தார் துரை.

## 6

திரையழகி திலோத்தமாவுக்குச் சொந்தமான 'திரை உலகம்' பங்களாவில் நுழைந்த அப்பாதுரையை இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி புன்னகையுடன் வரவேற்றார்.

"நம்மைப் போன்றவர்கள் இதுபோன்ற கொலை—கொள்ளை நடக்கின்ற இடங்களில்தான் சந்தித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது" என்று சிரித்துக்கொண்டே கூறினார் இன்ஸ்பெக்டர்.

"நமது கடமை அப்படிப்பட்டதாக இருக்கிறது" என்று புன்முறுவலோடு கூறினார் துரை.

இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமியைப் பின்தொடர்ந்தே நடந்தார் துரை. இருவரும் படுக்கை அறையினுள் நுழைந்தனர்.

"இதுதான் கொலையுண்டு இறந்துபோன திலோத்தமாவின் படுக்கை அறை. இதோ பாருங்கள், படுக்கையிலே இரத்தக் கறை தென்படுகிறது" என்று அந்த இடத்தைச் சுட்டிக் காட்டினார் இன்ஸ்பெக்டர்.

துரை அதை நன்றாகக் கவனித்துக் கொண்டார். அந்த அறையைச் சுற்றிலும் தன் கண்களைச் சுழலவிட்டார்.

அந்த அறை மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டு இருந்தது. அறைச் சுவர்களில் கையால் வரையப்பட்ட இயற்கை காட்சிகளைக் கொண்ட படங்கள் பக்கத்துக்கு ஒன்றாகப் பெரிய அளவில் நான்கு இருந்தன. யாவும் சுவர்களின் மத்தியில் மாட்டப்பட்டிருந்தன! நான்கும் வெவ்வேறு விதமான இயற்கைப் படங்கள்.

அந்தப் படுக்கை அறையிலே நல்ல தேக்கினாலான கண்ணாடி பதித்த ஓர் அல்மேராவும், இரும்பு அல்மேரா ஒன்றும் காணப்பட்டன. அவை தவிர துணியை மடித்துப் போடும் ஸ்டாண்டும் அங்கு காணப்பட்டது. ஒவ்வொன்றாக மிகவும் அக்கறையோடு கவனித்துக் கொண்டு வந்த துரை ஓரிடத்திலே வந்ததும் அப்படியே நின்று விட்டார்.

அங்கே—

ஒரு காலடித் தடயம் தெரிந்தது. தன்னிடமிருந்த கருவியின் மூலம் அதைக் கண்டுவிட்ட அப்பாதுரை அதையே நன்றாக உற்றுக் கவனித்துக்கொண்டு நின்றார்.

பிறகு தமது கைப் பையைத் திறந்து ஏதோ ஒருவிதமான பவுடரை அதன்மீது தூவி, கையிலிருந்த கருவியின் மூலம் அதைப் படம் பிடித்துக் கொண்டார். அவர் முகத்திலே புன்சிரிப்பு தவழ்ந்ததைக் கண்ட இன்ஸ்பெக்டர், "என்ன சார் விஷயம்?" என்று கேட்டுக் கொண்டே துரையின் அருகில் வந்தார்

"இந்த அறையிலே ஓர் ஒரு தடயம்தான் கிடைத்திருக்கிறது! இந்த ஒற்றைக் கால் தடயம் யாருடையது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த விஷயத்திலே ஈடுபட்டவர்கள் மிகவும் ஜாக்கிரதையாகவே காரியத்தை சாதித்துக் கொண்டிருக்கின்றனர். மிகவும் உஷாரான பேர் வழிகள். அவர்கள் எத்தனையோ நிறைய அனுபவம் பெற்றவர்களாகவும் இருக்கலாம். இல்லையென்றால் எந்தவிதத் தடயமும் தெரியாதபடி நடந்து கொள்ளக்கூடியவர்களைச் சாமானியர்கள் என்று எண்ணி நாம் அஜாக்கிரதையாக இருந்துவிடக் கூடாது" என்று இன்ஸ்பெக்டரிடம் கூறினார் துரை.

"இந்தப் பங்களாவில் திலோத்தமையைத் தவிர வேறு யார் யார் வசிக்கிறார்கள்? வேலைக்காரர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? வெளியிலே காவல் இருக்கும் கூர்க்கா அன்றிரவு வேலையில் இருந்தானா? அவன் என்ன கூறுகிறான்? வேலைக்காரர்கள் என்ன கூறுகிறார்கள்?" என்று சரமாரியான கேள்விகளைக் கேட்டார் துரை.

"எல்லாவற்றிற்கும் உங்கள் வருகைக்காகத்தான் காத்திருந்தேன். இனிமேல்தான் யாவும் தெரிந்துகொள்ள வேண்டும்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"நீங்கள் எப்போது இங்கு வந்தீர்கள்?" என்று கேட்டார் துரை.

"அதிகாலையில் நாலரை மணிக்கே நான் இங்கு வந்துவிட்டேன்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"உங்களுக்கு விஷயம் எப்படித் தெரியும்?"

"யாரோ போனில் பேசினார். நீங்கள் யார் என்று கேட்டதற்கு பேசிய நபர், திலோத்தமையைக் கொன்று தூக்கிக் கொண்டு போன இரண்டு குண்டர்களையும் நாம் தேரில் கண்டவன் என்று கூறினார் அவர். நான் மேற்கொண்டு கேட்பதற்குள் அவர் பேச்சைத் துண்டித்துக் கொண்டு விட்டார்" என்றார் இன்ஸ்பெக்டர்

"அவர் உங்களுக்குப் போனில் அறிவித்த விஷயம் என்ன?"

"திரை உலகம் பங்களாவில் திரையழகி திலோத்தமையைக் கொன்று தூக்கிக்கொண்டு செல்கிறார்கள், இரண்டு குண்டர்கள். உடனே புறப்பட்டு வரவும்—என்று அந்த ஆள் போனில் கூறினார்."

"அப்போது மணி என்ன இருக்கும்? நீங்கள் ஸ்டேஷனில் இருந்தீர்களா?"

"நான் ஸ்டேஷனுக்கு அப்போதுதான் வந்திருந்தேன். சில ஜவான்களோடு மாறு வேஷத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடிக்க போயிருந்தேன். நான் ஸ்டேஷனுள் நுழைந்தபோதுதான் போன் மணி ஒலித்தது. அப்போது மணி சரியாக 4 - 05" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அந்த நேரத்தில் போனில் பேசியவர் யார் என்பதைத் தெரிந்துகொள்ள முடியாமல் போனாலும் எங்கிருந்து அந்த நபர் பேசினார் என்பதையாவது அறிந்து கொண்டிருக்கலாமே..."

"அதைத் தெரிந்து கொண்டாகி விட்டது. நான் உடனே டெலிபோன் எக்சேஞ்சில் கேட்டு அதை அறிந்து கொண்டேன். பேசிய நபர் இதே பங்களாவில் இருந்துதான் பேசியிருக்கிறான்."

"அப்படியானால் அவன் யாராக இருப்பான்? உங்களுக்குக் கேட்ட குரல் ஆணினுடையதா, பெண்ணினுடையதா? நினைவிருக்கிறதா?"

"நன்றாக நினைவிருக்கிறது! பேசிய நபர் ஆணாகத்தான் இருக்க வேண்டும். குரல் அப்படித்தான் இருந்தது."

"அந்த நபர் சம்பவம் நடக்கும்போது தன் கண்ணால் பார்த்துக்கொண்டு இருந்ததாகவே அவன் பேச்சின் மூலம் தெரிகிறது. அப்படியானால் அவன் ஏன் அந்தச் சம்பவத்தைத் தடுத்திருக்கக் கூடாது? தடுக்க முயன்றிருப்பானா? அல்லது நேரடியாக எதிர்க்கப் பயந்துபோய் போலீஸை அழைத்திருப்பானோ?" என்று தம் சந்தேகங்களை வெளியிட்டார் துரை.

"ஒருவேளை கொலையாளியே கூட எனக்குப் போன் செய்திருக்கலாம். போலீஸாரோடு விளையாடுகிற கொலையாளிகளும் இருக்கிறார்களே" என்றார் இன்ஸ்பெக்டர்.

"நீங்கள் சொல்வதுபோல் இருக்குமானால் அந்தச் சம்பவம் உங்களுக்கு அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே நடந்து விட்டிருக்க வேண்டும். போலீஸார் விரைந்து வந்தால் பிடிபட்டுப்போக நேரிடுமே என்ற பயம் எந்தக் கொலையாளிக்கும் இருக்கத்தானே செய்யும்! நேரில் பார்த்துக்கொண்டு அப்போதே போன் செய்ததாக இருப்பதால்

அவன் கொலையில் சம்பந்தப்பட்டவனாகவே இருக்கமாட்டான் என்றே எனக்குத் தோன்றுகிறது" என்றார் துரை.

"சரி, இங்கிருக்கும் வேலைக்காரர்களையும் அந்தக் கூர்க்காவையும் விசாரித்துப் பார்ப்போம்" என்று கூறிவிட்டு அருகில் இருந்த ஜவானை அழைத்து ஏதோ கூறினார் இன்ஸ்பெக்டர். ஜவான் நடந்தார்.

சிறிது நேரத்திற்குப்பின்—

ஒரு ஜவான் கூர்க்காவை அழைத்துக் கொண்டு வந்து அவர்கள்முன் நின்றார்.

அப்பாதுரை அந்த கூர்க்காவையே உற்று கவனித்துக் கொண்டிருந்தார். இருபத்தைந்து வயதிற்கு மேற்படாத இளைஞன் அந்த கூர்க்கா. நல்ல பலசாலி என்பதை பார்க்கும்போதே புரிந்து கொள்ளலாம். கறு கறுப்பான மேனி என்பதை அவன் தோற்றமும் குறுகுறுத்த கண்களும் விளக்கின. அவன் முகத்தில் ஏதோ ஒருவிதப் பீதி நிலவி இருந்தது. கண்கள் கலங்கி காட்சியளித்தன. அவர்களைப் பார்த்துத் 'திரு திரு'வென்று விழித்துக் கொண்டிருந்தான்.

அப்பாதுரை அந்த கூர்க்காவை அருகே அழைத்து அமரச் சொன்னார்.

"உனக்குத் தமிழ் பேசத் தெரியுமா?" என்று தமிழிலேயே கேட்டார் துரை.

"நல்லாத் தெரியும் சார்" என்றான் கூர்க்கா.

"சரி! நேற்றிரவு நீ தூங்காமல்தானே காவல் இருந்தாய்...?"

"ஆமாங்க சார்!"

"பின் எப்படி திலோத்தமாவைக் கொலை செய்து தூக்கிக்கொண்டு போயிருக்கிறார்கள்? நீ என்ன செய்து கொண்டிருந்தாய் அப்போது? தூங்கிக் கொண்டிருந்து விட்டாயா? அல்லது..." என்று துரை முடிக்கு முன்பே இன்ஸ்பெக்டர் ஆரம்பித்தார்:

"கொலைக்கு நீயும் உடந்தையா?"

"ஐயோ! இல்லே சார்! என்னை அப்படிச் சொல்லாதீங்க சார்!"

"நடந்திருப்பதைப் பார்த்தால் பின்னே எப்படிச் சொல்வது?" என்று முறைப்பாகக் கேட்டார் துரை.

"நீயும் இதற்கு உடந்தைதான்! உண்மையைக் கூறிவிடு! இல்லையென்றால் உடம்பு பழுத்துவிடும்" என்று பயமுறுத்தினார் இன்ஸ்பெக்டர்.

"சார்! உண்மையைச் சொல்றேன் சார்" என்று ஆரம்பித்தான் கூர்க்கா.

அவன் சொல்லப் போவதைக் கேட்க காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டனர் இருவரும்.

"ராத்திரி மூணு மணி இருக்கும் சார்! நான் 'கேட்'லே காவலிருந்தேன். இப்படியும் அப்படியுமா திரிஞ்சுக்கிட்டு சுத்திப் பார்த்துக்கிட்டிருந்தேன்! அப்போ கேட்டுக்கிட்டே இருக்கும் அசோக மரத்திலே ஏதோ சல சலன்னு சத்தம் கேட்டுது. நான் நிமிர்ந்து பார்த்தேன் ஒண்ணும் தெரியலே. அதுக்கப்புறம் கொஞ்ச நேரம் கழிச்சி 'தம்'முன்னு ஒரு சத்தம் கேட்டுது. நான் திகைத்துப் போய் நின்று பார்த்தேன். என் கண்ணுக்குமுன் எதுவும் தோணலே! ஆனா— அதுக்கப்புறம் என் பின்னாலே இருந்து ஒரே புகை என்னைச் சூழ்ந்து விட்டது. எனக்கு அவ்வளவுதான் தெரியும்! அதுக்கப்புறம் என்ன நடந்ததோ—பொழுது விடியற சமயம் தான் என் மயக்கம் தெளிஞ்சது. பார்த்தா...நான் கீழே விழுந்து கிடக்கிறேன். அந்தக் கொலையாளிதான் சார் என்னை மயக்கம் போடச் செய்து இருக்கணும்" என்று கூறி கண் கலங்கினான் கூர்க்கா.

"என்ன கதையா அளக்கிறாய் எங்களிடம்? உண்மையைச் சொல்லிவிடு" என்று மேலும் மிரட்டினார் இன்ஸ்பெக்டர். அவரைத் தம் கண்களால் சைகை காட்டி அமர்த்தினார் துரை.

"நீ சொல்வதெல்லாம் உண்மைதானே?" என்று கேட்டார் துரை.

"நாங்கள்ளாம் சத்தியத்துக்குப் பாடுபடறவங்க சார்! கடமைதான் சார் எங்களுக்குப் பெரிசு. உயிரைக் கொடுத்து பொறுப்பைக் கவனிச்சுக்குவோம் சார்" என்றான் கூர்க்கா.

"சரி, நீ போ" என்று கூர்க்காவிடம் கூறினார் துரை.

வணக்கம் போட்டுவிட்டு கூர்க்கா கேட்டை நோக்கி நடந்தான்.

"இரவு—பகல் இரண்டு வேளையிலும் இவன்தான் காவலா?" என்று இன்ஸ்பெக்டரிடம் கேட்டார் துரை.

"இல்லை! இரவில் கூர்க்காவும், பகலில் ஒரு தமிழனும் தான் காவல்காரர்களாம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"பகலிலாவது ஒழுங்காகப் பாதுகாக்க வேண்டுமே, தமிழன்? தன்னுடையது எதையும் அவன் பாதுகாத்துக் கொண்டு வருவதாகத் தெரியவில்லையே" என்றார் துரை.

இன்ஸ்பெக்டரும் அவர் வார்த்தைகளை ஆமோதிப்பவர் போலத் தலையசைத்தார்.

"திலோத்தமாவின் உறவினர்கள் யாருமே அவளுடன் இருப்பது கிடையாதா?" என்று கேட்டார் துரை.

"வேலைக்காரர்கள்தான் சொன்னார்கள்; சொந்தக்காரர்கள் யாருமே திலோத்தமாவுடன் இல்லையாம். இரவில் ஒரு சமையற்காரியும் ஒரு வேலைக்காரியும் மட்டுந்தான் இந்த பங்களாவில் தங்கியிருப்பார்களாம். அவர்களையும் விசாரிப்போம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

சமையற்காரியையும் வேலைக்காரியையும் அழைத்துக்கொண்டு கான்ஸ்டபிள் 565 அங்கே வந்தார்.

துரையும் இன்ஸ்பெக்டரும் அவர்களை நன்றாகக் கவனித்தனர்.

சமையற்காரியும், வேலைக்காரியும் திலோத்தமாவின் வீட்டில் வேலை செய்து பிழைப்பவர்களாகவே தோன்றவில்லை. அவர்கள் இருவரும் நிறைய பொன் நகைகள் அணிந்திருந்தனர். நல்ல உடைகள் உடுத்திருந்தனர். பார்வைக்கு அவர்களும் சினிமாவில் வரும் எக்ஸ்ட்ரா நடிகைகளைப் போலவே இருந்தனர்.

"இதில் யார் சமையற்காரி?" என்று கேட்டார் துரை.

"நான்தானுங்க!" என்று கூறிக்கொண்டே ஒரு அடி முன்னே வைத்தாள் ஒருத்தி.

"உன் பெயர் என்ன?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"நளாயினி..."

"நல்ல பெயர்தான்! நளாயினியின் சமையல் நளபாகமாகத்தான் இருக்கும்" என்றார் துரை.

அவள் புன்னகை பூத்துக்கொண்டே ஓரமாகப் போய் நின்று கொண்டாள்.

எஜமான விசுவாசம் கொஞ்சம்கூட இல்லாதவள்போல தென்பட்டாள் அவள். எஜமானி திலோத்தமா இறந்துவிட்டாளே என்று நளாயினியின் முகத்தில் கொஞ்சங்கூட கவலைக் குறியையே காணோம். இதையறிந்து அதிசயித்தார் துரை.

"உன் பெயர் என்னம்மா?" என்று கேட்டார் மற்றொரு பெண்ணிடம்.

"வீணாபாய்..." என்றாள் அவள்.

"இதுவும் நல்ல பெயர்தான்" என்றார் இன்ஸ்பெக்டர்.

வீணாபாய் நாணிக் கோணிக்கொண்டு ஓரமாகப் போய் ஒதுங்கி நின்று கொண்டிருந்தாள். அவள் வலது கால் கட்டை விரலைத் தரையிலே தேய்த்துக்கொண்டு நின்றிருந்தாள். அவள் கண்கள் கலங்கின.

"எங்கே இருக்கிறது உன் சித்தி வீடு? ஏன் போறும் நீ?"

"பார்த்து ரொம்ப நாளாச்சேன்னு பார்க்கப் போனேங்க. என் சித்தி வீடு மஞ்சக்குப்பத்திலே இருக்குதுங்க! மாசத்திலே ரெண்டு மூணு நாளைக்கு போய் ராத்திரி தங்கிகிட்டு வருவேனுங்க! வேணுமின்னு விஜுபாயைக் கேட்டு பாருங்க!" என்று கூறி மீண்டும் அழுதாள்.

"நாங்க கேட்டுக் கொள்வோம் விஜுபாயை! நீயே சொல்! திலோத்தமையைக் கொன்றவர்களை உனக்குத் தெரியாது?"

"தெரியாதுங்க! என் சாமி சத்தியமாத் தெரியாதுங்க! எனக்குச் சினிமாவிலே 'சான்ஸ்' வாங்கித் தர்ரதாகச் சொன்னவர்களைக் கொல்றதுக்கு எனக்கென்னங்க கொழுப்பு!" என்று கூறி 'ஓ' வென்று இரைந்து அழ ஆரம்பித்து விட்டாள், நளாயினி.

இன்ஸ்பெக்டர் பக்கத்திலிருந்த ஜவானை நிமிர்ந்து நோக்கினார். 555 கான்ஸ்டபிள் நளாயினியை அழைத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றார்.

அப்போது—

விஜுபாய் உடல் நடுங்கிக் கொண்டு பயந்து போய் காணப்பட்டாள்.

அப்பாத்துரை அவளை அமர்த்து முதலில் தேற்றினார். பிறகு மெல்ல கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார்.

"நளாயினி எப்படிப்பட்டவள் விஜுபாய்?" என்று கேட்டார் துரை.

"அவள் ஒரு சினிமாப்பைத்தியங்க! எப்படியாவது சினிமாவிலே சேர்ந்து சின்ன வேஷமாவது போட்டு நடிக்கணும் என்று துடிச்சிகிட்டு இருக்காங்க"

"திலோத்தமா அவளுக்கு சான்ஸ் வாங்கித் தருவதாகச் சொன்னாளா? உனக்குத் தெரியுமா?"

"நளாயினி சும்மா தொந்தரவு கொடுப்பாங்க! அதனாலே அம்மா... சரி வாங்கித் தரேன்னு சொல்லி வைப்பாங்க; அவ்வளவு தாங்க?"

"நளாயினிக்கும் திலோத்தமைக்கும் ஏதாவது தகராறு...?"

"எனக்குத் தெரிஞ்சி ஒண்ணுமில்லேங்க!"

"சரி திலோத்தமை எப்படிப் பட்டவள்? இரவு வேளையில் அவள் படுக்கை அறையில் அவள் மட்டும் தான் தனியாக படுத்துக் கொண்டிருப்பாளா?"

COMICS PDF TIMES

"ஆமாங்க! அம்மாவைப் பத்தி யாரும் அசட்டு பிசட்டுன்னு சொல்ல முடியாதுங்க. எந்த நேரத்துக்கு ஷூட்டிங்கிலிருந்து வந்தாலும் அவங்கத் தனியாத்தான் வருவாங்க! எந்த ஆம்பளையும் அவங்க கூட வந்து நான் பார்த்தது இல்லை!"

"அப்படியென்றால் தன்னந்தனிமையாகத் திலோத்தமை காரை ஓட்டிக் கொண்டு வருவளா?"

"ஆமாங்க! நேத்தும் அதுக்கு முன்னே ரெண்டு நாளும் அம்மாவேதாங்க கார் ஓட்டிக்கிட்டு வந்தாங்க! ஆனா அதுக்கு முன்னே ஒரு டிரைவர் இருந்தாருங்கோ!"

"அப்படியா? அவர் ஏன் நின்று விட்டார்?"

"அந்த டிரைவர் ஐயா ஒரு மாதிரிங்க! அவரு எப்பவும் அம்மா பின்னாலே வந்துகிட்டிருப்பாருங்க! என்னமோ அம்மாவுக்கும் அந்த டிரைவருக்கும் தகராறுங்கோ!"

"அந்த டிரைவர் பெயர்?"

"கலியமுதன்!"

"அந்த ஆள் இப்போ எங்கே இருக்கிறார் என்று—"

"எனக்குத் தெரியாதுங்க"

"சரி, இப்போது உன்னைப் பற்றிச் சொல்! உனக்குத் திருமணம் ஆகி விட்டதா?"

"இல்லீங்க—"

"ஏன், நீயும் தனாயினியைப் போல் கன்னியாக இருக்கப் போகிறாயா?"

"அப்படி ஒண்ணும் இல்லீங்க. யாரையாவது கட்டிக்கிடத்தான் நினைக்கிறேன். எங்க அண்ணன் மில்லிலே வேலை செய்யறாருங்கோ. அவர்தான் எனக்கு மாப்பிள்ளை தேடிக்கிட்டிருக்காரு. கண்ணாலம் ஆகிற வரைக்கும் நாலு காசு சேர்த்துக்கப் போறேன்னு நான் சொன்னேனுங்க. அவர் சரின்னாரு. கண்ணாலம் ஆனப்புறம் நான் வீட்டு வேலை செய்ய மாட்டேங்க" என்றாள் விஜயா.

தனாயினியின் குணத்துக்கும் விஜயாவின் குணத்துக்கும் உள்ள வேறுபாட்டை எண்ணி வியந்தார் துரை. ஒருத்தி சினிமாக்காரியாக விழைகிறாள்! மற்றவள் குடும்பப் பெண்ணாகக் காத்துக் கொண்டிருக்கிறாள்!

மேலும் அவளை ஏதும் கேள்விகள் கேட்காமல் அங்கு இருந்து புறப்பட்டார்.

இன்ஸ்பெக்டரும் அப்பாதுரையுடன் புறப்பட்டார்.

பங்களாவை விட்டு வெளியே வந்தனர்.

"இன்ஸ்பெக்டர் சார்! கொலைகாரன் கேட்டிலிருந்து கூர்க்காவை மயக்கச் செய்துவிட்டு உள்ளே புகுந்து இருக்

கிறார்கள். திலோத்தமாவின் படுக்கையறையில் ஒரே ஒரு காலடி மட்டும் தென்படுகிறது. கொலையாளிகள் எந்தத் தடயமும் தெரிந்து விடாதபடி சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை பங்களாவுக்கு வெளியே காம்பவுண்டுக்குள் வேறு ஏதாவது தடயங்கள் தென்படுகின்றனவா என்று கண்டுபிடிக்க வேண்டும்" என்றார் அப்பாதுரை.

"ஆமாம், முக்கியமாக நாம் இதை முதலில் கவனிக்க வேண்டும்" என்றார் இன்ஸ்பெக்டர்.

பிறகு இருவரும் திரும்பவும் கேட் வழியாக பங்களாவுக்குள் நுழைந்தனர்.

## 7

செங்கற்பட்டுக்கு அண்மையில் இருந்த அந்தச் சிற்றூரின் பெயர்தான் பழவேலி. அந்தக் கிராமத்திற்குத் தெற்கே அனாதைபோலத் தனித்துப் பாழடைந்திருக்கும் அந்தக் கோவிலிலே, பகல் நேரங்களில் ஆடு மாடுகளை மேய்க்கும் சிறுவர்கள் நிழலுக்குத் தங்குவதுண்டு. அந்தக் கோவிலுக்கு பேய்க் கோவில் என்றொரு பெயரும் வழங்கப்பட்டது.

அன்று காலையிலே பழவேலி கிராமத்திலிருந்து ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு சென்ற நான்கு சிறுவர்கள், நண்பகல் நேரத்தில் அந்தப் பேய்க் கோவிலுக்கு எதிராக இருக்கும் ஒரு பெரிய குட்டையிலே அவைகளை ஓட்டிவிட்டு அவர்கள் மட்டும் கோவிலுக்குள் நுழைந்தனர் விளாங்காய் வேட்டைக்காக.

அங்கே ஓரிடத்திலே கோவிலிலே பல கழுகுகளும் காக்கைகளும் வட்டமிடுவதைக் கண்டு அவர்கள் அங்கு சென்றனர். அவர்கள் அங்கே கண்டது—

உருண்டு திரண்ட பருத்த உடல்கள் நான்கு! காட்டு நரிகள் கிழித்துச் சிதைத்து நின்றுவிட்ட மீதி உடல்களிலிருந்தே அவர்கள் தடித்த திரேகத்தினர் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது!

கண்ணாராவிக் கோலத்திலே காட்சி அளித்த அந்த நான்கு பிணங்களிலே ஒன்றுக்குத் தலை சிதைந்திருந்தது. மற்றதற்கு ஒரு கையே காணோம். வேறொன்றும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாத அளவு நரிகளால்

சிதைக்கப்பட்டுக் காக்கை கழுகுகளால் கொத்தப்பட்டுக் கிடந்தது.

அந்த நான்கு பிணத்திலே இரண்டு பிணத்தின் முகங்கள் மட்டும் சிதையாமல் இருந்தன. ஆனால் எல்லாப் பிணங்களுமே ஏறக் குறையச் சின்ன பின்னமாகக் கிடந்தன.

சிறுவர்கள் பயந்து ஓட்டமெடுத்தனர் கிராமத்தை நோக்கி. நேரம் ஆக ஆக செய்தி காட்டுத் தீபோல் சுற்றிலும் உள்ள ஊர்களுக்குப் பரவியது. மக்கள் பேய்க் கோயிலை நோக்கி விரைந்தனர்.

பழவேலி கிராமத்தின் முன்சீப் வரதராசன் ஓடோடி வந்தார்.

“உடனடியாகச் செங்கற்பட்டு போலீசுக்கு செய்தியை எட்டவிட வேண்டும்” என்றார் முன்சீப்.

வெட்டியானும் தலையாரியும் ஓட்டமாக ஓடினார்கள் செங்கற்பட்டுக்கு.

“இந்த நாலு பேரும் இங்கே எப்படி வந்து செத்துப் போனாங்க?”

“எப்படியோ செத்துட்டாங்க. ஆனா—இவங்க யாருன்னு தெரியலியே...”

“ஒருவேளை, கொஞ்ச நாளா நம்ம பக்கம் கொள்ளை அடிச்சுக்கிட்டு திரிகிற அந்த இராக் கொள்ளைக்காரனுங்க இவங்கதானோ?”

“இருக்கலாம்... ...இருக்கலாம். ஆட்களைப் பார்த்தா கொள்ளைக்காரனுங்களாட்டந்தான் தெரியுது!”

“கொள்ளைக்காரனுங்க அந்தக் கோணை மலையிலே தானே இருக்கிறதா நினைச்சுக்கிட்டிருந்தேன். இவனுங்க இந்தப் பேய்க் கோயிலிலா இருந்தானுங்க?”

“பகல்லே கோணை மலையிலே எங்கேயாவது குகைக்குள்ளே இருந்துவிட்டு இரவிலே இந்தப் பேய்க் கோவிலுக்கு வந்திடுவாங்கப் போலிருக்கு!”

“ஆளுங்க ஒரு மொத்தமா கூண்டோடு ஒழிஞ்சானுங்க. எப்படிச் செத்திருப்பானுங்க?”

“எல்லாத்துக்கும் தெய்வம்னு ஒண்ணு இல்லே. அது எத்தனை நாளைக்குத்தான் பார்த்துக்கிட்டிருக்கும். இவர்களோட அக்கிரமங்களைப் பொறுக்காமல் அழித்தொழித்து விட்டது.”

இவ்வாறு அந்தக் கிராமவாசிகள் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள். அவரவர்களுக்குத் தெரிந்ததை அங்கே பேசினார்கள்.

ஒரு மணி நேரம் ஓடியிருக்கும்—

செங்கற்பட்டிலிருந்து போலீஸ் அதிகாரிகளும் காவலர்களும் விரைந்து வந்தனர். அந்தப் பிணங்களை கோயிலில் இருந்து அப்புறப்படுத்தி ஆம்புலன்ஸ் மூலம் செங்கற்பட்டுக்குக் கொண்டு சென்றனர்.

செங்கற்பட்டுப் போலீஸ் ஸ்டேஷனிலே மூன்று உயர்தர அதிகாரிகள் அமர்ந்து ஆலோசனை செய்து கொண்டிருந்தனர்.

"இறந்தவர்கள் யார்? எப்படி இறந்தார்கள்? பேய்க் கோயிலுக்கு அவர்கள் போக வேண்டிய அவசியம் என்ன?"

இவ்விதக் கேள்விகளுக்கு எந்தப்பதிலும் தோன்றாமல் விழித்துக் கொண்டிருந்தனர்! நான்கு பிணங்களையும் 'போஸ்ட் மார்ட்டம்' செய்து பரிசோதித்து ஏதாவது விஷயம் அறிவதற்கும் முடியாமல் நரிகளும், காக்கைகளும், கழுகுகளும் கவ்விக் குதறி விட்டிருந்தன. ஆகவே ஏதாவது ஷைக்கடியினாலோ, அல்லது விஷத்தினாலோ அவர்கள் இறந்திருக்கக் கூடுமா என்பதையும் தெரிந்து கொள்ளமுடியாமல் அவர்கள் குழம்பினர். அந்த விஷயத்தில் உடனடியாக மேற்கொண்டு என்ன செய்வதென்று புரியாமல் குழம்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது—"அந்த நான்கு பிணங்களையும் அவை கிடந்த நிலைகளிலேயே படம் பிடித்தாகி விட்டது! அவர்கள் பேய்க் கோயிலில் விழுந்து கிடந்த இடத்தைச் சுற்றிலும் சிதறிக் கிடந்த, புகைத்துப் போட்ட துண்டு பீடிகளையும், சிகரெட் துண்டுகளையும் பொறுக்கிக் கொண்டு வந்திருக்கிறோம், பீடிகளில் இருக்கின்ற லேபிள்கள் மூலம் அவை எம். ஆர். எஸ், பீடிகள் என்று தெரிகின்றன! சிகரெட் துண்டுகளைப் பரிசோதித்துப் பார்த்ததில் அங்கிருந்து எடுக்கப்பட்ட ஐந்து துண்டுகளும் 'ஸ்டேட் எக்ஸ்பிரஸ்' சிகரெட்டுகள் என்றே தோன்றுகின்றன! இவைகளைக் கொண்டுதான் மேற்கொண்டு புலனறிய வேண்டும்!" என்றார் இன்ஸ்பெக்டர் இராகவன்.

"இந்த நால்வரும் கோணமலைக் கொள்ளைக் காரர்களாயிருப்பார்களோ? அவர்களைத் தான் நம்மால் பிடிக்க முடியவில்லையே! மராட்டிய வீரர்களைப் போல் மலைகளில் ஒளிந்து கொண்டு மக்களை வாட்டி வரும் அந்த மடையர்கள் இவர்களாக இருந்தால்...?" என்று கொக்கி போட்டு நிறுத்தினார் ஜில்லா போலீஸ் அதிகாரி செல்லத்துரை.

"இந்த விஷயத்தை நாம் உடனடியாகக் கவனித்தாக வேண்டும்! ஏற்கனவே நமக்கு ரொம்பவும் கெட்ட பேர்—கோணமலைக் கொள்ளைக் கூட்டத்தைப் பிடிக்க முடியாததால்! நமது நல்லவேளை—இந்த நால்வரும் அந்தக் கொள்ளைக் காரர்களாக இருந்துவிட்டால் தொல்லை தீர்ந்தது!" என்று செல்லத்துரையே மீண்டும் பேசினார்.

பிறகு—அங்குப் பேச்சு ஏதும் நிகழவில்லை, ஆழ்ந்த சிந்தனையோடும் அமைதியோடும் இருந்தார்கள். அனைவரும்.

## 8

துப்பறியும் அப்பாத்துரை தமது அருள் இல்லத்திலே அன்றைய செய்தித்தாளைப் படித்துக் கொண்டு இருந்தார். 'தமிழ்ச் செய்தி' என்ற அந்த தினத்தாளின் கடைசி பக்கத்தில் இருந்த அந்தச் செய்தியை நிதானமாகவே படித்தார்.

"செங்கற்பட்டுக்குச் சமீபமாக உள்ள பழவேலி என்ற கிராமத்திலே, பாழடைந்து கிடக்கும் 'பேய்க் கோவில்' என அழைக்கப்படும் பழைய சிவன் கோயிலிலே பருத்த திடகாத்திரமான நான்கு பிணங்கள் காணப்பட்டன! மாடு மேய்க்கும் சிறுவர்கள் கண்டு ஊராருக்குத் தெரியப் படுத்தினர். பிறகு போலீசார் விஷயம் அறிந்து புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

"அந்த வட்டாரத்து மக்கள் இறந்து கிடந்த நால்வரும், சமீப காலமாகத் தொந்தரவு கொடுத்துக் கொண்டு வரும் கோணமலைக் கொள்ளையர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று பேசிக் கொள்கின்றனர்.

"கொள்ளையர்கள் பகலில் கோணமலைக் குகைகளிலும் இரவில் அந்தப் பேய்க் கோயிலையும் தங்கள் வாசஸ்தலங்களாக கொண்டிருந்தனரோ என்றும் சந்தேகம் ஏற்படுகிறது.

"அந்த நான்கு பிணங்களும் விலங்குகளாலும் பறவைகளாலும் சின்னா பின்னமாக்கப்பட்டுக் கிடந்தன! போலீஸார் தீவிரமாகப் புலனறிந்து வருகின்றனர்."

அப்போது—பிரமீளா அந்த அறைக்குள் நுழைந்தாள்.

"திரையழகி திலோத்தமை கேஸ் விஷயமாக என்ன தான் செய்யப் போகிறீர்கள்?"

"என்ன செய்யலாம் என்று தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!"

COMICS PDF TIMES

"அந்த ஆள் நான்கு நாட்களுக்குள் ஒரு லட்ச ரூபா யோடு வருவதாகச் சொல்லி விட்டுப் போனாரே! இன்றைக்கு நான்காவது நாள். இன்றைக்கு வந்து விடு வார் என்றே எண்ணுகிறேன் என்றாள் பிரமீளா.

"வரக்கூடும்! அந்தச் செல்வமணிக்குக் கலியமுதன் என்ற வாரோட்டி மீது சந்தேகம்! நான் வாரோட்டிக் கலியமுதனைக் கண்டு பிடித்து விட்டேன். 'ஓட்டல் அமரா' வுக்கு எதிரில் இருக்கும் டாக்சி நிற்குமிடத்தில் பார்த்தேன் அவனை. இன்று அவனை இங்கு வரச்சொல்லி யிருக்கிறேன். இன்னும் அரைமணி நேரத்தில் அவன் இங்கே வந்து விடுவான்."

"வருவான் என்பது என்ன நிச்சயம்? உஷாராகி ஓடிப் போய் விட்டால்...?"

"ஓடிப் போவதற்கு எண்ணமிருந்தால் அவன் எப்போதோ ஓடிப் போயிருக்க வேண்டுமே! ஒன்று அவன் கொலையில் சம்பந்தப் படாதவனாக இருக்க வேண்டும்! அல்லது, கொலையில் சம்பந்தப்பட்ட மிகக் கொடியவனாக வும் கடின மனம் உடையவனாகவும் எந்த ஆபத்தையும் சமாளிக்கும் திறமையுள்ளவனாகவும் இருக்க வேண்டும்!"

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால்...?"

"நிச்சயம் கலியமுதன் இங்கே வருவான். நான் யார் என்பது அவனுக்குத் தெரியாது! இன்ஸ்பெக்டர் கிருஷ்ண சாமி தான் எப்படியும் அவனை நம் முகவரிக்கு அனுப்பி வைப்பதாகச் சொன்னார்" என்றார் துரை.

"கொலையைச் செய்தவன் நிலையைக் கண்டு நாம் அவனைக் கண்டுபிடித்து விடலாம். இல்லையா!" என்றாள் பிரமீளா.

"கண்டு பிடித்து விடலாம். ஆனால் ஒரு சிலர் விஷயத் தில் அகத்தின் அழகு முகத்தில் தெரிவதில்லை. அப்படிப் பட்டவர்கள் மிகமிக அபாயகரமான பேர்வழிகள்! அந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் பேர் இருக்க மாட்டார் கள்! குற்றவாளிகளிலேயே நூற்றுக்கு ஐந்து பத்துத் தேறலாம்!" என்றார் துரை.

அப்போது—அறைக்கு வெளியே நின்று கொண்டு 'சார்!' என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தான் ஒருவன்.

வாங்க மிஸ்டர் கலியமுதன்! என்று அந்த டிரை வரை வரவேற்றார் துரை.

கலியமுதன் அப்பாத்துரையை நெருங்கி வந்து நின்ற தும் அவர் எதிரே இருந்த நாற்காலியைக் காட்டி,

"அமருங்கள் மிஸ்டர்!" என்றார். கலியமுதன் அமர்ந்து கொண்டான்.

"நான் சீக்கிரம் போக வேண்டும் சார்! விஷயத்தை..." என்று ஆரம்பித்தான் கலியமுதன்.

"இதோ அனுப்பி விடுகிறேன் மிஸ்டர்! இரண்டொரு கேள்விகள் அவ்வளவுதான்!"

"உங்களைப் பார்த்தால் ஏதோ வேதனைப் பட்டுக் கொண்டிருப்பவர்போலத் தோன்றுகிறீரே, என்ன விஷயம்" என்று ஆரம்பித்தார் துரை.

"வேதனையில்லாத மனிதன் யார் சார்? விருப்பு வெறுப்பு இல்லாதவனே வேதனையில்லாத மனிதன். ஆனால் விருப்பு வெறுப்பற்ற மனிதன் யார்? அப்படியொருவன் இருந்தால் அவனே கடவுள்!" என்றான் கலியமுதன்.

"அது சரி, மிஸ்டர்! நீங்கள் எவ்வளவு நாட்களாக டாக்ஸி டிரைவராக இருக்கிறீர்கள்?"

"இன்னும் ஒரு வாரம்கூட ஆகவில்லை சார், இந்தத் தொழிலுக்கு வந்து."

"அப்படியானால் இதற்கு முன்பு..."

"டிரைவராகத்தான் இருந்தேன். ஆனால் டாக்ஸி டிரைவராக அல்ல..."

"விளங்கவில்லை!"

"ஒரு நடிகையின் காரை ஓட்டிக் கொண்டிருந்தேன்."

"எந்த நடிகை?"

"திரையழகி திலோத்தமா..."

"ஓஹோ! பாவம்...செத்துப் போய்விட்டாள்..."

"தவறு சார்! யாரோ சாகடித்து விட்டார்கள்."

"ஆமாம்...சாகடித்ததோடு நில்லாமல் சவத்தையும் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள்."

"ஆச்சரியமாகத்தான் இருக்கிறது!"

"நீ ஏன் நடிகையிடமிருந்து பிரிந்து டாக்ஸி ஓட்ட வந்து விட்டாய்?"

"பிடிக்கவில்லை..."

"எது...?"

"மனது பிடிக்கவில்லை..."

"யாருக்கு...?"

இருவருக்கும்தான்."

"ஏதாவது தகராறு?"

"அப்படிச் சொல்வதற்கில்லை. என்னவோ திலோத்தமாவுக்கு என்மேல் வெறுப்பு ஏற்பட்டு விட்டது. நானும்

விலகிக் கொள்வதுதான் நல்லது என்று எண்ணி விலகிக் கொண்டேன்."

"வெறுப்புக்கு என்னதான் காரணம்?"

"முன்பின் அறியாதவர்கள் மீதுகூட சில சமயங்களில் நமக்கு இனம் புரியாத வெறுப்பு தோன்றுகிறது இல்லையா? அதற்கு என்ன காரணம் சொல்வது?"

"அப்படியானால் உங்களுக்காவது திலோத்தமாவின் மீது கொஞ்சமேனும் வெறுப்பு ஏற்பட்டு இருக்கக்கூடும், வேலையை விட்டு நீங்கிய பிறகு...."

"இல்லவே இல்லை சார்! எனக்கு திலோத்தமாவின் மீது வெறுப்பு ஏற்பட வழியே இல்லை"

"ஏன் இல்லாமல்?"

"அவளே என்னை வெட்டிப் போட்டிருந்தாலும் எனக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்காது சார்..."

"அது ஏன் அப்படி?"

"அதைச் சொல்வதால் இனி என்ன பலன் அடையப் போகிறேன்?"

இந்த வார்த்தைகளை அவன் கூறியபோது அவன் கண்களில் நீர் கசிந்தது!

வேலைக்காரி விளம்பாய் சொன்னதுபோல் திலோத்தமாவை இவன் மனமாரக் காதலித்து, அவள் இவனை நிராகரித்து விட்டிருப்பாளோ என்று யோசித்தார் துரை.

"திலோத்தமா இறந்து விட்டதைப் பற்றி உண்மையில் உங்களுக்கு இவ்வளவு வருத்தமா?" என்றார் துரை.

"அவள் இறப்புக்காக என்னைவிட வருத்தப்படக் கூடியவர்கள் வேறு யாருமே இருக்க மாட்டார்கள் சார்..." என்றான் கலையமுதன்.

அடைய முடியாத பொருளின் மீதுதான் ஆசை அதிகமாகத் தோன்றும் என்பதுபோல கலையமுதனுக்குத் திலோத்தமாவின் பேரில் அதிகப் பாசம் உண்டாகி இருக்கிறது. மனமார அவன் அவளை நேசித்து இதயத்தில் பூசித்து வந்திருப்பான். புரிந்துகொண்ட திலோத்தமா இவனை வெறுத்து வந்திருப்பாள் என்று எண்ணிக் கொண்டார் துரை.

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் திலோத்தமாவுக்கும் உங்களுக்கும் நெருக்கமான நேசம் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன்" என்றார் துரை.

"நேசம் அல்ல சார்! நெருக்கமான உறவு இருந்திருக்கிறது. இந்த உறவை அவள் யாரிடமும் வெளியிடக் கூடாது என்று என்னிடம் கேட்டுக்கொண்டதால் நான்

இதுவரை யாரிடமும் சொல்லவில்லை. இப்போது திலோத்தமா உயிருடன் இல்லை. ஆகவே இப்போது சொல்வதால் தவறு ஏதும் ஏற்படாது என்று எண்ணியே எங்களுக்குள் இருந்த உறவைச் சொல்லி விடுகிறேன்..." என்று ஆரம்பித்தான் கலையமுதன்.

அப்போது துரையின் முகத்திலே ஒரே ஆச்சரியம் நிரம்பி வழிந்தது.

'திலோத்தமா யாருக்கும் தெரியாமல் எப்படி செல்வமணியைக் காதலித்து வந்திருக்கிறாளோ அது போலவே யாருக்கும் தெரியாமல் கலையமுதனைக் காதலித்து வந்திருக்கிறாள் போலும். ஆகவேதான் அவர்களுக்குள் நிலவிய உறவை வெளியே சொல்லக் கூடாது என்று வேண்டிக் கொண்டிருக்கிறாள்' என்று எண்ணிக்கொண்டார் துரை.

அவள் ஒரு தேர்ந்த நடிகையாயிற்றே! இப்படி நடிக்க அவளுக்கு இலகுவாகத்தான் இருந்திருக்கும்!

'இப்படி அவளுக்கு இன்னும் எத்தனை காதலர்களோ?' என்ற கேள்வியும் அவருள் எழுந்தது.

"உனக்கும் திலோத்தமாவுக்கும் உள்ள உறவை விளக்கமாகச் சொன்னால் நல்லது, மிஸ்டர் கலையமுதன்" என்றார் துரை.

கலையமுதன் கண்களைத் துடைத்துக்கொண்டு தனக்கும் அவளுக்கும் இருந்த உறவை விளக்கமாகக் கூறினான்.

அதைக் கேட்டு மேலும் ஆச்சரியப்பட்டுப் போனார் அப்பாதுரை. கலையமுதனைத் திலோத்தமா ஏன் வாயைக் கட்டிப் போட்டிருக்கிறாள் என்பது தெளிவாக விளங்கியது அவருக்கு.

"மிஸ்டர் கலை! போலீஸ் உங்களைச் சந்தேகிக்கவும் காரணம் இருக்கிறது. திலோத்தமா உயிருடன் இருக்கும் போது உங்கள் இருவருக்கும் இடையே மனக்கசப்பு இருந்தது என்பது அவர்களுக்குத் தெரியும். அதுவுமில்லாமல் திலோத்தமாவைக் கொன்றவர் நீங்களே என்று ஒரு நபர் சந்தேகப்பட்டு என்னிடமே சொல்லியிருக்கிறார்."

"யார் அந்த நபர்? என் திலோத்தமாவை நானே கொன்றேனா?" என்று கலையமுதன் கேட்டபோது மீண்டும் அவன் கண்களில் நீர் வழிந்தது.

"அந்த நபர் யாரென்று எனக்கே தெரியாது. போகப் போக புரிந்து கொள்வேன்" என்று கூறிய துரையின் மனக் கண்முன் செல்வமணி காட்சி அளித்தார்.

"அப்படியானால் திலோத்தமாவை யார்தான் கொன்று இருப்பார்கள்? நீங்கள் யாரைச் சந்தேகிக்கிறீர்கள்?

திலோத்தமாவின்மீது நீங்கள் உயிரையே வைத்திருந்தீர்கள். அவளைச் சாகடித்து விட்டார்கள் சண்டாளர்கள். உங்கள் சந்தேகம் யார்மீது? அதைச் சொல்லுங்கள். உண்மையை கண்டுபிடித்து விடுகிறேன்" என்று நம்பிக்கையூட்டும் வண்ணம் பேசினார் துரை.

என்னவோ சொல்ல முனைந்து, பிறகு தயங்கினான் கலையமுதன்.

அதைப் புரிந்துகொண்ட துரை, இதமான வார்த்தைகள் பேசி அவன் யாரைச் சந்தேகிக்கிறான் என்று கேட்டு அறிந்து கொண்டார்.

கலையமுதனின் சந்தேகக் கண்களுக்குச் சான்றான ஆள் 'இன்னார்' என்று பெயரைச் சொன்னதும் பெருத்த ஆச்சரியம் ஏற்பட்டது துரைக்கு.

"இவன் திலோத்தமா, சரஸ்வதியாக இருந்தபோது பள்ளிப் பருவத்துக் காதலன்!" என்று கூறினான் கலையமுதன்.

சிறிது நேரம் பேசாமல் சிந்தித்துக்கொண்டு இருந்த துரையின் மனத்திலே மீண்டும் தோன்றினார் செல்வமணி.

"ஏன் மிஸ்டர் கலையமுதன்! திலோத்தமாவைப் பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?" என்று கேட்டார் துரை.

"கள்ளங் கபடமற்ற பெண் அவள். எவ்வளவு குறுகிய காலத்தில் புகழ் அடைந்தாளோ, அவ்வளவு குறுகிய காலத்திலேயே அவள் வாழ்க்கை முடிந்து விட்டது. நாசகாலன் அவளது நல்ல வாழ்க்கையைக் கெடுத்து விட்டான்."

"உங்கள் சந்தேகப்படி அந்த நாசகாலன் நாடக நடிகர் மணி தானா?"

"அவனாகத்தான் இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. அவனாக இருப்பானோ என்று ஐயப்படுகிறேன். அவ்வளவுதான்."

"சரி, மிஸ்டர் கலையமுதன்! எந்தக் காரணத்தைக் கொண்டும் நீங்கள் சென்னையை விட்டு வெளியே போகக் கூடாது. ஏனென்றால் நீங்கள் எனக்கு ஏதாவது ஓர் அவசியமான நேரத்தில் தேவைப்பட வேண்டியவராய் இருப்பீர்கள். அப்போது நீங்கள் இல்லாது போனால் என்னுடைய முயற்சிகள் எல்லாம் வீணாகி விடும். சரி நீங்கள் போகலாம்...." என்று கடைசியாகக் கூற வாயெடுத்தவர், "செல்வமணி என்று யாரையாவது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார் துரை.

சிறிது நேரம் யோசித்துப் பார்த்த கலையமுதன், "இந்தப் பெயரோடு எனக்குத் தெரிந்தவர்கள் யாரும் இல்லை சார்!"

என்று கூறிவிட்டு எழுந்தான் கலையமுதன். பிறகு அங்கிருந்து கிளம்பினான்.

அப்பாதுரை சிந்தனையில் மூழ்கியிருந்தார்.

## 9

கலைவாணர் அரங்கத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. 'எல்லாம் ஒரு பெண்ணுக்' என்ற நாடகம் அறுபதாவது முறையாக அந்தத் தியேட்டரில் நடைபெறுகிறது.

மேடை நடிகன் மணிதான் அந்த நாடகத்தின் கதாநாயகன். அவனுடைய திறமையான நடிப்பைப் பற்றி தமிழ்நாட்டு பத்திரிகைகள் பலவாறு பாராட்டி எழுதி இருக்கின்றன!

முதல் வகுப்பு டிக்கட்டுகளைப் பெற்றுக்கொண்டு அப்பாதுரையும் அவர் மனைவி பிரமிளாவும் நாடக மண்டபத்திற்குள் சென்று அமர்ந்தனர்.

நாடகம் துவங்கியது.

இடைவேளையும் வந்தது.

அந்த நாடகத்திற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்த திரைப்பட நடிகர் சந்திரகுமார் மேடைமீது ஏறினார். தியேட்டரே அதிரும்படி ரசிகர்கள் கை தட்டி ஆரவாரம் செய்தனர். யாரோ ஒருவர் சற்று நேரம்வரை தொடர்ந்து தட்டிக்கொண்டிருந்தார்.

யார் அவர் என்பதறிய இயற்கையான போக்கோடு திரும்பிப் பார்த்தார் துரை. உடனே அவருக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது! அவர் அங்கே செல்வமணியைக் கண்டார். செல்வமணிதான் நீண்ட நேரம் கையொலி எழுப்பிக்கொண்டிருந்தவன். அவனும் அப்பாதுரையைப் பார்த்து விட்டான்.

"நீங்களா? நான் கவனிக்கவே இல்லை. நாடகம் துவங்கிய பிறகுதான் வந்தீர்கள்" என்றான் செல்வமணி

"பரவாயில்லை. உங்களை நாங்கள் இங்கே எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேர்ந்ததே!"

"நாடகம் முடிந்ததும் இரவு பத்து மணிக்குள் உங்களை வந்து சந்திக்க எண்ணியிருந்தேன். நாடகம் ஒன்பதரை மணிக்கெல்லாம் முடிந்து விடும்!"

"[illegible]து. போகும்போது மூவருமாகப் போய்விடலாம்" என்றார் [illegible]

மேடையில் திரையுலகப் புகழ் நடிகர் சந்திரகுமார் பேச ஆரம்பித்தார். துரையும் செல்வமணியும் தங்கள் பேச்சை நிறுத்திக் கொண்டனர்.

சந்திரகுமாருடைய ஒவ்வொரு பேச்சுக்கும் ரசிக மகா ஜனங்கள் கைதட்டி ஆரவாரித்தனர் யாவரையும்விடச் செல்வமணிதான் சந்திரகுமாரின் சொற்பொழிவில் அதிக ஆனந்தம் கொண்டான், ஆரவாரம் செய்தான் என்பதைத் துரை அவ்வப்போது திரும்பிப் பார்த்து உணர்ந்து கொண்டார்.

பத்து நிமிடங்களுக்குள் பேச்சை முடித்துக் கொண்டான் சந்திரகுமார்.

மீண்டும் நாடகம் ஆரம்பித்தது. நான்கு ஐந்து காட்சிகள் நடைபெற்றதும் நாடகம் முடிந்து விட்டது.

எல்லோரும் வெளியே சென்று கொண்டிருந்தனர். அப்பாதுரையும் பிரமிளாவும் வெளியே வராந்தாவில் வந்து நின்றனர் செல்வமணியும் உடன் நின்றிருந்தான்.

“பிரமிளா! நீ மட்டும் இவரை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போ. நான் பத்து மணிக்குள் வந்து விடுகிறேன்” என்று கூறி அவள் முகத்தை உற்று நோக்கினார் துரை

பிரமிளா முகத்தில் கலவரம் தெரிந்தது. அதை உணர்ந்துகொண்ட அப்பாதுரை பிரமிளாவுக்கு நெருக்கமாக வந்து—

“பரவாயில்லை. ஏதும் யோசிக்காதே! செல்வமணியோடு வீட்டுக்குப் போ. விஷயம் இருக்கிறது” என்று மெல்லக் கூறினார்.

அவள் மெதுவாகத் தலையசைத்தாள், அரை மனத்தோடு ஒத்துக் கொள்வது போல.

“என்ன மிஸ்டர் செல்வமணி, நேராக நுங்கம்பாக்கம் என் வீட்டிற்குச் செல்வதற்குத் தயாராக இருக்கிறீர்கள், இல்லையா?”

“ஓ எஸ்! பணம் கூட என் கைப் பையில் தயாராகவே வைத்திருக்கிறேன்” என்றான் செல்வமணி.

“இவ்வளவு பெருந் தொகையைத் தியேட்டருக்குக் கொண்டு வரலாமா?” என்று கேட்டுக் கொண்டே செல்வமணியை நோக்கினார் துரை.

அப்போது செல்வமணி எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தான் அவன் பார்த்துக் கொண்டிருந்த திசையிலே மேக்-அப் ரூம் இருந்தது.

மேக்-அப் ரூமின் வாயிலுக்கு வெளியே நின்றுகொண்டு யாரோ ஒரு பெண்ணோடு பேசிக் கொண்டிருந்தான் திரை நடிகர் சந்திரகுமார். அவனையே கவனித்துக் கொண்டிருந்தான் செல்வமணி.

“என்ன மிஸ்டர் செல்வமணி” என்று அவன் தோளிலே தட்டிய போதுதான் செல்வமணி அங்கிருந்து கண்களை அகற்றினான்.

“புறப்படுகிறீர்களா? எனக்கு ஒரு அவசரமான வேலை. இன்ஸ்பெக்டரை உடனடியாகப் பார்க்க வேண்டும். மறந்தே போனேன் எப்படியும் பத்து மணிக்குள் வந்து விடுகிறேன்” என்றார் துரை.

அங்கு ஒரு டாக்ஸி வந்து நின்றது. செல்வமணி டிரைவருக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டான். பிரமீளா பின்னால் அமர்ந்து கொண்டாள்.

“நேராக நுங்கம்பாக்கம் லேக் ஏரியாவுக்கு போப்பா” என்றார் வெளியே இருந்த துரை.

டாக்ஸி பறந்தது.

அப்பாதுரை மேக்-அப் ரூமை நோக்கி நடந்தார்.

மேக்-அப் ரூமுக்குள் நுழையும்போது, வெளியே நின்று கொண்டிருந்த நடிகர் சந்திரகுமாரையும் அவனோடு பேசிக் கொண்டிருந்த பெண்ணையும் நன்றாக உற்றுப் பார்த்தார் அப்பாதுரை.

அந்தப் பெண்ணும் ஒரு திரைப்பட நடிகையாகவே இருக்க வேண்டும் என்று அவள் நடை உடை பாவனைகளும் பேச்சும் அவருக்குத் தெரிவித்தன.

நேராக மேக்-அப் ரூமுக்குள் நுழைந்து சென்றார். நடிகர்களும் நடிகைகளும் வித்தியாசம் இல்லாமல் பக்கத்தில் பக்கத்தில் நின்றுகொண்டு வேஷத்தை கலைத்துக் கொண்டிருந்தனர்.

அப்பாதுரை ஓரிடத்தில் நின்றுகொண்டு சுற்றிலும் பார்த்தார். பிறகு தம் பக்கத்திலேயே வேஷத்தைக் கலைத்து விட்டு நின்றிருந்த அந்த நடிகரைக் கவனித்தார்.

“என்ன மிஸ்டர் மணி! கொஞ்சம் வருகிறீர்களா?” என்று கேட்டார் துரை.

“யார் சார் நீங்கள்? என்ன வேண்டும்?” என்று கேட்டான் மணி.

“அப்புறம் தனியாக வாருங்கள் பேசுவோம்!” என்று கூறி அவனை அழைத்துக்கொண்டு தியேட்டரின் மேல் மாடிக்கு ஏறிச் சென்றார் துரை.

ஏதும் புரியாத பரிதாப நிலையிலேயே அப்பாதுரையைப் பின்தொடர்ந்தான் மணி.

மாடியில் அப்பாதுரை ஒரு சோபாவில் அமர்ந்து கொண்டு மணியையும் தம் பக்கத்தில் அமரச் செய்தார்.

"என்ன சார் விஷயம்? யார் நீங்கள்? என்னை ஏன் இங்கு அழைத்துக்கொண்டு வந்தீர்கள்?" என்று பரபரப்போடு கேட்டான் மணி.

"அவசரப்படாதீர்கள். சொல்கிறேன். உங்கள் பெயர் தானே மணி? இந்த நாடகத்திலே கதாநாயகனாக நடித்தது நீங்கள் தானே?" என்று கேட்டார் துரை.

இரண்டு கேள்விகளுக்கும் ஒரே பதிலாக, "ஆமாம்" என்றான் மணி.

"இப்போது ஏதாவது உங்களைக் கவலை உறுத்திக் கொண்டிருக்கிறதா? சொல்லமுடியுமா?" என்று கேட்டார் துரை.

"இப்போது நீங்கள் இப்படிப் பேசுவது தான் ஒன்றுமே புரியாத கவலையாக இருக்கிறது! இந்தக் கவலை தான் என்னை உறுத்துகிறது!"

"வேறு எந்தக் கவலையும் இல்லையா!"

"சிந்தையில் கவலையில்லாத மனிதன் யார்? அவரவர்களுக்குச் சொந்தத்தில் சில கவலைகள் இருக்கத்தானே செய்கின்றன!" நாடக வசனங்களைப் பேசிப் பழகியவனின் நா எழுத்துக்களைச் சரியாக உச்சரித்து வெளியே தள்ளியது.

"நீங்கள் என்னிடம் சொல்லாமல் மறைத்தாலும் நானறிவேன் உங்கள் கவலையை."

"புது விதமான ஜோசியராக இருக்கிறீரே!" என்று ஹாஸ்யமாய் பேசினான் மணி.

"இப்போது நீங்கள் பெரிய வேதனையில் சிக்கிக் கொண்டு உள்ளுக்குள் விம்மிக் கொண்டு இருக்கிறீர்கள்?"

"உங்கள் பேச்சும் நீங்களும் எனக்குப் புரியாத வேதனை ஒன்று தான் தற்போது!"

"நான் யார் என்று சொல்கிறேன்! அதற்கு முன்னே ஒரு கேள்வி."

"உம்—கேளுங்கள்!"

"திரையழகி திலோத்தமையைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?" இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டே மணியைக் கவனித்தார். அவன் முகத்தையே உற்று நோக்கினார். அப்போது அவன் முகத்தில் துயரக் குறிகள் தெளிவு தெளிவாகத் தோன்றின!

"எனக்கு அவளைத் தெரியும்!" என்றான் சுருக்கமாக.

"தெரியும் என்றால் எப்படி? சினிமா நடிகை என்றால் எல்லா மக்களுக்குந்தான் தெரிகிறது! வேறு எப்படி?"

"அவளை எனக்கு நன்றாகத் தெரியும்! மற்றவர்களைப் போல் அல்ல! நான் அவளோடு ஆடி ஓடிப் பாடியிருக்கிறேன்! கூடிக் குலாவியிருக்கிறேன் 'ஜோடிப் பொருத்தம் ஜோர்' என்று பிறர் சொல்லும் அளவிற்கு இணை பிரியாமல் இருந்திருக்கிறோம்..."

"அதெல்லாம் எப்போது? ஆரம்பத்தில் அவளும் உங்களோடு நாடகங்களில் நடித்துக் கொண்டு இருந்தாளா?"

"இல்லவே இல்லை. பள்ளிப் பருவத்திலே நானும் அவளும் ஒரே உயர்நிலைப் பள்ளியிலே பயின்று கொண்டிருந்த போதே இருவரும் ஜோடிப் புறாக்களாக எண்ணிப் பாடும் வானம்பாடிகளாகக் கூடிக் களித்திருக்கிறோம்! எங்கள் பக்கத்து வீட்டிலே குடியிருந்த அவளுடைய பெற்றோர்கள் எங்கேயோ வேற்றூருக்கு அவளை அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள்! கால வேகத்திலே நான் நாடக நடிகனானேன். எந்த நாளும் என் நினைவை விட்டு நீங்காமலேயே, நெஞ்சிலேயே நெருங்கி நின்றிருந்தாள் திலோத்தமை!"

"இவ்வளவு வேதனைப் படுகிற நீங்கள், உங்கள் காதலி திலோத்தமை மறைந்து ஒரு வாரம் முடிவதற்குள்ளேயே நாடகத்தில் நடித்தீர்களே! எப்படி உங்கள் மனம் துணிந்தது!" என்று கேட்டார் துரை.

"இந்த நாடகம் இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே இந்தத் தேதியில் நடப்பதாக ஏற்பாடாகி விளம்பரமும் செய்தாகி விட்டது சார்! ஒப்பந்தப்படி நடந்து கொள்ளவில்லையென்றால் என்னைக் காண்ட்ராக்டர்கள் சும்மா விடுவார்களா? அப்படித்தான் நான் வருத்தப்பட்டு நாடகத்திலே நடிக்காமல் இருந்து விட்டால் செத்துப் போன என் திலோத்தமை புத்துயிர் பெற்று வந்து விடுவாளா?"

"நியாயம் தான். திலோத்தமையை நீங்கள் மீண்டும் எப்போது சந்தித்தீர்கள்?"

"எப்படியோ அவளும் சினிமா நடிகையாகி விட்டாள்! அவள் நடித்த முதற்படமான 'தங்கையின் சபதம்' என்ற படத்தை நான் பார்த்தபோது தான் அவளைத் தெரிந்து கொண்டேன்!"

"ஏன்? அதற்கு முன் அந்தப் படக் கம்பெனியாரின் விளம்பரங்களில்...?"

COMICS PDF TIMES

"அவளை நான் கவனித்துத் தெரிந்து கொள்ளவில்லை! காரணம் நான் திலோத்தமையைப் பார்த்து ஏறக்குறைய ஏழு வருடங்களாயிருந்தன! நேரில் பார்த்திருந்தாலும் நான் அடையாளம் புரிந்து கொள்ள கஷ்டமாகவே இருந்திருக்கும் ஏனெனில், அவள் முதற் படத்திலேயே நன்றாக வளர்ந்திருந்தாள், நான் பழகிய போது இருந்தவளுக்கும், படத்தில் நடிக்கும் போது இருந்தவளுக்கும் பெருத்த மாறுபாடு!"

"அந்த முதற்படத்தில் பார்த்ததற்கப்புறம் தான் நீங்கள் மேற்கொண்டு திலோத்தமையைச் சந்தித்தீர்களா?"

"ஆமாம்!"

"பழைய நினைவு அவளுக்கு இருந்ததா?"

"இருந்ததாகச் சொல்ல முடியாது சார்? என்னை அவள் புரிந்து கொண்டாள். ஆனால் நான் அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை!

அவள் எண்ணம் என்னவென்பதை தெரிந்து கொள்ள என்னால் முடியவில்லை! அவள் மறந்து விட்டாளா? என்னைக் காதலிக்கிறாளா என்று எனக்குத் தெரிவிக்காமலேயே இறந்து விட்டாள் சார்! திலோத்தமை சரஸ்வதியாக இருந்த போது என்னை உயிரினும் மேலாக நேசித்தாள் ஆனால் கால மாறுபாட்டால் சரஸ்வதி திலோத்தமையாக மாறி விட்டாள். ஆளே மாறி விட்டாளோ என்ற ஐயம் எனக்கிருந்தது! அந்த ஐயத்தைப் போக்காமலேயே அவள் மடிந்து விட்டாள் சார்!" என்று கூறி மிகவும் வருந்தினான் மணி.

"மிஸ்டர் மணி! திலோத்தமை கொலை செய்யப்பட்டிருக்கிறாள். அதோடு அவள் உடலும் காணப்படவில்லை! இது விஷயமாக நான் உங்களைச் சந்தேகிக்கிறேன்! நீங்கள் ஸ்டேஷனுக்கு வரவேண்டும்! நான் தான் துப்பறியும் அப்பாத்துரை! என்று சற்றுக் கடுமையாகவே கூறினார் துரை.

மணி அதிர்ந்து போய் விட்டான்.

"சார்! திலோத்தமையின் கொலை விஷயமாக என்னையா சந்தேகிக்கிறீர்கள்? நான், அவள் மீது உயிரையே வைத்திருந்த ஒரு குற்றத்தை தவிர வேறு எதையும் செய்தறியேன் சார்!" எனப் பரிதாபமான குரலில் கூறினான் மணி.

"என்னவோ—ஏதோ! நீங்கள் ஸ்டேஷனுக்குப் புறப்பட வேண்டும்! நாளை காலை ஒன்பதரை மணிக்கு என்.

எஸ் 2 ஸ்டேஷனுக்கு வந்து விட வேண்டும் என்று கூறிக் கொண்டே மணியின் முகத்தை உற்று நோக்கினார்.

அவன் முகத்தில் பீதி நிலவியிருந்தது!

“நான் வருகிறேன் மிஸ்டர் மணி! தவற வேண்டாம்!” என்று கூறிக்கொண்டே எழுந்தார் துரை.

“சார்! என் மீது ஏன் சார் சந்தேகப் படுகிறீர்கள்?” என்று ஏக்கத்தோடு கேட்டான் மணி.

எழுந்து நின்ற துரை மீண்டும் அமர்ந்தார்.

“நீங்களும் சரஸ்வதியும் இளமைப் பருவத்தில் காதலர்களாகச் சுற்றித் திரிந்திருக்கிறீர்கள். கால வேகத்திலே சரஸ்வதி திலோத்தமையாகித் திரையுலகிலே புகழின் உச்சியை அடைந்து விட்டாள். அவள் உங்களை மறந்தே விட்டாள் ஆனால் நீங்கள் அவளை மறக்கவில்லை. பழைய எண்ணத்தோடு நீங்கள் அவளிடம் பழகியிருக்கிறீர்கள்! அவள் உங்கள் எண்ணத்துக்குப் பணியாததோடு உதாசீனமும் செய்திருக்கிறாள்! அவளுக்குப் பிடித்தமான திரையுலகப் பிரபலமான நடிகர்களோடு பழகியிருக்கிறாள்.

எனவே உங்களுக்கு அவள் மீது வெறுப்பு மூண்டு விட்டது! எப்படியும் அவளைத் தீர்த்துக்கட்ட வழி தேடிக் கொண்டிருந்தீர்கள்! அன்றிரவு சந்தர்ப்பம் வாய்த்தது! அவளைச் சாய்த்து விட்டீர்கள் பழி யார் மீதாவது போகட்டும் என்று இறந்த உடலையும் எங்கேயோ கொண்டு போய் மறைத்து விட்டீர்கள் நாடகத்தில் மூத்த அனுபவம் பெற்ற ஒரு நடிகரால் எளிதாகவே இவைகளையெல்லாம் செய்ய முடியும். இது தான் எங்கள் சந்தேகம்!” என்று கூறிவிட்டு மீண்டும் எழுந்தார் துரை.

பேயறைந்தவன் போல் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு மணியும் எழுந்து நின்றான். துரை மாடியை விட்டுக் கீழே இறங்கினார். தலை குனிந்தபடி மணியும் அவர் பின்னே இறங்கிக் கொண்டிருந்தான்.

வேகமாக இறங்கிக் கொண்டிருந்த துரையைத் திடீரென்று பிடித்துத் தள்ளினான் மணி.

அடுத்த கணம் — துப்பறியும் துரை படிக்கட்டுகளிலே உருண்டு கொண்டிருந்தார்.

மணி தாண்டி ஓடினான் மேக்-அப் ரூமுக்கு அவன் ஒரு நீண்ட தடியோடு அறையை விட்டு வெளியே வந்த போது அங்கிருந்த நடிகர் நடிகைகள் சிலர் ‘என்ன என்ன?’ என்று கேட்டுக் கொண்டு அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

"திருடன் திருடன்! பிடியுங்கள் பிடியுங்கள்! ஓடிவிடப் போகிறான்!" என்று சத்தமாகக் கத்தினான் மணி.

சூழ இருந்தவர்கள் அவனை விட்டு விலகினர்.

கையில் தடியோடு மாடிக்குப் போகும் வழியில் ஓடி வந்தவன் மலைத்துப் போனான்.

அங்கே அப்பாதுரை காணப்படவில்லை.

அடுத்த கணமே மணியின் உடல் ஆட்டம் கண்டு விட்டது.

'துப்பறியும் அப்பாதுரை தப்பி விட்டார். இனி நமக்கு ஆபத்துதான். திருடன் என்ற சாக்கில் எல்லோருடைய உதவியாலும் அந்த ஆளை நன்றாகப் புடைத்து உயிரை ஒடுக்கி வைத்திருக்கலாம். என்மீது ஏற்பட்ட சந்தேகமும் அவர் ஒருவரோடு ஒழிந்து போயிருக்கும். இப்போது அவர் எப்படியோ தப்பி ஓடிவிட்டார். அடுத்த விநாடியே என்னை ஆபத்து தொடர்ந்தாலும் தொடரும்!'

இப்படி பலவாறெல்லாம் சிந்தித்துக் கொண்டே நின்ற மணி மீண்டும் மேக்-அப் குழுக்குள் நுழைந்தான்.

## 10

வேகமாக வந்து கொண்டிருந்த டாக்சியை நிறுத்தி ஏறிக் கொண்டார் அப்பாதுரை. டாக்ஸிக்குள் அமர்ந்து மண்டையைத் தொட்டுப் பார்த்தார். இரத்தம் கொட்டிக் கொண்டிருப்பதை உணர்ந்தார். கைத் துண்டை எடுத்து அடிபட்ட இடத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டார்.

"நுங்கம்பாக்கம் லேக் ஏரியாவுக்கு சீக்கிரம் போ..." என்றார் துரை.

டிரைவர் வேகமாக வண்டியைச் செலுத்தினார். புறப்பட்ட சில நிமிடங்களில் டாக்ஸி அவன் இல்லத்தின் முன் வந்து நின்றது.

டாக்ஸியை விட்டிறங்கியதும் டாக்ஸிக்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றார்.

கார் சத்தம் கேட்டு அறையிலிருந்து பிரமிளா எழுந்து வந்து பார்த்தாள். அப்பாதுரை தள்ளாடிக் கொண்டே வருவதைக் கண்டு திடுக்கிட்டாள்.

"என்னங்க...? என்ன விஷயம்...?" என்று பதறினாள் பிரமிளா.

அப்போது அறையிலிருந்த செல்வமணியும் வெளியே வந்தாள்.

"என்ன சார்...? ரொம்பவும் சோர்வாக வருகிறீர்கள்?" என்று கேட்டான்.

அப்பாதுரையின் மண்டையில் அடிபட்டு இருப்பதையும் அதிலிருந்து ரத்தம் கசிந்து உறைந்திருப்பதையும் கவனித்து விட்டாள்.

"என்னங்க? எப்படி இது ஏற்பட்டது? பலமாக அடிபட்டிருக்கிறதே" என்று வருத்தத்தோடு கேட்டாள்.

பிரமீளா அப்பாதுரையைக் கைப் பற்றி அழைத்துக் கொண்டு மின்விளக்கு அருகில் போய் நின்றாள்.

"பலமாக ஏதும் இல்லை. பயப்பட வேண்டாம். சற்று அஜாக்கிரதையாக இருந்து விட்டேன். அதனால்தான்—" என்றார் துரை.

"எப்படி சார் அடிபட்டது?" என்று பரிவோடு கேட்டான் செல்வமணி.

"ரோட்டில் நடக்கும்போது என்னை மறந்து சிந்தித்துக் கொண்டு போவது தப்புதானே! அதற்குப் பரிசாகத்தான் இந்தத் தண்டனை!"

"அப்படி என்றால்..."

"போஸ்டில் இடித்துக் கொண்டு விட்டேன்."

"பார்த்து வரவேண்டும் சார்" என்றான் செல்வமணி.

"வெளிச்சத்திலே பார்த்து வரும்போதே இடித்துக் கொள்கிறோம். இருட்டிலே வந்தால் தந்திக் கம்பத்திலே மோதிக் கொண்டு விட்டேன்" என்று கூறிக் கொண்டே பிரமீளாவைப் பார்த்தார் அவர்.

அவள் முகத்திலே நம்பிக்கை ஒளி படராததைக் கண்டு தம் கண்களாலேயே சைகை செய்தார் துரை. அவளும் அதைக் கவனித்து விட்டு மௌனமாகவே இருந்து விட்டாள்.

பிறகு அப்பாதுரையின் மண்டையில் அடிபட்ட இடத்திலிருந்து வழிந்த ரத்தத்தைத் துடைத்துவிட்டு கட்டு கட்டி விட்டாள் பிரமீளா.

"எனக்குப் பசியே இல்லை. நீங்கள் சாப்பிட்டாகி விட்டதா?" என்று கேட்டார் துரை.

"இருவரும் சிற்றுண்டி முடித்துக் கொண்டோம்" என்று கூறினாள் பிரமீளா.

"என்ன மிஸ்டர் செல்வமணி! தாங்கள் ஒப்பந்தப்படி ஒரு லட்ச ரூபாய் கொண்டு வந்திருப்பது தெரிகிறது. திலோத்தமாவைக் கொன்றவனைக் கண்டு பிடிப்பதில் உங்களுக்குள்ள அக்கறையும் ஆர்வத்தையும் பார்க்கும்போது நீங்கள் எவ்வளவு தூரம் திலோத்தமாவைக்

வாழ்வித்து வந்தீர்கள் என்ற உண்மை எனக்குப் புரிகிறது. ஆனால் நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது—இந்த அளவுக்கு அவன் நேசமும் பாசமும் காட்டிப் பழகி வந்தானா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது—" என்றார் துரை.

"ஏன் சந்தேகிக்கிறீர்கள்?"

"விசாரிக்கப் போனால் திலோத்தமாவுக்கு அந்தரங்கமாக எத்தனையோ காதலர்கள் இருந்தார்கள் என்பது தெரிய வருகிறதே!"

"வயிற்றெரிச்சல்காரர்கள் ஆயிரம் சொல்வார்கள் சார். நாம் அதையெல்லாம் நம்பிவிட முடியுமா?"

"இல்லை. நம்பிக்கையான பேர்வழியிடமிருந்துதான் இந்தத் தகவல் எனக்குக் கிடைத்தது."

"அப்படி எத்தனை காதலர்கள் அந்த திலோத்தமாவுக்கு இருக்கிறார்களாம்?" என்று கேட்டான் பிரமனை.

"நான் விசாரித்த அளவில் நான்கு பேர்களின் பெயர்கள் அடிபடுகின்றன."

"உண்மையாகவா சார்? அந்த நான்கு பேர்கள் யார் யார்?"

"சொல்வதற்கொன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் உங்கள் மனந்தான் வேதனைப்படும்."

"வேதனைப்பட்டு என்ன ஆகப் போகிறது, சார்? திலோத்தமா உயிரோடு இருந்தாலும் நான் அவளை ஒன்றும் செய்துவிட மாட்டேன். ஆனால் அவள் என்னைத் தவிர மற்றவர்களைக் காதலித்தாள் என்பதை நம்ப என் மனம் இடம் தரவில்லை. இருந்தாலும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."

"நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், மிஸ்டர் செல்வமணி! நான் விசாரித்ததில் கிடைத்த தகவல்கள் இவை: திலோத்தமாவுக்கு நீங்கள் ஒரு காதலன் என்று உங்கள் மூலமே அறிந்தேன். அடுத்தவர், நீங்கள் யார் திலோத்தமாவைக் கொன்றிருக்கலாம் எனச் சந்தேகப்பட்டு என்னிடம் சொன்னீர்களோ, அந்த நபர்—"

"யார் கலியமுதனா?"

"ஆம்... ஈரோட்டுக் கலியமுதன்!"

வாய் விட்டுச் சிரித்தான் செல்வமணி.

"பிறகு—அடுத்தவர் யார்?"

"நாடக நடிகர் மணி என்பவன் திலோத்தமாவின் மற்றொரு காதலன்!"

"நாடக நடிகன் மணி..." என்று முணு முணுத்தான் செல்வமணி.

"உம்... நான்காம் நபர் யாரோ?"

"நான்காவது திரைப்பட நடிகர் சந்திரகுமார்" என்றார் அப்பாதுரை.

'சந்திரகுமார்!' என்று மெல்லச் சொல்லிக் கொண்டான் செல்வமணி. அப்போது அவன் கண்கள் கலங்கின.

அதைக் கவனித்துவிட்ட துரை, "நான் முதலிலேயே சொன்னேனே மிஸ்டர் செல்வமணி! சொன்னால் உங்கள் மனம் வேதனைப்படும் என்று நினைத்தேன்! ஆனால் நீங்கள் தானே வற்புறுத்தினீர்கள்?" என்றார்.

"நான் அதற்காகக் கலங்கவில்லை சார்..."

"பிறகு...?"

"பெண்கள் மனம் எப்படிப்பட்டது என்று எண்ணிப் பார்த்தேன். எவ்வளவு இரகசியங்கள் உள்ளத்திலே பதுங்கிக் கிடக்கின்றன என்று நினைத்துப் பார்த்தேன். என் கண்கள் கலங்கி விட்டன" என்றான் செல்வமணி.

"மற்ற மூன்று பேர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதோ சந்தேகப்பட்டதோ கிடையாதா?" என்று கேட்டாள் பிரமிளா.

"கேள்விப்பட்டிருக்கிறேன். திலோத்தமாவே என்னிடம் சொல்லியிருக்கிறாள். கலைமுதலுக்கும் அவளுக்கும் நெருங்கிய உறவு இருப்பதாக. நாடக நடிகன் மணியுடன் இனிமை மிக் நட்பு கொண்டிருந்ததாகவும் திலோத்தமா என்னிடம் கூறியிருக்கிறாள். ஆனால் திரைப்பட நடிகர் சந்திரகுமாரைப் பற்றி என்னிடம் எதுவும் அவள் கூறவில்லை. சில சமயங்களில் அந்த நடிகர் அவளோடு அவள் பங்களாவிற்கு வந்ததை நான் கவனித்திருக்கிறேன்" என்றான் செல்வமணி.

"அப்படியா? திலோத்தமாவின் வேலைக்காரி விஜயாவும் சமையற்காரி காமினியும், 'யாருமே வீட்டுக்கு வருவதில்லை' என்று கூறினார்களே?"

"யாருக்குமே சொல்லக் கூடாது என்பது அவர்களுக்கு திலோத்தமா இட்ட கட்டளையாக இருக்கும்" என்றாள் பிரமிளா.

"இருக்கலாம்" என்றான் செல்வமணி.

பிறகு தனது கைப் பையைத் திறந்து பணத்தை கட்டுக் கட்டாக எடுத்து துரையின் முன் வைத்து, "சரியாக ஒரு லட்சம் இருக்கிறது சார்! கொலையாளியைக் கண்டு பிடியுங்கள். மற்றது எது எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும்" என்றான் செல்வமணி.

பிரமீளா கண்களைத் துடைத்துக் கொண்டு உறக்க நிலையிலேயிருந்து தெளிந்து, கதவிடுக்கு வழியே உள்ளே பார்த்தாள்.

அடுத்த கணம்—"ஆ! இப்படியா விஷயம்?" என்று ஆச்சரியத்தோடு தன் கணவரைப் பார்த்தாள்.

"சரி. பேசாமல் வா!" என்று பிரமீளாவை அவனது அறைக்குள் அழைத்துச் சென்றார் துரை.

"ஆசாமிக்கு மின் விசிறி சுழன்று கொண்டிருந்தால் தூக்கம் வராது என்றாரே!" என்றாள் பிரமீளா, சிரித்துக் கொண்டே.

"அது மட்டுமா! புதிய இடத்தில் உறக்கமே வராது தனக்கு என்றானே! இப்போது பார் நன்றாகத் தூங்குகிறான். மின் விசிறியும் சுழன்று கொண்டு இருக்கிறது. மொத்தத்தில் செல்வமணியின் லட்சணமும் வெளிச்சமாகி விட்டது!" என்றார் துரை.

"ஏன் இப்படியெல்லாம் செய்கிறார் செல்வமணி? இந்த ஆளின் நடவடிக்கை புரியாத புதிராக இருக்கிறதே?" என்றாள் பிரமீளா.

"புரியாத புதிரும் பொறுத்திருந்தால் புரிந்து விடும். அவனிடம் இரகசியமாக மேலும் ஏதோ சொன்னார் துரை.

"நீங்கள் அவரை வேலையாக வெளியே போய் விட்டதாகச் சொல்லுகிறேன். அந்த ஆள் என்ன சொல்கிறார் என்று கேட்டு வைக்கிறேன்" என்றாள் பிரமீளா.

"சரி. பார் பிரமீளா நாளாக ஆக இந்தக் கேஸின் மர்மம் பெருத்துக் கொண்டே வருகின்றது!" என்றார் துரை.

"அந்த மணியிடம் நீங்கள் அவ்வளவு அஜாக்கிரதையாக நடந்து கொண்டிருக்கக் கூடாது. நீங்கள் கொஞ்சம் உஷாராக இல்லாமல் தாமதித்திருந்தால் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கும். அவன் உங்களை மாடிப்படியிலிருந்து உருட்டி விட்டதிலிருந்து அவன் தான் கொலையில் சம்பந்தப்பட்டவன் என்பது எனக்கு நன்றாக விளங்குகிறது" என்றாள் பிரமீளா.

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது! நான் உருண்டு விழுந்தவுடனே அவன் அங்கிருந்து ஓடினான். நான் உடனே எழுந்து மீண்டும் மாடிக்கே ஓடி ஒரு சோபாவின் கீழ் மறைவாக ஒளிந்து கொண்டேன், அங்கிருந்து கொண்டே கீழே பார்க்க முடிந்தது! கொஞ்ச நேரத்திலே மணி கையிலே ஒரு பெரிய தடியோடு

மீண்டும் படிக்கட்டுகள் இருக்குமிடத்திற்கே ஓடி வந்தான் அவனைத் தொடர்ந்து நாடக நடிகர்களும் நடிகைகளும் கூட ஓடி வந்தனர். யாரோ ஒரு திருடன் தன்னைத் தாக்க வந்ததாக அவன் அவர்களிடம் சொன்னது என் காதில் விழுந்தது!

நான் தப்பித்துக் கொண்டு ஓடி விட்டதாக எண்ணி அவர்கள் திரும்பி விட்டனர். பிறகு நான் பக்குவமாகவும் ஜாக்கிரதையாகவும் மாடியை விட்டு இறங்கி, மறைந்து மறைந்து ரோடுக்கு வந்து டாக்சியைப் பிடித்து வீட்டுக்கு வந்து விட்டேன். அவையாவும் செல்வமணிக்குத் தெரியக் கூடாது என்பதற்காகவே நான் பொய்யைச் சொல்லி மழுப்பினேன். இவ்வளவு தூரம் நடந்திருக்கிறது. மணியின் மனத்திலே கொலைக் குற்றம் செய்த பெரும் பழி குடி கொண்டிருக்க வேண்டும் ஆகவே தான் நான் அவனைச் சந்தேகிக்கிறேன் என்று சொன்னதும் பேயறைந்தவன் போல் ஆகி விட்டான்.

பிறகு படிக்கட்டிலிருந்து என்னைப் பிடித்துத் தள்ளி விட்டான்! அவன் என்னை அப்படிச் செய்வான் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. பொழுது விடிந்ததும் அவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச் சொல்லி யிருக்கிறேன், எனக்கென்னவோ அவன் உண்மையான குற்றவாளியாக இருந்தால் தப்பித்து ஓடிவிடுவான் என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது!"

"அவன் தப்பித்து ஓடி விட்டால் நமக்குத் தானே வேலை அதிகம்!"

"வேலை அதிகமானாலும் கொலை செய்தவன் யார் என்பதைக் குறித்து ஒரு முடிவு நமக்குக் கிடைத்து விடுமே! பிறகு—ஓடிப் போனவனைத் தேடிப் பிடிப்பது ஒன்றும் அவ்வளவு சிரமமான காரியமல்லவே! நமது சென்னைப் போலீசார் இந்த வேலையை சிறப்பாக செய்து வருகிறார்களே!"

"அவன் பொழுது விடியும் வரை கூடக் காத்திராமல் இரவே காட்டி விட்டான் தான் கொலைகாரன் என்பதை! ஆனால் அவன் இப்போது ஓடி ஒளியாமல் இருப்பான் என்பது என்ன நிச்சயம்?"

"நிச்சயம் ஓடி மறைந்திருப்பான். தேடிப்பிடிக்க வழி செய்ய வேண்டும். அத்தோடு செல்வமணியிடம் பொதிந்துள்ள மர்மங்களையும் நாம் அறிந்து கொண்டாக வேண்டும். நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும்.

"நான் வருகிறேன்" என்று கூறி விட்டுப் புறப்பட்டார் அப்பாத்துரை.

## 11

விடியற்காலை 4-30 மணி!

அருள் இல்லத்தை விட்டுப் புறப்பட்ட செல்வமணி நுங்கம்பாக்கம் மெயின் ரோடுக்கு வந்து கொண்டு இருந்தான். அப்போது அந்தப் பக்கம் ஒரு டாக்சி காலியாக வந்து கொண்டிருந்தது. கை தட்டி அதை நிறுத்தி ஏறிக் கொண்டான்.

"நேரா பெரம்பூர் போப்பா!" என்றான் செல்வமணி.

அடுத்த கணம்—டாக்சி பறந்தது!

டாக்சி டிரைவர் கண்ணாடியில் செல்வமணியின் முகத்தையே கவனித்துக் கொண்டு வந்தான் ஆனால் அவன் கவனிப்பதைச் செல்வமணி அறியவில்லை.

டாக்சி கெல்லீஸைத் தாண்டிப் பறந்து கொண்டு இருந்தது!

"சார்!" என்று குரல் கொடுத்தான்.

"என்ன டிரைவர்? என்ன விஷயம்? பெட்ரோல் இல்லையா என்ன?" என்று கேட்டுக் கொண்டே கண்ணைத் திறந்தான் செல்வமணி.

"அதில்லை சார்! பெரம்பூரை நெருங்கி விட்டேன் எந்தத் தெருவுக்குப் போக வேண்டும்?" என்றார் டிரைவர்

"பாபுஜி தெருவுக்குப் போ! 10 நெம்பர் வீட்டின் முன் நிறுத்து!" என்றான் செல்வமணி.

"சரி சார்! என்று சொல்லி விட்டு டாக்சியை மேலும் சற்று வேகமாக ஓட்டினான் டிரைவர்.

பாபுஜி தெருவுக்குத் திரும்பினான் டாக்சியை சில கெஜ தூரம் சென்றதும் 'கிடீர்' என்று 'பிரேக்' பிடித்தான் டிரைவர் பிரேக் போட்ட வேகத்தில் வண்டிக்குள்ளிருந்த செல்வமணி ஒரு குலுங்குக் குலுங்கி முன் சீட்டில் அமர்ந்திருந்த டாக்ஸி டிரைவரின் முதுகிலே தலையைப் பலமாக மோதினான்.

"அ... அம்மா!" என்று அலறிக் கொண்டே மண்டையைப் பிடித்துக் கொண்டு சீட்டில் அமர்ந்து கொண்டான் செல்வமணி.

வண்டி பத்தாம் நெம்பர் வீட்டின்முன் நின்றது. மீட்டரைப் பாராமலே ஐந்து ரூபாய்த் தாள் ஒன்றை எடுத்து அவன்முன் நீட்டிவிட்டு கேட்டைத் திறந்து வீட்டுக்குள் சென்றான் செல்வமணி.

அந்த வீடு பூட்டப்பட்டிருந்தது. செல்வமணி தன் பேண்ட் பாக்கெட்டிலே கையை விட்டுச் சாவியை எடுத்துப் பூட்டைத் திறந்து உள்ளே சென்று கதவை மூடும்போது—"சார்" என்று ஒரு குரல் கேட்டுத் திரும்பினான்.

டாக்ஸி டிரைவர் அங்கே நின்று கொண்டிருந்தான்.

"சில்லறை வாங்கிக் கொள்ளவில்லையே சார்!"

"பரவாயில்லை! நீயே வைத்துக்கொள்."

"வேண்டாம் சார்! மீட்டர் காட்டும் தொகைக்குமேல் நான் வாங்கிக் கொள்வதில்லை சார்!"

"அப்படியா—? ரொம்ப நல்ல ஆளப்பா நீ!...சரி—கொடு."

உட்பக்கம் போகத் திரும்பினான் செல்வமணி.

"வருகிறேன் சார்" என்று கரம் குவித்து வணங்கி விட்டுத் திரும்பினான் டிரைவர்.

அடுத்த கணம்—அந்தக் கதவு மூடப்பட்ட ஒலி கேட்டதும் அதைத் திரும்பிப் பார்த்துத் தெரிந்து கொண்டான் டிரைவர்.

செல்வமணியோடு பேசிக் கொண்டிருந்தபோதே அந்த டிரைவர் அந்த வீட்டில் தன் கண்களுக்கு இலக்கானவற்றை அலசிப் பார்த்து விட்டான்.

டாக்ஸி அங்கிருந்து வேகமாகப் பறந்தது.

டிரைவர் மீட்டரைப் பார்த்தான். செல்வமணியை இறக்கி விட்ட பின்பும் என்கேஜ் நிலையிலேயே இருந்தது. டிரைவர் மீட்டரைத் திருப்பவில்லை.

டாக்ஸி மீண்டும் நுங்கம்பாக்கத்தை அடைந்தது. கோடம்பாக்கம் ரோடு முனையிலே ஓர் ஆள் நின்று கொண்டிருந்தான். அவன் பக்கமாக வந்து நின்றது அந்த டாக்ஸி.

"ரொம்பவும் நன்றி டிரைவர்" என்று கூறிக்கொண்டே டாக்ஸியில் இருந்த டிரைவர் கீழே குதித்தான்.

"ரொம்ப சீக்கிரமாகத் திரும்பியாச்சே—" என்றான் காத்துக் கொண்டிருந்த டிரைவர்.

"ஆமாம்ப்பா—"

மீட்டரைப் பார்த்துக்கொண்டே பணத்தைக் கொடுத்தான் டாக்ஸியை ஓட்டி வந்த டிரைவர்.

காத்துக் கொண்டிருந்த டிரைவர் காரை வாங்கிக் கொண்டு மீட்டரைத் திருப்பி விட்டுக் கொண்டு வண்டியை ஸ்டார்ட் செய்தான்.

வண்டியை விட்டிறங்கிய டிரைவர் ரோடிலே கால் நடையாக நடந்து சென்றான்.

## 12

அருள் இல்லம்! அப்பாதுரையின் தனியறை. பிரமிளா குறுக்கும் நெடுக்குமாகத் திரிந்து கொண்டிருந்தாள். அவள் முகத்திலே வருத்தத்தின் வடுக்கள் தெளிந்து விளங்கிக் கிடந்தன! சிறிது நேரம் சிந்திப்பதும் பின் பெருமூச்சு விடுவதுமாக உலவிக் கொண்டிருந்தாள்.

அப்போது டெலிபோன் மணி ஒலித்தது.

பிரமிளா டெலிபோன் அருகே சென்று ரிசீவரைத் தூக்கினாள். அடுத்த முனையிலிருந்து குரல் கேட்ட மறுகணமே அவள் உள்ளம் துள்ளிக் குதித்தது. தான் எண்ணி வருந்தியபடி தன் கணவருக்கு எவ்வித ஆபத்தும் நேர்ந்து விடவில்லை என்பதறிந்து நிம்மதி அடைந்தாள்.

"எங்கிருந்து பேசுகிறீர்கள்?" என்று கேட்டாள் பிரமிளா.

"பெங்களூரிலிருந்து டைரக்ட் லைனில் பேசுகிறேன்" என்றார் அடுத்த முனையில் பேசியவர். அவர்—துப்பறியும் துரை அவர்கள்தாம்.

அவர் கூறிக் கொண்டிருந்த விஷயங்களைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் பிரமிளா.

கடைசியாக—

"நீங்கள் எப்போது புறப்படுகிறீர்கள்?" என்று கேட்டாள் பிரமிளா.

"விஷயம் ஏறக்குறைய முடிந்த மாதிரிதான். இன்னும் சில வேலைகள் இங்கு இருக்கின்றன. முடித்ததும் புறப்பட்டு விடுகிறேன். நான் இப்போது சொன்ன விஷயத்தை மறவாமல் இன்ஸ்பெக்டரிடம் சொல்லு. அவர் என்னைத் தேடிக் கொண்டு நிச்சயம் வருவார் நம் இல்லத்துக்கு. நான் சொன்னபடியே நீ சென்று அந்தச் செல்வமணியின் விஷயத்தைக் கவனி.

நான் இங்கிருந்து புறப்பட்டுப் பிளேனில் வருகிறேன். மீனம்பாக்கத்தில் இறங்கி நேராகச் செங்கற்பட்டுக்குச்

செல்ல வேண்டி இருக்கிறது. அதன் பின்தான் சென்னைக்கு வருவேன்.

நான் கூறியபடியே நீயும் இன்ஸ்பெக்டரும் செயல்பட வேண்டியது மிகவும் முக்கியம். உனக்கு இந்தத் துறையில் பழக்கம் அதிகம் இல்லை. இருந்தாலும் துணிந்து இறங்கு! வெற்றிக்குரிய வழி அதுதான்! நான் சொன்னவை யாவும் நினைவிருக்குமா?" என்றார் துரை.

"நிச்சயமாக இருக்கும். நீங்கள் வெற்றியோடு திரும்பி வாருங்கள். அதற்குள் இங்கு நாங்கள் நீங்கள் கூறியபடியே காரியங்களைக் கவனித்து வைக்கிறோம்" என்று கூறி ரிசீவரைக் கீழே வைத்தாள் பிரமிளா.

சொல்லி வைத்தாற்போல் இன்ஸ்பெக்டர் அங்கே வந்தார்.

பிரமிளா, துரை சொன்ன வார்த்தைகளை அப்படியே ஒப்புவித்தாள் இன்ஸ்பெக்டரிடம்.

இன்ஸ்பெக்டர் பலமாகச் சிரித்துவிட்டு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்போல்—

"நீங்கள் தயாரா?" என்றார்.

"நான் எப்போதும் தயார்" என்றாள் பிரமிளா.

"சரி— இப்போதே காரியத்தில் இறங்கலாமா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"தாமதம் செய்வதற்குத் தடை என்ன இருக்கிறது? உடனே புறப்படுவோம்" என்றாள் பிரமிளா.

சிறிது நேரத்தில்—

இன்ஸ்பெக்டரும் பிரமிளாவும் போலீஸ் ஜீப்பில் ஏறி அமர்ந்தனர்.

ஜீப் பறந்தது புழுதியைக் கிளப்பிக் கொண்டு.

"நான் உங்களைக் கொண்டு போய் செல்வமணியின் வீட்டில் விட்டுவிட்டு 'திரை உலகம்' பங்களாவுக்குச் செல்கிறேன். குப்பதியும் அப்பாதுரை எச்சரித்தபடி அந்த விஷயத்திலும் அதிக அக்கறை செலுத்த வேண்டும்" என்று இன்ஸ்பெக்டர் பிரமிளாவிடம் கூறினார்.

பிரமிளா புன்னகையோடு தலையசைத்தாள்.

## 13

போலீஸ் கமிஷனர் ஆபீசிலே போலீஸ் கமிஷனர், குப்பதியும் அப்பாதுரை, பிரமிளா, இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி ஆகியோர் கூடி இருந்தனர்.

"மிஸ்டர் அப்பாதுரை! திரையழகி திலோத்தமா கொலை யுண்டு இறந்த இந்த வழக்கிலே உங்களுக்கு ஏன் சினிமா நடிகன் சந்திரகுமாரின்மீது சந்தேகம் விழுந்தது?

செல்வமணி என்கிற திலோத்தமாவின் இரகசியக் காதலன், காரோட்டி கலையமுதன்மீது சந்தேகம் காட்டினான். அந்தக் காரோட்டி கலையமுதன் பழைய சிநேகிதன் மணிசேகர்மீது போக்கை மாற்றினான். ஆனால் நீங்கள் அவர்களை விடுத்து சந்திரகுமார்மீது சந்தேகப்பட்டதன் காரணம்தான் எனக்குப் புரியவில்லை" என்று பேச்சை ஆரம்பித்தார் கமிஷனர்.

"நான் சந்திரகுமாரை சந்தேகித்ததற்குக் காரணம் தெரிந்து கொள்வதற்குமுன் இறந்தவள் யார்? திரையழகி திலோத்தமாதானா? என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும் நீங்கள்" என்றார் துரை.

"என்ன புதிர் போடுகிறீர்கள்?" என்றார் கமிஷனர்

"புதிரெல்லாம் புரிந்து விட்டது. திலோத்தமா இறக்கவில்லை."

இதைக் கேட்டபோது கமிஷனர் அதிர்ந்து விட்டார்.

"அப்படியா? அப்படியானால் அவள் எங்கே? உயிரோடு கடத்திச் செல்லப்பட்டு மறைக்கப்பட்டிருக்கிறாளா?" என்று படபடப்போடு கேட்டார் கமிஷனர்.

"திலோத்தமா இருக்குமிடத்தையும் கண்டு பிடித்து விட்டேன்."

"உண்மையாகவா?"

"ஆமாம் சார்! திலோத்தமா என்ற அந்தப் பெண் இப்போது ஆணாக மாறி விட்டாள்!"

"என்ன? திரையழகி திலோத்தமா ஆணாக மாறி விட்டாளா? எங்கே அந்த ஆணாக மாறிய பெண்?"

"அவசரப்படாதீர்கள் சார்! ஆணாக மாறிய அந்தப் பெண் அரைமணி நேரத்தில் இங்கு அழைத்து வரப்படுவான். இதில் முக்கிய விசேஷம் என்னவென்றால், திரையழகி திலோத்தமாவே ஆணாக மாறி, அந்த ஆணே, 'நான் திலோத்தமாவின் இரகசியக் காதலன் என்கிறான்."

"யார்...?"

"வேறு யார்? சாட்சாத் செல்வமணிதான்!"

"என்ன? செல்வமணியா? திலோத்தமா, ஆணாக மாறிச் செல்வமணியாகி விட்டாளா?"

கமிஷனருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"அவள் அப்படி உருமாறியதற்குக் காரணம்?"

"அதை அவன் வாய் மூலமாகவே அதாவது செல்வமணியின் மூலமாகவே அறிந்து கொள்வோம். அந்த செல்வமணியால்தான் சார் எனக்குச் சந்திரகுமார் மீது சந்தேகம் விழுந்தது. நானும் பிரமிளாவும் நடிகன் மணியைச் சந்திக்க அவன் நாடகம் நடத்த தியேட்டருக்குச் சென்றிருந்தோம்.

அந்த நாடகத்துக்கு சினிமா நடிகர் சந்திரகுமார் தலைமை வகித்தான். செல்வமணியும் நாடகத்திற்கு வந்திருந்தான். நாடகம் முடிந்தது. நான் மணியைச் சந்திக்க ஆயத்தமானேன். என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த செல்வமணி சந்திரகுமாரையே அடிக்கடி பார்த்துக்கொண்டு வந்தான்.

அப்போது சந்திரகுமார் யாரோ ஒரு பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தான். அந்தப் பெண்ணும் ஒரு நடிகை போலவே இருந்தாள். நான் செல்வமணியின் முகத்தைக் கவனித்தபோது அந்த முகத்திலே துக்கம் சூடி கொண்டிருந்தது, பொறாமைப்பட்டு வருந்துகின்ற ஒரு பெண்ணின் முகம்போல எனக்குத் தோன்றியது செல்வமணியின் முகம்.

"அன்றிரவு தான் மணி என்னை மாடிப் படிக்கட்டுகள் வழியாக உருட்டித் தள்ளி விட்டுக் கொல்லப் பார்த்தான்; நான் தந்திரமாக தப்பி ஓடி வந்து விட்டேன்!"

குறுக்கே புகுந்தார் இன்ஸ்பெக்டர்.

"மணி எதற்கு சார் உங்களைக் கொல்ல எண்ணினான்? அவன் அப்படி நடந்து கொண்டதால்தான் எனக்கு அவன் மீது பலத்த சந்தேகம் விழுந்து விட்டது! ஆனால் ஏன் திடீரென்று தலைமறைவாகி விட்டான் மணி. காரணம்...?"

"காரணம் ஒன்றுமில்லை சார்! தான் திலோத்தமையைக் கொல்லவில்லை என்பதை நிரூபிக்க தன்னால் முடியாது என்ற தீர்மானத்துக்கு வந்து விட்டான் அவன். ஏனென்றால் கலைமுகனிடம் அடிக்கடி திலோத்தமையைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கிறான். சந்திரகுமாரோடு திலோத்தமை ஓட்டலுக்குள் நுழைந்ததைப் பார்த்த அன்று கலைமுகனிடம் விஷயத்தைக் கூறித் தன்னை டாக்ஸியில் உடனே அழைத்துப் போக வேண்டியிருக்கிறான், கலைமுகன் மறுத்து விட்டான்.

ஆகவே, வெறுப்படைந்து போன மணி திலோத்தமையைப் பற்றிக் கோபமாக அவனிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டிருக்கிறான். எனவே தான் கலைமுகன் சந்திரகுமார் மீது சந்தேகப்பட்டு என்னிடம் சொன்னான்.

என்றாலும் அன்றிரவுதான் திலோத்தமாவுக்கு அந்தகதி ஏற்பட்டு விட்டது.

எப்படியோ தன் மேல் விழுந்த அபாண்டப் பழி ஒழிய வேண்டுமானால் என்னை ஒழித்து விட முடிவு கட்டி விட்டான் மணி. ஏனென்றால் அதிகாரிகள் என்னிடம் நிரபராதியைக் குற்றவாளிக் கூண்டிலே ஏற்ற முடியும் என்ற எண்ணம் சரியாகவோ தவறாகவோ பொது மக்களிடம் புகுந்து விட்டிருக்கிறது! பிறகு நான் சாகவில்லை. எனவே பயம் புகுந்து கொண்டது மணிக்கு!

உண்மையில் தன்னைக் கொலையாளி என்றே தீர்மானித்து விடுவார்கள் அது நிச்சயமில்லை என்றாலும் தன்னைக் கொல்ல முயன்ற குற்றத்திற்காக வழக்கு தொடுப்பார்கள் என்ற பெருத்த பயம் அவனைத் தலைமறைவாகத் திரிய வைத்திருக்கிறது என்று கூறி வேர்வையைத் துடைத்துக் கொண்ட துரை, மீண்டும் பேச ஆரம்பித்தார்.

"கலையமுதன், திலோத்தமாவும் சந்திரகுமாரும் ஓட்டலில் நுழைந்தனர் என்று சொன்னான். செல்வமணி சந்திரகுமாரை ஏதோ ஒரு பாச உணர்ச்சியோடு பார்த்தான் பெருமை உணர்வோடு அழைக்கப்பட்டான்! எல்லாவற்றிலும் மேலாக செல்வமணி ஆணுருவில் இருக்கும் பெண் என்பதை நான் இலக்கிலே அன்றிரவு தங்கியிருந்தபோது நீரும் பிரமீளாவும் அறிந்து கொண்டோமே!"

"செல்வமணி பெண் என்றுதான் அறிந்து கொண்டோமே தவிர அவள் தான் திலோத்தமை என்று நாங்கள் நினைக்கவில்லை!" என்றாள் பிரமீளா.

"ஆகவே தான் அப்பாத்துரையே டாக்ஸி டிரைவர் வேடம் போட்டுக் கொண்டு, செல்வமணியை டாக்ஸியில் ஏற்றிக் கொண்டு போய் அவனுடைய விலாசத்தையும் அறிந்து கொண்டு வந்தார்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"சரி திலோத்தமைதான் உயிரோடு இருக்கிறாளே! பின் ஏன் அந்தச் சினிமா நடிகன் சந்திரகுமாரையும் அவனுடன் இருந்த சினிமா நடிகை சரோஜாவையும் திலோத்தமையைக் கொன்ற குற்றவாளிகளாகச் சொல்கிறீர்கள்?" என்றார் கமிஷனர்.

"ஆமாம்! அவர்கள் இருவரும் திலோத்தமையின் உயிரைக் குடிக்க ஏற்பாடு செய்தது என்னவோ உண்மை, ஆனால் திலோத்தமை சாகவில்லை. செத்தது — திலோத்தமையைப் போன்ற எல்லா வகையிலும் ஒத்திருந்த ஆளுறி ஸ்கிரிலைாத-ரப்பரால் ஆன ஒரு பதுமை!"

COMICS PDFTIMES

"என்ன ரப்பர் பதுமையா?" ஆச்சரியத்துக்கு அடிமை யானார் கமிஷனர்.

பிரமீளாவும் இன்ஸ்பெக்டரும் பேசாமலிருந்தனர். ஏனெனில் எல்லா விஷயங்களும் ஏற்கனவே அவர்களுக்குத் தெளிவாகி விட்டன!

"திலோத்தமையைக் கொல்லச் சென்றவர்கள் பதுமையைக் கொன்றது எவ்வாறு?" என்றார் கமிஷனர்.

"இந்தக் கேள்விக்கு என்னால் யூகித்துப் பதில் சொல்ல முடியும்! என்றாலும் நம்மிடம் தான் திலோத்தமை சிக்கிக் கொண்டிருக்கிறாளே! அவளே சொல்லிவிட்டுப் போகட்டும்!" என்றார் துரை.

"நான் துப்பறியும் அப்பாத்துரையின் யோசனைப்படி திரையுலகம் மாளிகைக்குச் சென்று பூட்டிக் கிடந்த ஓர் அறையைச் சோதனை போட்டபோது அந்த ரப்பர் பதுமை அங்கே பதுக்கப் பட்டிருந்தது! அதன் மார்பிலே கத்தி செருகப் பட்டுக்கிடந்தது! இன்னமும் அப்படியே இருக்கிறது" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஓஹோ! திலோத்தமை தனக்கு விபத்து ஏற்படப் போகிறது என்பதை எப்படியோ தெரிந்து கொண்டு விட்டாள் போலிருக்கிறது!" என்றார் கமிஷனர்.

"பெங்களூர் போலீஸ் அதிகாரிகளிடம் நடிகர் சந்திர குமாரையும், நடிகை சரோஜாவையும் ஒப்படைத்து விட்டு வந்திருக்கிறேன். நான் பிளேனில் வந்துவிட்டேன்! போலீசார் அவர்களைக் கொண்டு வருவார்கள்.

ஒரு ஓட்டலில் அவர்கள் தங்கியிருந்த அறைக்குப் பக்கத்து அறையில் தங்கியிருந்தேன்! சன்னல் சாவியை விட்டு அவர்கள் அறையைத் திறந்து அங்கே டேப்ரிகார்டரை வைத்தேன். அதிலும் அவர்கள் பேசிக் கொண்ட அந்த முக்கியமான விஷயங்கள் பதிவாகியிருக்கின்றன!

லப்பர் பார்க்கிலே அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை நான் பிச்சைக்கார வேஷத்தில் சென்று கவனித்தேன்! அவர்கள் பெங்களூர் சென்றிருக்கிறார்கள் என்பதை டாக்ஸி டிரைவர் கலியமுதன் தான் என்னிடம் கூறினான், படவுலகப் பிரமுகர்கள் இருவர் அவன் டாக்ஸியிலே ஏறிய போது அவர்கள் இரகசியமாகப் பேசிக் கொண்ட வார்த்தைகளில் இருந்து அவன் அதைப் புரிந்து கொண்டானாம்."

"மற்றொரு முக்கியமான விஷயம்! நான் செங்கற்பட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று தெரிந்து வந்திருக்கிறேன். இது பிரமீளாவுக்கும் இன்ஸ்பெக்டருக்குங்கூடத் தெரியாது" என்று ஆரம்பித்தார் துரை.

ஆர்வ மிகுதியோடு கேட்டுக் கொண்டிருந்தனர் மற்றவர்கள்.

"போய்க் கோயிலில் இறந்து போன நால்வரும் சந்திரகுமார்—சரோஜா ஆகியவர்களின் கையாட்களே! அந்த நால்வரின் உதவியால் தான் அவர்கள் துரோகத்தனத்தைச் செய்தனர். ஆனால் துரோகத்தனத்தைப் போல பதுமை வைத்துத் தான் அவர்களால் செய்ய முடிந்தது!"

"இதை எப்படி நிரூபிக்கிறீர்கள்?" என்றார் கமிஷனர்.

"அந்த நால்வரிலே ஒருவனுக்கு ஆங்காரம் துணைச் சென்று விட்டு ஸ்டேஷனில் இருந்த படங்களைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன். அவை பிரேத பரிசோதனைக்கு முன் எடுக்கப்பட்ட படங்கள்! அந்த ஆங்காரி நடத்தையைத் திரையுலகம் பங்களாவின் மகன் கவரிலே நாங்கள் கண்டோம். இது இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமிக்கும் தெரியும். இவைகளை விட முக்கியமான குறை என்னவென்றால் அந்த நால்வரும் சேலம் ஸ்டண்ட் குழுவைச் சேர்ந்தவர்கள். ஆனால் பழவேலி மக்கள் அவர்களைக் கொள்ளைக்காரர்கள் என்று எண்ணிக் கொண்டு விட்டனர்."

"அந்த நால்வரும் போய்க் கோயிலில் இறந்து கிடந்த விதம்....?"

"தங்கள் வேலை முடிந்து விட்டது! இரகசியத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்! ஆகவே அவர்களைத் தந்திரமாக ஒழித்துக் கட்டி விட்டனர் அவர்கள். நான் அந்த நால்வரையும் கொன்றிருக்க வேண்டும் என்று நான் சொல்வதற்கு ஒரு முக்கிய காரணமும் இருக்கிறது! அதுவும் செங்கல்பட்டு இன்ஸ்பெக்டர் சொன்ன விஷயங்களிலிருந்து யூகித்துக் கொண்டது தான்!

அதாவது போய்க் கோயிலிலே திரைப் பிடிக் குண்டுகள் கிடந்தனவாம். சில சிகரெட் துண்டுகளையும் இன்ஸ்பெக்டர் காட்டினார்; அவை சந்திரகுமார் உபயோகிக்கும் சிகரெட்டுகளாகவே இருந்தன! ஆகவே என் யூகம் வலுப்பட்டது.

பெங்களூரில் இவர்கள் பேச்சிலே போக்காக இந்த விஷயம் எனக்குப் புலப்படவே தான் நான் சந்தேகப்பட்டு பெங்களூரை விட்டுப் புறப்பட்டு மீனம்பாக்கத்தில் வந்து விமானத்திலிருந்து இறங்கி நேராகச் செங்கல்பட்டுக்குச் சென்றேன்" என்றார் துரை.

அப்போது—செல்வமணியுடன் ஹெட் கான்ஸ்டேபிள் இராமசாமி அங்கு வந்து நின்றார்.

"என்ன மிஸ்டர் செல்வமணி! நீங்கள் இன்னும் செல்வமணியாகவே இருக்கிறீர்! எப்போது திலோத்தமையாக மாறப் போகிறீர்கள்?" என்று கேட்டார் துரை.

அதிர்ச்சியடைந்து விட்டாள் செல்வமணி என்ற பெயரில் ஆணுடையில் இருந்த திலோத்தமை. தலை குனிந்து விட்டாள் அவள்.

அப்போது காரோட்டி கலையமுதனோடு அங்கே வந்தார் ஒரு கான்ஸ்டேபிள்!

"என்ன மிஸ்டர் கலையமுதன்! தெரியுமா சேதி? திலோத்தமை உயிரோடு கிடைத்து விட்டாள்!" என்றார் துரை

"என்ன? என் தங்கை கிடைத்து விட்டாளா?" என்று தன்னை மறந்து ஆச்சரியப்பட்டான் கலையமுதன்.

"என்ன? திலோத்தமை உன் தங்கையா?" என்று கூறிக் கொண்டே ஆச்சரியத்தோடு செல்வமணியை நோக்கினார் துரை. அனைவரும் மேலும் வியப்பில் ஆழ்ந்தனர்.

"என் அண்ணன் தான் கலையமுதன்!" என்று செல்வமணி வெறுப்பாகச் சொன்னபோது, செல்வமணியைப் பார்த்து ஒன்றும் புரியாது விழித்தான் கலையமுதன், அப்போது செல்வமணி தன் தலை டோபாவையும் அரும்பு மீசையையும் எடுத்து விட்டுத் திலோத்தமையானாள். அப்போதும் ஒன்றும் புரியாது விழித்தான்.

"அது சரி திலோத்தமை!, நீ ஏன் உன் அண்ணன் கலையமுதன் மீதே சந்தேகப்பட்டாய்?" என்று கேட்டார் துரை.

"கலையமுதன் எனக்கு அண்ணன் தான் ஆனால்! என் நலத்தில் அக்கறை கொண்டவரல்ல அவன். நான் முழுமனத்தோடு, மகிழ்வோடு, மனம் போனபடி இச்சையாக நடந்து கொள்ள எனக்கு இந்தக் கலையமுதன் தடையாக இருந்தான். மேலும் ஒரு டிரைவரை என் அண்ணன் என்று சொல்லிக் கொள்ள எனக்கு வெட்கமாயிருந்தது.

எப்படியோ இவன் என் அண்ணன் என்று புரிந்து கொள்ளாமல் ஆரம்பத்தில் வேலைக்கு வைத்துக் கொண்டேன்! பிறகு தான் புரிந்து கொண்டேன். இவன் என் பெரியப்பா மகன் கலையமுதன் என்பதை. ஏதோ சூழ்ச்சிக்காகத்தான் அவன் என்னிடம் டிரைவராக வேலைக்கு வந்திருக்கிறான் என்று கருதினேன். ஆகவே

அவனைக் காணும் போதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது!" என்றாள் திலோத்தமை.

"என்ன மிஸ்டர் கலையமுதன்! உங்களுக்கு அப்படிப் பட்ட எண்ணம்...?" என்றார் துரை

"துளியும் இல்லை ஸார்! என் தங்கை சரஸ்வதிதான் திலோத்தமா என்ற பெயரிலே திரையுலகில் ஜொலிக்கிறாள் என்பதறிந்தேன். சுற்றத்தார் யாரும் அவளைச் சூழ்ந்திருக்கவில்லை என்பதையும் தெரிந்து கொண்டேன். ஆகவே, அண்ணன் என்ற முறை கொண்டாடாமல் ஒரு டிரைவர் என்ற முறையில் அவளுக்குத் துணையாக முடிந்த வரையில் உறுதுணை பலமாக இருக்க விரும்பினேன்.

அவள் மீது எனக்குள்ள சகோதரப் பாசத்தினால்தான் அந்த வஞ்சகர்களும் சூழ்ச்சிக்காரர்களும் விழுங்கி விடாமல் பாதுகாக்க நானே அவளுக்குத் துணையாக—டிரைவராக மாறினேன்" என்று கூறிக் கண் கலங்கினான் கலையமுதன்.

அவனுக்கிருந்த சகோதரப் பாசத்தை அறிந்து அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர். திலோத்தமை அப்போதுதான் கலையமுதனை நன்றாகப் புரிந்து கொண்டாள் என்பதை அவள் தெளிவான முகம் காட்டியது.

"அண்ணா! நான் உங்களைப் புரிந்துகொள்ளாமல் அலட்சியப் படுத்தி விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். அண்ணா! நீங்கள் என்னை விட்டுப் பிரிந்த பிறகுதான் டாக்டர் இரு வஞ்சகர்கள் என்னைக் கொல்லத் துணிந்து வந்தார்கள். அப்போது என் மனமிருந்த நிலையில் அது உங்கள் ஏற்பாடுதான் என்று எண்ணிவிட்டேன். இவ்வளவு அற்பப் புத்தி படைத்த எனக்கு நீங்கள் காட்டிய பற்றும் பாசமும் புரியவே இல்லை. ஆகவேதான் எனக்கு இந்தக் கதி..." என்று கண்ணீர் சொரிந்தபடி கூறிக் கொண்டிருந்தாள் திலோத்தமா.

கலையமுதனும் அப்பாதுரையும் அவளைத் தேற்றிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது—சந்திரகுமார், சரோஜா ஆகியவர்களை அழைத்துக் கொண்டு போலீஸ் அதிகாரிகள் சிலர் அந்த அறைக்குள் நுழைந்தனர்

சந்திரகுமாரைக் கவனித்துவிட்ட திலோத்தமா, "ஆ!—சந்திரகுமார்" என்று தன்னை மறந்து அலறினாள்!

குரல் கொடுத்தவளை நிமிர்ந்து நோக்கிய சந்திரகுமாரும் சரோஜாவும் ஒரே நேரத்தில் ஆச்சரியப்பட்டனர்.

"திலோத்தமா! நீ சாகவில்லையா?" என்று ஆச்சரிய மிகுதியோடு கேட்டாள் சரோஜா.

"திலோத்தமா எதற்காகச் சாக வேண்டும் சரோஜா?" என்று கூறிக் கொண்டே நாற்காலியை விட்டு எழுந்து அவள் அருகே வந்தார் துரை.

அவள் பயந்து உடல் நடுங்கினாள். அவள் நிலையைக் கண்டு இலேசாகச் சிரித்தார் துரை.

"என்ன மிஸ்டர் சந்திரகுமார்! சரோஜாவுக்கு நடுக்கத்தைப் பார்த்தீர்களா? நீங்கள் இருக்கும்போது அவள் ஏன் நடுங்க வேண்டும்" என்று கேட்டார் துரை.

சந்திரகுமார் மௌனமாகவே இருந்தான்.

"என்ன சொல்கிறீர்கள் சார்?" என்று புரியாததால் கேட்டாள் திலோத்தமா.

"உனக்கு இன்னும் புரியவில்லையா திலோத்தமா? உன்னைக் கொன்றவர்கள்... அதாவது உன்னைப் போன்ற உருவ அமைப்போடு உன் படுக்கை அறையிலே கிடந்த பதுமையைக் குத்தியவர்கள் இந்த வஞ்சகர்களின் கையாட்கள் தான்" என்று ஆத்திரமாகக் கூறினார் துரை.

"என்ன? சந்திரகுமார் என்னை......"

"ஆமாம்! உங்கள் காதலன் சந்திரகுமார்தான் உங்களை ஒழிக்க இரண்டு அடியாட்களை ஏவி விட்டான். பிறகு அந்த இரண்டு அடியாட்களையும் அவர்கள் கூட்டாளிகள் இருவரோடு சேர்த்து நான்கு பிணங்களாக்கி விட்டார்கள் பெரிய கோவிலிலே!"

"சந்திரகுமார்! நான் உங்களை உண்மையாகக் காதலித்தேனே! நீங்களா இவ்வளவு கொடியவர்களா? நீங்கள் ஏன் என்னைக் கொல்ல வேண்டும்?"

திலோத்தமாவுக்கு அழுகையும் ஆத்திரமும் பீறிட்டுக் கொண்டு வந்தன.

சந்திரகுமாரும் சரோஜாவும் நடுங்கிக்கொண்டு மௌனமாகவே இருந்தனர்.

"உங்களைக் கொன்று தீர்த்தால்தான், சினிமா பீல்டிலே சரோஜாவுக்கு மீண்டும் சூடு பிடிக்கும் என்ற எண்ணம் அவளுக்குப் பட்டது. சந்திரகுமாரின் பழைய காதலி சரோஜா. அவள் சந்திரகுமாரிடம் எண்ணத்தை வெளியிட்டு வேண்டிக் கொண்டபோது சந்திரகுமாரின் மூளை வேறு விதத்தில் செயலாற்றத் தொடங்கி விட்டது.

அதாவது சரோஜாவின் திட்டப்படி திலோத்தமாவை ஒழித்து விடுவது! பிறகு—தன் திட்டப்படி சரோஜாவின்

COMICS PDF TIMES

பல லட்சம் பெறுமான முன்ன சொத்துக்களைச் சூறையாடுவது..." என்று கூறிக்கொண்டே போனார் துரை.

"இவ்வளவும்....." என்று குறுக்கிட்டார் கமிஷனர்

"என் யூகம்!" என்றார் துரை.

"இப்படித்தானா சந்திரகுமார்?" என்று சந்திரகுமாரிடம் கேட்டார் கமிஷனர்.

"ஓரளவு இப்படித்தான்" என்றான் சந்திரகுமார் விரக்தியாக.

"அவர்களை ஏன் இப்போது கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? வழக்கு மன்றத்திலே வெட்ட வெளிச்சமாகி விட்டுப் போகிறது" என்றார் துரை.

"அது சரி, திலோத்தமாவின் படுக்கைமீது பதுமை எப்படி வந்தது?" என்று கேட்டார் கமிஷனர்.

திலோத்தமாவே பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

"என் அண்ணாவை ஆரம்பத்தில் புரிந்து கொள்ளாததால்தான் அந்த மாதிரி நடந்துகொண்டேன். அதுவே என் உயிரைக் காப்பாற்றும் நிலைக்கு வந்ததை அறிந்து இப்போது மகிழ்ச்சி அடைகிறேன். என் புத்தியை நானே மெச்சிக் கொள்கிறேன்.

நான் கதாநாயகியாக நடித்த 'ஆலை மாற்றும் அமுதே' என்ற படத்தில் கதாநாயகனான சிற்பி என்னைப்போல் ஒரு பதுமை செய்கிறான். அந்தக் காட்சியை நீங்களும் படத்தில் பார்த்திருப்பீர்கள். படம் எடுத்து முடித்து வெளியானதும் அந்தப் பதுமையை நானே பட முதலாளியிடம் கேட்டு வாங்கிக் கொண்டேன்.

என் அண்ணா ஏதோ சூழ்ச்சி செய்து என்னை ஏமாற்றப் போகிறார் என்ற தவறான எண்ணம் எனக்கிருந்ததால், ஒரு வேளை அவர் என்னைக் கொலை செய்வார் என்றெண்ணி ஒவ்வொரு இரவும் அந்தப் பதுமையைப் படுக்கையில் கிடத்தி நான் படுக்கையின் கீழோ அல்லது வேறு அறையிலோ படுத்துக் கொள்வது வழக்கம்.

என்னைக் கொல்ல இருவர் வந்த அன்றைய தினம் நான் பதுமையின் பக்கத்தில் படுத்திருந்தேன். அவர்கள் வந்ததை ஜீரோவாட்டின் மங்கலான வெளிச்சத்தில் புரிந்து கொண்டேன், மெல்ல அசைந்து படுக்கையின்

அடியில் போய்ப் பதுங்கிக் கொண்டேன். நான் எதிர் பார்த்தது போலவே அந்த இருவரும் பதுமையை நானென்று எண்ணிக் கத்தியால் குத்தினர்.

அவர்கள் குத்திய அதே சமயம் படுக்கையின் கீழ் பதுங்கியிருந்த நான், 'ஆ! அம்போ! அம்மா!' என்று மரண ஓலமிட்டேன்! அவர்கள் ஓடி விட்டனர்! எனக்கு ஒரு யோசனை தோன்றியது! பதுமையைத் தூக்கிக் கொண்டு போய் பக்கத்து அறையில் மறைத்து வைத்துப் பூட்டினேன். என் கையைப் பிளேடினால் கீறி படுக்கையிலே இரத்தம் சிந்த வைத்தேன். பிறகு யாரும் அறியாத படி ஆண் குரலில் போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் செய்தேன். பிறகு ஒருவருக்கும் தெரியாதபடி செல்வமணி யானேன்.

போலீசுக்கும் கலியமுதன் மீது சந்தேகம் ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தில் துப்பறியும் துரையை அணுகி, நான் செல்வமணி என்றும் திலோத்தமையின் இரகசியக் காதலன் என்றும் கூறினேன்! என்னை நம்ப வைப்பதற்காக ஒரு லட்சம் ரூபாய் அவர்களிடம் ரொக்கமாக கொடுத்து வைத்துள்ளேன்.

ஆண் குரலில் பேசுவதும் ஆணாக நடிப்பதும் திரையுலகில் நான் அனுபவப் பட்டவை! என்னைக் கொல்ல முயன்ற கலியமுதனைப் போலீசில் பிடித்துக் கொடுத்து விட்டு பிறகு என்னைப் பற்றியும், நான் தப்பித்துக் கொண்ட விதத்தையும் போலீசாருக்குக் கூற இருந்தேன். ஆனால் கதை நான் எதிர்பார்த்தது போலில்லாமல் வேறு விதமாகத் திரும்பி விட்டது! அன்று பகல் கூட நானும் சந்திரகுமாரும் எங்கள் காதல் உறவைப் பற்றி அந்த ஓட்டலில் கதை உரைப்பாக அமர்ந்திருக்கிறோம்.

திலோத்தமா தன் காதலன் செய்த துரோகத்தால் கலங்கினாள். சரோஜாவும் சந்திரகுமாரும் சிக்கி விட்டோமே தப்புவ தெவ்வாறு என்று எண்ணிக் கலங்கினர்.

"நான் செல்வமணியைத் தேடிச் சென்ற போது அங்குத் திலோத்தமை பெண்ணாகவே இருந்தாள்" என்றாள் பிரவீணா.

"ஆனால் என்னைத் தேடி வந்த பிரவீணா தான் ஆணாக மாறி வந்தாள்!" என்றாள் திலோத்தமை.

"உங்களுடைய வழியை நானும் கையாண்டேன். நானும் ஆணாக மாறிய பெண்ணாகவே வந்து உங்களைக் கண்டு பிடித்து விட்டேன்!" என்றாள் பிரமீளா.

"நாளைக்குத் தினத்தாள்களில் 'ஆணாக மாறிய பெண்' என்ற தலைப்பில் திலோத்தமையின் பெயரோ அல்லது பிரமீளாவின் பெயரோ அல்லது இருவர்களது பெயர்களுமோ அடிபட்டு விடப்போகின்றன. மெள்ளப் பேசுங்கள்!" என்றார் துரை.

அனைவரும் அவரது ஹாஸ்யத்தைப் புரிந்து கொண்டு சிரித்தனர். சிரிக்காமலிருந்தவர்கள் இருவர்.

சரோஜா, சந்திரகுமார் ஆகிய இருவர்களுடைய நான்கு கரங்களிலும் இரும்புக் காப்புகள் ஏறின.

திலோத்தமை தன் பெரியப்பா மகன் சகல முதனுடன் தன் 'திரையுலகப்' பங்களாவுக்குப் புறப்பட்டாள், அனைவருக்கும் நன்றி கூறிவிட்டு.

"என் வேலை முடிந்தது சரி! ஆனால் பாவம், அந்த நாடக நடிகன் மணி பயந்தோடு எங்கு மறைந்து வாழ்கிறானோ?" என்று கூறி அனுதாபப் பட்டார் துரை.

பிறகு —

கமிஷனரிடமிருந்தும் இன்ஸ்பெக்டரிடம் இருந்தும் விடை பெற்றுக் கொண்டு தமது 'அருள்' இல்லத்துக்குப் பிரமீளாவோடு திரும்பினார், துப்பறியும் சிங்கம் அப்பாத்துரை.

- நிறைவு -

COMICS
PDF TIMES

# செய்திக் கொத்து

—கே. ஜெயராமன்—

ஜனவரி 27ந் தேதியன்று குடியரசு தினவிழா இந்த ஆண்டு மிக எளிய முறையில் கொண்டாடப்பட்டது. புயல் வெள்ளப் பாதிப்பினால் இந்த ஆண்டு கோலாகலமாகக் கொண்டாட முடியவில்லை. ஒவ்வொரு ஆண்டும் ஆளுநர் ராஜ் பவனில் நடைபெறும் விருந்தும் ரத்து செய்யப்பட்டது.

---

## திரைப் புதிர்

---கே. ஜெ. ராம்ஜி---

ஜனவரி மாதம், 'திரைப் புதிர்' விடைகள்:

1. சிவாஜிகணேசன் பெண் வேடத்தில் நடித்த படம் குங்குமம்
2. எம்.ஜி.ஆர். முருகன் வேடத்தில் ஒரு படத்தில் நடித்திருக்கிறார். படம் தனிப்பிறவி.

ஜனவரி மாத திரைப் புதிருக்கு ஏராளமான பதில் கடிதங்கள் வந்துள்ளன. போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் வாழ்த்துக்கள். குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அதிர்ஷ்டசாலிகள்:

(1) ஆ. ராஜி பழையபேட்டை, குற்றாலம் ரோடு. திருநெல்வேலி. (2) சே. கே. ஆர். சந்திரன் (ஆர். எஸ். ரால்) 20/2எ கீழ்ப்பாக்கம் கார்டன் ரோடு. சென்னை-10. (3) திரைப்பட பிரியன் ஜி. சாலமன் சுந்தர்ராஜ். பலனி பேட்டை.

பிப்ரவரி மாதத்திய திரைப் புதிர்:

(1) எம். ஜி. ஆர்., (2) லதா, (3) ஜெய்சங்கர், (4) ஸ்ரீப்ரியா, (5) ஜெயகணேஷ்.

இவர்கள் சிவாஜி கணேசனோடு நடித்த முதல் படம் மட்டும் வரிசை எண்படி எழுதுங்கள்.

சரியான விடைகளை வருகிற பிப்ரவரி பதினைந்தாம் தேதிக்குள், 'திரைப் புதிர், துப்பறியும் கலை, தபால் பெட்டி எண் 659, சென்னை-14' என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் தீர்ப்பே முடிவானது. சரியான விடை எழுதும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியாகும்.

த. பெ. எண் : 659 போன் : 841996

# துப்பறியும் கலை

13. ஸ்ரீ கிருஷ்ணபுரம் சென்னை-14.

மலர் 6 | பிப்ரவரி '78 | இதழ் 12

## வாசகர் கடிதம்

ஜனவரி மாத துப்பறியும் கலை வெகு ஜோர். அதற்குக் காரணம் எஸ். என். கே. ராஜன் எழுதிய முழு நாவல் இடம் பெற்றதே. கதையில் ஓரிடத்திலும் போரடிக்காமல் இருக்கும்படி முழு நாவலை எழுதிய ஆசிரியர் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

கே. கண்ணகி
சென்னை-29.

ஜனவரி மாதம் வெளி வந்த எஸ். என். கே. ராஜன் எழுதிய நாவல், எல்லா கதைகளையும் விட மிக அருமையாக இருந்தது. ஆசிரியருக்கு என் பாராட்டுக்கள்

எஸ். கோவிந்தராஜன்.
விஜயபுரம் [வடக்கு]

இந்த மாதம் வெளி வந்த நாவல் எல்லா நாவல்களை விட மிக அருமையாக இருந்தது. ஆசிரியருக்கு என் பாராட்டுக்கள்.

ஐ. ராஜு.
பழையபேட்டை.

## இந்த இதழில்...

திரையுலகில் மர்மம்
—சரஸ்வதி அமுதன்

செய்திக் கொத்து
--கே. ஜெயராமன்

சினிமா செய்தி
--கே. ஜெ. ராம்ஜி

## சந்தா விபரம்

1 ஆண்டுக்கு ரூ 12-00

6 மாதம் ரூ. 6-00

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்பதில்லை.


விபரங்கட்கு :

வாசு பிரசுரம்
சென்னை - 600014.

COMICS PDF TIMES

THUPPARIYUM KALAI" REGD NO. 9038

# அதிர்ஷ்ட சாஸ்திரம்




உங்கள் பிறந்த தேதியைக் கொண்டே உங்கள் வாழ்க்கையின் ரகசியங்களை இந்நூலின் மூலம் விளக்கமாக அறியலாம்

உங்கள் அதிர்ஷ்டம் எப்பொழுது?

அதிர்ஷ்டம் தரும் தொழில் எது?

அதிர்ஷ்டம் தரும் பெயர் எது?

அதிர்ஷ்டத்தை நாடுவது எப்படி?

திரைப்படத்திற்கு என்னபெயரிட்டால் வெற்றியாகும்?

குதிரைப்பந்தயத்தில் வெற்றி காண்பது எப்படி?

குடும்பவாழ்க்கையைத் திருப்தியுடன் அமைப்பது எப்படி?

உங்கள் அதிர்ஷ்ட நாட்கள் எவை எவை? நிறங்கள் எவை? நவரத்தினங்கள் எவை?

வழக்கு, காதல், பரிட்சைகளில் வெற்றி பெறுவது எப்படி?

உங்கள் வாழ்வில் எந்தத் துறையில் எப்படி வெற்றியடைவீர்கள்?

விலை - ரூ. 10-00

என்ற விஷயங்களும் இன்னும் பலவும் விளக்கமாக இந்நூலில் எழுதப்பெற்றிருக்கின்றன.

T. Rajan

## வாசு பிரசுரம் :: சென்னை - 14